# கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...




ALKI | 12.12.2010 | ₹ 10.00 | 132 பக்கங்கள் | www.kalkionline.com

சேலத்துல
ஏலத்துக்குத் தடா

தயாநிதிக்குத்
தகவல் கொடுங்க!

சொக்க வைக்கும்
சிற்ப மங்கலம்!

றப்புப் போட்டி!

சலம் மாவட்ட
ஸ்பெஷல்-II



இணைப்புப் புத்தகம் :

ONA COLLEGE OF
TECHNOLOGY
வழங்கும்

சாக்கத் தங்கம்
சோனா!

கௌதம் மேனனைக்
கவர்ந்த கண்கள்!



சைபால் எல்லோர் வீட்டிலும் இருக்க வேண்டிய ஒன்று
இதம் தந்து
ரணம் ஆற்றும்...
70
FOR EXTERNAL USE ONLY
SAIBOL
for Cuts, Itches, Boils, Eczema, Scabies, Pimples Etc. Etc.
சைபால்
BEST SKIN OINTMENT
எரிச்சல் தரும் வெட்டுக்காயத்தின் மேல் சைபால் தடவுங்கள். எரிச்சலைப் போக்கி இதம் தரும். காயம் இருந்த சுவடே காணாமல் போகும்.
★ வெட்டுக்காயம் ★ முகப்பரு ★ சேத்துப்புண் ★ தேமல் ★ வேனல்கட்டி ★ பித்தவெடிப்பு முதலிய வியாதிகளுக்கு சிறந்தது.
உரிமையாளர் : சைபால். S. சங்கரநாராயணன்
Mfrs. : THE SOUTH INDIAN MFG. CO., MADURAI-20. Ph : 2534108

# கல்கி

12.12.2010



விஷத்தைக் கக்கும் கருணாநிதி!



ஓ - ஞாநி பக்கங்கள் 18



காதல்... கல்தோசை... கங்க்ராட்ஸ்...

- அஜித் ரகசியம் 90

சேலம் மாவட்டச் செய்திகள்:
கதிர்பாரதி, ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

## சேலம் ஸ்பெஷல்





அடுத்த இதழ்
மியூசிக் ஸ்பெஷல்!

மத்திய - மாநில அரசுகளின் மக்கள் விரோதக் கொள்கைகளையும் ஊழல்களையும் கண்டித்து, தமிழகம் முழுவதும் ஐயாயிரம் தெரு முனைக் கூட்டங்களை நடத்த இருக்கின்றன கம் யூனிஸ்ட் இயக்கங்கள்...

''குறிப்பாக அலைவரிசை ஊழல் பற்றி பட்டிதொட்டி எங்கும் பிரசாரம் செய்வோம்,'' என்கிறார் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.ரெங்க ராஜன்.

**எங்களைவிட்டு கம்யூனிஸ்டுகள் ஏன் போனார்கள் என்று கருணாநிதி கேட்கிறாரே?**

''கருணாநிதி போன்ற அரசியல் தலைவர்கள் இதுபோன்று கேட்பதே விநோதம். ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் முதல் பதவிக் காலத்தில் இடது சாரிகள் ஆதரித்தோம். அப்போது அணு சக்தி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் காங்கிரஸ் மிகத் தீவிரமாக இருந்ததால் நாங்கள் வெளியேறினோம். ஆனால், தி.மு.க. வெளியேறவில்லை. இதுதான் எங்கள் பிரிவுக்குக் காரணம். தவிர, பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம், தமிழகத்தில் தேர்தல் வாக்குறுதியின்படி இலவச நிலம் கொடுக்காதது ஆகியன கூடுதல் காரணங்களாகும். இதுபற்றி கருணாநிதிக்கே தெரியும்.''

**நானும் ஒரு கம்யூனிஸ்ட் என்கிறாரே கருணாநிதி?**

''மனிதாபிமானம் உள்ளவர்கள் எல்லோரும் கம்யூனிஸ்ட்கள் அல்ல. சில பிரத்யேகக் கொள்கைகளையும் கடைபிடிக்க வேண்டும்.''

**மீண்டும் தி.மு.க. அணி?**

''காங்கிரஸ் இருக்கும் எந்தக் கூட்டணியிலும் நாங்கள் இருக்க மாட்டோம். தேர்தல் நேரத்தில் முடிவு செய்வோம்.''

**ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் ஜெயலலிதா காங்கிரஸுக்கு ஆதரவு கரம் நீட்டினாரே ?**

''இது சரியல்ல

# ஜெ., செய்தது சரியா?



■ டி.கே.ரெங்கராஜன்

என்பது எங்கள் கருத்து. இதை எங்கள் கட்சிக் கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றியிருக்கிறோம். காரணம், அ.தி.மு.க.வுடன் தோழமையோடு இருக்கிறோம். அவர்களோடு இணைந்து பல போராட்டங்களையும் மத்திய - மாநில அரசுகளை எதிர்த்து நடத்தியிருக்கிறோம். இந் நிலையில் ஜெ., காங்கிரஸுக்கு ஆதரவு தெரிவித்ததை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?''



**காங்கிரஸோடு ஜெ. சேர்ந்தால் அ.தி.மு.க.வை விட்டு விலகுவீர்களா?**

''இப்போது அ.தி.மு.க. கூட்டணியில் இருக்கிறோம். எனவே இதுபோன்ற கேள்விக்கே இடமில்லை. எங்கள் கருத்தைச் சொன்னதோடு அந்த விவகாரம் முடிந்துவிட்டது.''

**ஆ.ராசா, தலித் என்பதால் பழி வாங்கப்படுகிறார் என்கிறாரே கருணாநிதி?**

''தாம் தவறு செய்யும்போதும் தம் தரப்பு வாதம் பலவீனமாக இருக்கும்போதும் சாதியத்தைக் கையிலெடுப்பது கருணாநிதியின் வாடிக்கை. இந்த உளுத்துப்போன விதண்டாவாதம் இனி தமிழகத்தில் எடுபடாது!''

**காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணி பிரிந்தால் மதவாத சக்திகள் உள்ளே நுழையும் ஆபத்து இருப்பதாக கருணாநிதி சொல்கிறாரே?**

''கருணாநிதி இதைச் சொல்வது நல்ல வேடிக்கை. கருணாநிதி எங்கிருக்கிறாரோ அங்கு மதவாத சக்திகள் நுழையாது என்று சி.சுப்ரமணியம் சொன்னதாக கருணாநிதி பெருமையடித்துக் கொள்வார். ஆனால், 1999ல் பா.ஜ.க.வுக்குத் தோள் கொடுத்தவர் இதே கருணாநிதிதான். அப்படியிருக்க, காங்கிரஸ் பிரிந்து போய்விடுமோ என்ற பயத்தில் இப்படியெல்லாம் பேசக் கூடாது! இவர் தனியாகவே மதவாத சக்திகளை எதிர்த்து நிற்கலாமே!''

- ப்ரியன்


# கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
**லக்ஷ்மி நடராஜன்**

ஆசிரியர் : சீதா ரவி

பொறுப்பாசிரியர்:
**ஆர்.வெங்கடேஷ்**

உதவி ஆசிரியர்கள்:
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு:
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு:
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு:
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு:
044 - 4343 8844
sales@kalkiweekly.com


இன்டர்நெட் முகவரி:
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்):
உள்நாடு : ₹ 500/-
வெளிநாடு : ₹ 3,800/-

கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.




‘‘சேலம் மாநகராட்சியில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் டெண்டர் ஏலம்விட அதிகாரம் இல்லை. ஒரு கோடி ரூபாய்க்கு மேல் உள்ள அத்தனை ஏலங்களையும் தலைமைச் செயலகத்துலதான் விடறாங்க. இந்த நடைமுறை தமிழகத்துல வேறெந்த மாநகராட்சியிலேயும் கிடையாது. காரணம், அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தோட அதிகார துஷ்பிரயோகம்தான்'' என்கிறார் சேலம் மாவட்ட மேற்குத் தொகுதி அ.தி.மு.க. கழகச் செயலாளர் கே.சி.செல்வராஜு.

‘‘சேலம் மாநகராட்சியோட முக்கியமான பிரச்னையே குடிதண்ணீர் தட்டுப்பாடுதான். 2006 சட்டமன்றத் தேர்தல் வாக்குறுதியில் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம், சேலம் நகரத்துக்கு மேட்டூர்லேர்ந்து தண்ணீர் கொண்டு வர, மேட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தித் தாகம் தீர்ப்பேன்னு சொன்னார். ஆனால், 2010லதான் அந்தத் திட்டத்துக்கு டெண்டர் கொடுத்திருக்கிறதா சொல்றாங்க சேலம் மேயர் ரேகா. இன்னும் எத்தனை வருஷத்துக்கு இந்தத் திட்டத்தை வெச்சே ஏமாத்தப் போறாங்கன்னு தெரியலை. சேலம் மாநகராட்சில நடக்கற எந்த ஏலத்துக்குள்ளும் இண்டர்நேஷனல் காண்ட்ராக்டர்களை ஆளுங்கட்சி ஆட்கள் விடறதில்லை. அப்புறம் எப்படி சேலத்துக்கு வளர்ச்சி வரும்? ஒரு கோடி ரூபாய்க்குள்ள ஏலம் எடுத்து வேலையை முடிச்சவங்களுக்குக்கூட ஒன்றரை வருஷமா பில் சாங்ஷன் ஆகாம நிலுவையில இருக்கு. குடிதண்ணீர் தட்டுப்பாட்டுக்கும் அடுத்ததா பெரிய பிரச்னை கொசுத் தொல்லைதான். அதைப் பத்தி எங்கள் பொதுச் செயலாளர் சொன்னதின் பெயரில் சேலம் மாவட்ட அ.தி.மு.க. ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருந்தோம். அதுக்கு மேயர் ரேகா, ‘‘முன்னாள் முதல்வர் கொசு பற்றிப் பேசுவது நகைச்சுவையா இருக்கு''ன்னு கிண்டல் அடிச்சாங்க.

பாதியிலேயே தொங்கும் ஆனந்தா பாலம் பெரிய கதை. பாலம் வர்ற இடத்துல உள்ள ஆக்கிரமிப்புகளை எடுக்காம வேலை ஆரம்பிச்சுட்டாங்க. பட்டாக்காரங்க நிலம் தரமுடியாதுன்னு தகராறு பண்ணறாங்க. இதனால வேலை முடியாம பாலம், பாதியிலேயே தொங்குது. ஆக்ஸ்போர்டு ஸ்கூலேர்ந்து முதல் அக்ரஹாரம் வரைக்கும் போக்குவரத்து நெரிசலால் ஸ்தம்பிச்சுப் போய் நிற்பது சேலம் மாநகராட்சி அலட்சியத்தால்தான். இத்தனைக்கும் சேலத்தோட இதயப் பகுதி இது'' என்கிறார்.

‘‘சேலம் மாநகராட்சிக்குத் தேவையான அலுவலர் பணியிடங்கள் பல நிரப்பப்படாமலே இருக்கின்றன. பதினைந்து வார்டுக்கு மூணு ஜே.ஈ. இருக்கணும். ஆனால், சேலம் மாநகராட்சியின் அறுபது வார்டுக்கும் சேர்த்து

# சேலத்துல


● கே.சி.செல்வராஜு



* மேயர் ரேகா பிரியதர்ஷினி

இன்னும் ஒன்றரை வருஷத்துல முடிஞ்சுடும். ஆகஸ்ட் 2010ல ஆரம்பிச்ச இந்தத் திட்டத் தோட நோக்கமே 2040ஆம் வருஷம் வரைக்கும் சேலம் மாநகராட்சிக்குக் குடிநீர்த் தட்டுப்பாடு இல்லாம பாத் துக்கறதுதான். பழக்காரனூர், தொட் டில்பட்டி... ஊர்கள்ல வேலை முடிஞ்சிருச்சி. அடுத்து செல்வ ராஜ் இருக்கற சூரமங்கலம் பகுதிகளில் வேலை நடக்க இருக்கு. அப்புறம் இது மேட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கிடையாது. சேலம் மாநக ராட்சிக்குன்னு மேட்டூர்லேர்ந்து செயல் பட இருக்கும் தனிக்குடிநீர்த் திட்டம். இது தெரியாம அவர் குறை சொல்ல வந்துட்டார்'' என்று ஆரம்பத்திலேயே டாப் கியரில் பேசு கிறார் மேயர் ரேகா பிரியதர்ஷினி.

''183 கோடி ரூபாய்ல மாநகராட்சியில பாதாளச் சாக்கடைத் திட்டம், குஜராத்.

# ஏலத்துக்குத் தடா!

ரெண்டு ஜே.ஈ.தான் இருக்காங்க. இது பத்தி பேசி உரிய நடவடிக்கை எடுக்க சேலம் மாநகராட்சிக்கு எண்ணமில்லை. அவர் களுக்கு கமிஷன் தான் முக்கியம். நுகர்வோர் நீதிமன்ற உறுப்பினர், பனைமரத்துப்பட்டி ஒன்றிய தி.மு.க. செயலாளர், மாவட்ட பஞ்ச ாயத்துக் குழு உறுப்பினர்... இப்படிப் பல பொறுப்பிலிருக்கும் கே.சுரேஷ்குமார், கொலை வழக்கில் கைதானபோது அவரைச் சிறைக்குச் சென்று பார்த்து ஆறுதல் கூறு கிறார் மாநில அமைச்சர் வீரபாண்டி ஆறு முகம். சேலத்துல சட்டம் ஒழுங்கு எந்த லட்ச ணத்துல இருக்குங்கறதுக்கு இதைவிட வேறு சாட்சி தேவை இல்லை'' என்கிறார் செல்வ ராஜ்.

என்ன சொல்கிறார் மேயர் ரேகா பிரியதர்ஷினி?

''செல்வராஜ் வீட்டை விட்டு வெளியில வரவே மாட்டார் போல. அவர் சொல்ற குடி நீர்த் திட்டத்தோட வேலை ஆரம்பிச்சாச்சு.

ஆஞ்சியோ பயோடெக் நிறுவனத்தோட 20 கோடி ரூபாய்ல புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு தொண்ணூறு சதவிகிதக் கழிவுகளை உரங்களா மாத்துறோம். தென்னிந்தியாவி லேயே வேறெங்கும் இந்தத் திட்டம் கிடை யாது. 70 லட்சம் தமிழக அரசாங்கமும் 1 கோடி ரூபாய் மாநகராட்சியும் செலவு செய்து அதி நவீன காக்காயன் சுடுகாட்டை உருவாக்கி இருக்கிறோம். சுருக்கல், கோரிக்காமேடு, குமாரசாம்பட்டி, செவ்வாய்பேட்டை... போன்ற இடங்கள்ல அண்ணா மருத்துவமனை யைத் தொடங்கி இருக்கோம். அவர் சொன் னதுல சேலம் மாநகராட்சியில அதிகமான பணியிடங்கள் காலியா இருக்கு என்பது மட்டும்தான் உண்மை. அது சம்பந்தமா துணை முதல்வரிடம் பேசியிருக்கிறோம்'' என்றவரிடம், ''சேலம் மாநகராட்சியில ஒரு கோடிக்கு மேல டெண்டர் விடமுடியாதாமே?'' என்று கேட்டால், ''ஆமாம் அது அரசாணை'' என்கிறார் மேயர் ரேகா பிரியதர்ஷினி.



# மகிழ்ச்சி

எத்தனை நாளாயிற்று இப்படி ஒரு படம் பார்த்து. அக்கா - தம்பி பாசம்தான் கதை (நீல.பத்மநாபனின் தலைமுறைகள் நாவல்) அதைக் கூடிய மட்டும் அலுப்புத் தட்டாமல் தந்திருக்கிறார் இயக்குனர் வ.கௌதமன். வ.கௌதமன் - அஞ்சலி காதல் காட்சிகளின் போதெல்லாம், ஹே.... இந்த மாதிரி காதலை நாம் ஊர்லேயும் பார்த்திருக்கிறோமே... என்று மனத்துக்குள் ஃப்ளாஷ்பேக் ஓடுகிறது. அது தான் படத்துக்குப் பலமே! அக்காவாக கார்த்தி காவும், தம்பியாக கௌதமனும் நடித்திருக்கும் காட்சிகளிலெல்லாம் நமக்குள்ளும் நெகிழ்ச்சி ததும்புகிறது. நாஞ்சில் நாட்டில் நடக்கும் கதை என்பதால் காட்சிக்குக் காட்சி செழியனின் கேமராவில் பசுமைன்னா அப்படியொரு பசுமை. கௌதமனின் அப்பா பாத்திரத்தில் நடித்திருப்பவர், ஊர்ப் பெரிசுகள் என... பாத்திரங்களின் தேர்வில் இயக்குனரின் ஆளுமை பளிச்சிடுகிறது. விற்பனைக்குப் போகும் வயலின் நாற்றைக் கட்டிப்பிடித்து அழுகின்ற காட்சி ஒன்றே போதும் மண்ணின் நேசத்தை உணர்த்த! கஞ்சாக்கருப்புவின் காமெடி, சீமானின் நடிப்பு... படத்துக்குப் பக்க பலம். இசையும் (வித்யாசாகர்) திரைக்கதையும் கதம்பமாக மணக்கின்றன. ஆங்காங்கே தலை தூக்கியிருக்கும் வியாபாரத் தனங்களைக் கவனமாக ஒதுக்கியிருந்தால் மகிழ்ச்சி இன்னும் கூடுதலாகி இருக்கும்.

மகிழ்ச்சி - மண் வாசம்.



# நந்தலாலா

அம்மாவை அறைய வேண்டும் என்று மனநிலை முதிராத ஒருவனும், அம்மாவுக்கு முத்தம் தர வேண்டும் என்று பள்ளிச் சிறுவனும் அவரவர் அம்மாவைத் தேடிப் பயணமாவதுதான் கதை. (இருவரும் சிறுவயதில் அம்மாவைப் பிரிந்தவர்கள்) ஆனால், இருவருக்கும் காலம் அறை கொடுக்கிறது என்பது க்ளைமாக்ஸ். அவர்கள் வழியில் சந்திக்கும் நபர்களின் தோள்களில் தொத்திக் கொண்டு பயணிக்கும் கதையில், நெகிழ்வும், கண்ணீரும், ரத்தமும், வெக்கையும் கலந்து வியாபிக்கின்றன. மனநிலை முதிராத பாஸ்கரமணி பாத்திரம் மிஷ்கினுக்கு என்றே உருவானதோ... அத்தனை கச்சிதம். சிறுவன் 'அகி'யும் ஏக்கத்தை முகத்தில் தூக்கி அலைகையில் மனசுக்குள் என்னவோ பிசைகிறது! கூடவே தொற்றிக் கொள்கிற ஸ்னிக்தாவும் நடிக்கத் தெரியும் என்பதை நிருபித்திருக்கிறார். கதையின் மொத்தச் சுமையையும் தம் பின்னணி இசையால் இளைய ராஜா நீவிக் கொடுப்பதால் அத்தனை சுமையும் பார்வையாளர் மனத்துக்குள் இறங்கி விடுகிறது. 'ஒண்ணுக்கொண்ணு துணை இருக்கு உலகத்துல' பாடல் ஜேசுதாஸின் குரலில் ஒலிக்கையில் ராஜாவின் ராஜபாட்டை விரிகிறது! மகேஷ் முத்துசாமியின் கேமராவில் அத்தனை இயல்பு. ஆற்றின் போக்கில் நெளியும் நாணலைப் படம் பிடித்திருப்பது அட்சர லட்சம். ஆனால், காட்சிக்குக் காட்சி இத்தனை ஸ்லோ ஏன்...? உண்மையிலேயே பாஸ்கரமணி பாத்திரம் மனநிலை பிறழ்ந்ததா? 'அகி' அவன் அம்மாவைப் பார்ப்பதோடு கதை முடிந்துவிடுகிறதே. அப்புறம் ஏன் நீள்கிறது...? இதுபோன்ற கேள்விகள் தொக்கி நிற்கத் தான் செய்கின்றன.

நந்தலாலா - செல்லுலாய்டு கவிதை.

**- மகிமைராஜன்**

இந்தியாவின் ஏழு புனித நதிகளுள் காவிரியும் ஒன்று. கர்நாடகா, குடகு மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பிரம்மகிரி குன்றுகளில், பாகமண்டலத்திலிருந்து எட்டு கி.மீ தூரத்தில் உற்பத்தியாகிறது காவிரி. தலைக்காவிரியிலிருந்து கிளம்பி வங்கக் கடலில் சங்கமமாகும்வரை மொத்தம் 800 கி.மீ. தூரம் பாய்ந்து வளம் கொழிக்கச் செய்கிறது. தமிழகத்தில் காவிரியின் குறுக்கே எழுந்து கம்பீரமாகக் காட்சியளிக்கிறது மேட்டூர் அணை.

* மேட்டூரில்தான் அணை கட்ட வேண்டும் என்கிற திட்டம் ஏன் எழுந்தது? அணை கட்டி முடிக்க எத்தனை ஆண்டுகள் ஆயிற்று? அதன் தொடர்ச்சியான பயன்கள்தான் என்னென்ன? போன்ற வினாக்களுக்கு விடை தேடி பயணித்தோம்.

* மிகச் சரியாக 1934 வரைக்கு முன்பாக, கட்டுக்கடங்காமல் பெருகிப் பாய்ந்த காவிரி நீரைத் தேக்கி வைத்துப் பயன்படுத்த, கரிகாலன் கட்டிவைத்த கல்லணைக்கும் மேலாகத் தமிழகக்

# மேன்மைமிகு மேட்டூர்!



காவிரியில் அணைகள் ஏதுமில்லை.

* பெருமழை, வெள்ளக்காலங்களில் பெருமளவு தண்ணீர், பயிர்களை அழித்து விட்டு, வீணாக வங்கக் கடலுக்குள் சென்று கலந்துள்ளது. தண்ணீரைத் தேக்கி வைக்கவும், முறையாகப் பாசனத்துக்குப் பயன்படுத்தவும், மின் உற்பத்தி பணிகளுக்குப் பயன்படுத்தவும் மேட்டூர் நீர்த்தேக்கம் கட்டியே ஆக வேண்டும் என்கிற முடிவு எடுக்கப்பட்டது.

* மேட்டூர் அணை கட்டுவதற்கென 1834 முதல் 1924வரை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அணை கட்டுமானப் பணி 1925ல் தொடங்கப்பட்டு, 1934ல் முடிவடைந்திருக்கிறது. நான்கு கோடியே எண்பது லட்ச ரூபாய் திட்ட மதிப்பீடு; வடிவமைத்துத் திட்டமிட்டு கட்டி முடித்தவர் பொறியாளர் கர்னல் எல்லிஸ்.





* சேவியர்

* இராமர் மலை; சீதா மலை. குறுக்கே மறித்துக் கட்டப்பட்டுள்ளது மேட்டூர் அணை. கட்டத் தொடங்குவதற்கு முன்பு வரைக்குமாக அப்பகுதியில் சுமார் இருபதுக்கிராமங்கள் இருந்துள்ளன.

* அணை கட்டப்படுவதற்கு முன்பாகவே, பெருமளவு மணலை அள்ளித் தந்துள்ளாள் காவிரித் தாய். மேட்டூர் அணைக் கட்டுமானத்துக்கான ஐம்பது சதவிகித அளவு மணல், அப்போதே கிடைத்துள்ளது.

* மேட்டூருக்குக் கீழே ஏழு கி.மீ தூரத்தில் காவிரி கிராஸ், நவப்பட்டி கிராமப்புறங்களிலிருந்து மீதம் ஐம்பது சதவிகித அளவு மணல் எடுக்கப்பட்டு, ரெயில்வே டிராக் லைன் அமைத்துக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளது.

* சிமெண்ட் ஆந்திராவிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. மேட்டூர் அணைக் கட்டுமானம் மற்றும் கதவணைகளில் பொருத்தப்பட்டிருக்கும் மதகுகள் (கதவுகள்) உட்பட அணைத்துக்கும் ஸ்காட்லாந்து இரும்புகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. கல்கத்தா, பம்பாய் துறைமுகங்களில் இறக்குமதியாகி, புகை வண்டிப் பாதை வழியாகக் கொண்டு



யிருபதடி உயர நீர் மட்டம் வரைக்கு மாக மேல்மட்ட மதகின் எட்டு ஷட்டர்கள் வழியாகவும் பாசனத் துக்கென அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

✱ அணை கட்டும்போதே மணல் போக்கி உருவாக்கப்பட் டிருக்கிறது! ஐந்தாயிரம் கன அடி தண்ணீர் அதன் வழியே வெளி யேறும். அதனருகே டேம் பவர் ஹவுஸ் அமைத்து, மின் உற்பத்தி செய்யப்பட்டுள் ளது. பின்னர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் Tenal பவர் ஹவுஸ் அமைத்து, (20,000 கன அடி தண்ணீர்) அதிலிருந்து மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அக் குறிப்பிட்ட டேம் பவர் ஹவுஸிலிருந்தும், டெனல் பவர் ஹவுஸிலிருந்தும் தற் போது 250 மெகாவாட் மின் உற்பத்தி யாகிறது.

வந்து சேர்க் கப்பட்டுள்ளன.

✱ இரவு பகல் பாராது, சுமார் பத்தாயிரம் கூலித் தொழிலாளர்கள் தங்களின் கடும் உடல் உழைப்பினைத் அர்ப்பணித்து, மேட்டூர் நீர்த்தேக் கத்தைக் கட்டி முடித்துள்ளனர்.

✱ பாறைகளுக்குக் கீழாக இருபத டியும், மேலாக நாற்பதடியும் மொத்தம் அறுபதடி ஆழ அஸ்திவாரம். அணையின் அதிகபட்ச உயரம் 165 அடி. அதில் 120 அடி உயரம் வரை தண்ணீர் தேக்கி வைக்கலாம். எதிர்காலத்தில் மேலும் 10 அடி உயர்த்திக் கொள்ள, அணை கட்டும் போதே வகை செய்யப்பட்டுள்ளது.

✱ அணையின் மொத்தக் கொள்ளளவு 95,660 மில்லியன் கன அடி. அணை யிலிருந்து சுமார் ஐம்பது-அறுபது கி.மீ. நீளத்துக்குத் தண்ணீர் தேங்கி நிற்கும்.

✱ ஐம்பதடி உயர நீர்மட்டம் இருக்கும் வரை கீழ்மட்ட மதகின் ஐந்து ஷட்டர்கள் வழியாகவும், ஐம்பதிலிருந்து நூற்றி

✱ நூற்றியிருபதடிக்கும் மேலாக மேட்டூர் அணைக்குத் தண்ணீர் வந்து கொண்டேயிருந்தால் என்ன செய்வது? மேட்டூர் அணைக் கட்டுமானத்தின் போதே இதனையும் சேர்த்துத் திட்டமிட்டு பதினாறு கண் மதகு கட்டப்பட்டது. ஒவ் வொரு கதவின் எடை ஐம்பத்திரண்டு டன். பதினாறு கண் கதவுகள் வழியாக வினாடிக்கு மூணரை லட்சம் கன அடி தண்ணீரை வெளியேற்றி விடலாம். மேட்டூர் அணையின் கசிவு நீரை வெளி யேற்றவும், அணையின் உட்புறத்தை ஆய்வு செய்யவும் அணைக் கட்டுமானத் தின் இதயப் பகுதியில், 4,400 அடி நீளத் துக்கு சுரங்க அமைப்பு அமைக்கப்பட்டுள் ளது'' என்கிறார் அணையின் பாதுகாப்பு பணியிலிருக்கும் சேவியர்.

வாசகர் யோசனை: **சிம்மவாஹிணி**

# வாசகர் போட்டி-2

**சேலம் மாவட்ட வாசகர்களுக்கு மட்டுமே!**

**சேலம் மாவட்ட வாசகர்களே ...**

உங்களுக்கு ஒரு குட் நியூஸ்.
கல்கி சேலம் மாவட்ட ஸ்பெஷலில் உங்களை உற்சாகப்படுத்த இதோ

**சேலம் மாவட்ட வாசகர் போட்டிகள்**

(போட்டி-I (5.12.10 இதழில்) +
போட்டி - II (12.12.10 இதழில்) முறையே...
கலந்துகொண்டு ஜமாய்ங்க...




1. சேலம் பூ சந்தையின் ராஜா?
☐ மல்லி ☐ ரோஜா ☐ சாமந்தி

2. காந்திஜி சேலத்தில் தங்கிய இடம் இப்போது?
☐ அஞ்சலகம் ☐ இரயில் நிலையம் ☐ பேருந்துநிலையம்

3. டைரக்டர் சசியின் படம் சேலத்தில் ரிலீசான தியேட்டர்?
☐ சோனா ☐ பிரபாத் ☐ செல்வம்

4. காரியசித்திக்கு?
☐ விஸ்வரூப ஆஞ்சநேயர் ☐ சுந்தாஸ்ரமம் ☐ ஐயப்பன் கோயில்

5. சேரனின் தெய்வம் எது?
☐ சமயபுரம் மாரியம்மன் ☐ கோட்டை மாரியம்மன் ☐ அன்பில் மாரியம்மன்

**விதிமுறைகள்:** ✱ இந்தப் போட்டி சேலம் மாவட்டத்தில் வசிக்கும் வாசகர்களுக்கு மட்டுமே! சரியான விடையை ☑ செய்யவும். ✱ சேலம் மாவட்ட முகவரியிலிருந்து வரும் கடிதம் மட்டுமே பரிசீலனைக்கு உரியது. ✱ ஒரு வாசகரே எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஜெராக்ஸ் அனுமதி இல்லை. ✱ சேலம் மாவட்ட வாசகர் போட்டி -1ல் கலந்து கொண்டவர்களும், வாசகர் போட்டி -2லும் கலந்து கொள்ளலாம். ✱ சரியான விடை எழுதும் 20 அதிர்ஷ்டசாலிகளுக்குப் பரிசு. ✱ 20க்கும் அதிகமானோர் சரியான விடை எழுதியிருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர். ✱ ஆசிரியர் தீர்ப்பே இறுதி! ✱ கடைசித் தேதி : 30.12.2010 ✱ வாசகர் போட்டி-2 பக்கத்தைக் கத்தரித்து அனுப்பவேண்டிய முகவரி: ஆசிரியர், கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பெயர் : .................................... முகவரி : ....................................

..........................................................................

பின்கோடு: .................. தொலைபேசி : .......................... இ-மெயில் : ..........................



## ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்




**ராமலக்ஷ்மி சுப்ரமணியம், மும்பை**

ஒரு அடி உயரம் உள்ள அம்மன் சிலை ஒன்றை அன்பளிப்பாக ஒருவர் கொடுத்துள்ளார். பஞ்சலோகத்தினால் செய்யப்பட்ட அந்த விக்ரகத்தை வீட்டில் வைத்து பூஜை செய்யலாமா?

*"உலோகத்தினால் செய்யப்பட்ட பெரிய சிலைகளை வீட்டில் பிரதிஷ்டை செய்து வழிபடக் கூடாது. அவை கோயில்களில் மட்டுமே வழிபடத் தக்கவை. வீட்டில் பூஜை செய்யும் விக்ரகம் நான்கு அல்லது ஐந்து இன்ச் உயரத்துக்கு மேல் இருக்கக் கூடாது. தங்கள் நண்பர் அளித்த அம்மன் சிலையை ஏதேனும் கோயிலுக்குக் கொடுத்து விடுங்கள்."*

**ஏகாம்பரம், புது தில்லி**

நாங்கள் வசிக்கும் பகுதியில் பசும்பால் கிடைப்பதில்லை. கோயிலில் அபிஷேகத்துக்கு பாக்கெட் பால் உபயோகிக்கிறோம். இது சரியா தவறா?

*"பொதுவாகக் கோயில்களில் அபிஷேகத்துக்குப் பசும்பால் மட்டுமே பயன்படுத்துவது வழக்கம். ஆனால், தற்காலத்தில் பெரிய நகரங்களில் பசும்பால் கிடைப்பது சற்று அரிதாகி*



விட்டது. பசும்பால் கிடைக்கவில்லை என்பதால் அபிஷேகம் தடைப்படக் கூடாது. ஆகவே பாக்கெட் பாலில் அபிஷேகம் செய்யலாம். குழந்தைக்குத் தாய்ப்பால் இல்லாவிட்டால் வேறு ஏதேனும் ஒன்றைக் கொடுக்கிறோம் அல்லவா, அதைப் போலத்தான் இதுவும். குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்.''

சங்கீதா, சென்னை - 5

எங்களுக்குத் திருமணம் நடந்து 12 ஆண்டுகள் ஆகின்றன. பொருளாதார நெருக்கடியால் அவதிப்படுகிறோம். திருமணம் நடந்த நேரம் சரியில்லை. தாலியைக் கழற்றிவிட்டு நல்ல நேரத்தில் மீண்டும் தாலி கட்டினால் பிரச்னை தீர்ந்து விடும் என்று ஒரு ஜோதிடர் கூறுகிறார். தங்கள் கருத்து என்ன?

''இது மிகவும் தவறான கருத்து. கட்டிய தாலியைக் கழற்றுவது அமங்கலச் செயல். அது ஏற்புடையதல்ல. பிறந்த நேரத்தை எப்படி மாற்ற முடியாதோ அதே போலத் திருமணம் நடந்த நேரத்தையும் மாற்ற முடியாது. கணவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டால் உடனே தாலியைக் கழற்றி உண்டியலில் போடுவதாகச் சில பெண்கள் பிரார்த்தனை செய்து கொள்கின்றனர். அதுவே தவறு என நான் சொல்லி வருகிறேன். பணக் கஷ்டம் நீங்க லஷ்மி சகஸ்ரநாமம் படித்து வாருங்கள். மறுதாலி கட்ட வேண்டிய அவசியம் இல்லை.''

ராஜகோபாலன், திருச்சி


என் மகள் அனுராதா. மருமகன் ராம் ப்ரகாஷ் ஆகியோரின் ஜாதகம் அனுப்பியுள்ளேன். அவர்களுக்கு 2006ல் திருமணம் நடைபெற்றது. எப்பொழுது புத்திர பாக்கியம் உண்டாகும்?

''தாங்கள் அனுப்பியுள்ள ஜாதக நகலில் சில திருத்தங்கள் உள்ளன. ராம் ப்ரகாஷ் ஜாதகத்தில் 12ல் செவ்வாய்-கேது-சுக்கிரன் சேர்ந்துள்ளது. செவ்வாயும் கேதுவும் ஒரே ராசியில் இணைந்தால் அது சுவீகார தோஷம் என்று கூறப்படுகிறது. மூன்று தலைமுறைகளில் அவரது குடும்பத்தில் யாராவது பிற குடும்பத்துக்குத் தத்துப் பிள்ளையாகப் போயிருந்தால் இந்த தோஷம் வரும். ஒரு ஆண் குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்பவர்களுக்கும் இந்த தோஷம் காணப்படும். ஆண் வாரிசு இல்லாதவர்கள் மற்றும் ஆண் வாரிசு இல்லாத குடும்பத்தில் பெண் எடுத்ததால் மாமனாருக்குக் கொள்ளி வைப்பவர்கள் ஆகியோருக்கும் செவ்வாய் - கேது சேர்க்கை லக்னம் 5,12,10 ஆகிய வீடுகளில் காணப்படும். திருக்கழுக்குன்றம் சென்று கிரிவலம் செய்து வேதகிரீஸ்வரரையும் பக்தவத்சலரையும் வழிபட்டால் இந்தத் தோஷம் நிவர்த்தியாக வாய்ப்புண்டு.

**உங்கள் கேள்விகளை ஜாதகக் குறிப்போடு 'பளிச் பரிகாரம்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.**



# கல்கி



2010 டிசம்பர் 12
விக்ருதி கார்த்திகை 26
மலர் : 69
இதழ் : 20

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


## ஜனநாயகம் Vs பணநாயகம்!

**ரா**டியா ஒலிப்பதிவுகளின் கசிவு இந்திய ஜனநாயகத்தின் வெற்றி எனில், விக்கி கசிவுகள் உலக அளவில் விழிப்புற்றிருக்கும் ஜனநாயக உணர்வின் வெற்றி. ஆனால், நமது அரசோ, ஸ்பெக்ட்ரம் ஊழல் விசாரணையை துரிதப்படுத்துவதற்குப் பதிலாக, ராடியா ஒலிப்பதிவுகளைக் கசியவிட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க முனைந்துள்ளது!

திருட்டுத்தனமாகச் செய்யப்படும் ஊழலை, ரகசியமாகத்தான் கண்டறிந்து அம்பலப்படுத்தியாகவேண்டும்; நேருக்கு நேர் ஆய்வது சாத்தியமில்லை; ஆய்பவருக்கு அபாயமாகவும் முடியும். அதனால்தான் உலகெங்கும் ஊழல்கள் ரகசியக் கசிவுகள் மூலம் அம்பலமாகின்றன. மக்களுக்குத் தெரிந்திருக்க வேண்டிய உண்மைகளை மறைத்தும் மழுப்பியும் ஆட்சியாளர்கள் செயல்படும்போதுதான் இந்தக் கசிவுகள் நிகழ்கின்றன.

''கசிவுகளைச் செய்தியாக்குவது தனிமனித உரிமையில் குறுக்கிடுவதாகும்'' என்று ரத்தன் டாடா வாதிடுவதில் நியாயமில்லை. தொழில் துறையினர் - தனியாராயிருப்பினும் - மக்களுடைய பணத்தின் துணையோடுதான் முதலீடு செய்து லாபம் காண்கிறார்கள். அவர்களது செயல்பாடுகள் அரசு அமைப்புடன் தொடர்பையும் வியாபாரத்தையும் உள்ளடக்கியிருக்கும்போது, அவை குறித்து விவரங்களை அறிய மக்களுக்கு ஜனநாயக உரிமை உண்டு.

விக்கி கசிவுகளும் சரி, ராடியா ஒலிப்பதிவு கசிவுகளும் சரி,






பொதுநல நோக்கில் நிகழ்ந்துள்ளன. ஆங்காங்கே உள்ள தனி நபர்களும் பத்திரிகையாளர்களும் இணையத்தில் எழுதுவோரும், தங்களுக்குத் தெரிந்த, ஆதாரபூர்வமான, மக்களைப் பாதிக்கின்ற, உண்மைகளைப் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பது மனித உரிமைக்கும் ஜனநாயகத்துக்கும் பெரும் பாதுகாப்பு.

இவ்வாறு உலக அளவில் ஜனநாயகம் பலம் பெற்று வரும் நேரத்தில்தான், இந்தியாவில் ஆந்திராவிலும் கர்நாடகாவிலும் ஆளும் கட்சித் தலைமைகள், மணலில் தலைபுதைத்துக் கொண்ட நெருப்புக் கோழிகளாகச் செயல்பட்டிருக்கின்றன! ஆந்திரத்தில் ஜகன்மோகன் ரெட்டியின் வளர்ச்சியையும் அவருக்கு இருக்கும் ஆதரவையும் அலட்சியப்படுத்தி வந்த காங்கிரஸ் தலைமை, நியமன முதல்வர்களைப் பதவியில் அமர்த்தி (முதலில் ரோசய்யா, தற்போது கிரண்குமார் ரெட்டி) மூக்குடைபட்டிருக்கிறது. ஜகன்மோகன் ரெட்டி, காங்கிரஸிலிருந்தே வெளியேறியதில், ஆட்சி ஆட்டம் கண்டுபோயிருக்கிறது. வாரிசு அரசியலை எதிர்த்து, சோனியாவால் எப்படி வெற்றி காண முடியும்?!

கர்நாடகத்திலோ, தங்கள் கட்சி ஆட்சியை இழந்துவிடக் கூடாது என்பதற்காக, ஜனநாயக மரபுகளைப் புதைத்துவிட்டு, ஊழல் புரிந்த எடியூரப்பாவைப் பதவியில் தொடர அனுமதிக்கிறது பா.ஜ.க. தலைமை!

இதற்கு மாறாக, ஆறுதலும் நம்பிக்கையும் தரும் விஷயம் பீஹாரில் நிதீஷ் குமார் கண்டுள்ள மாபெரும் வெற்றி. ஜாதி அரசியலையும் பணநாயகத்தையும் அடியாள் பலத்தையும் மீறி, நல்லாட்சிக்கும் தூய்மையான நிர்வாகத்துக்கும் ஆதரவு அளித்துள்ளனர் வாக்காளர்கள். நாட்டின் பிற இடங்களில் குறுக்கு வழிகளைப் பற்றிக் கொண்டு மரபுகளைப் புறக்கணித்து வரும் அரசியல்வாதிகளுக்கும் அவர்களுக்குத் துணைபோவதன் மூலம் ஆதாயம் தேடிக் கொள்ளும் தொழில் துறையினருக்கும், எச்சரிக்கை மணி அடிக்கின்றன பீஹார் தேர்தல் முடிவுகள்.

# கௌதம் மேனனை மயக்கிய கண்கள்!

'மின்னலே', 'பச்சைக் கிளி முத்துச்சரம்', 'காக்க காக்க', 'வேட்டையாடு விளையாடு', 'வாரணம் ஆயிரம்', 'விண்ணைத் தாண்டி வருவாயா...' என தம் படங்களுக்கு சுத்தத் தமிழில் பெயர் வைத்துப் பரவசப்படுத்தும் கௌதம் மேனனின் அடுத்த தயாரிப்பு 'வெப்பம்'. தம் அசோஸியேட் டைரக்டர் அஞ்சனாவை இந்தப் படத்தில் இயக்குனராக்கி இருக்கிறார் கௌதம்.



கௌதம்



'வெப்பம்' படத்தின் ஹீரோயின் பிந்துமாதவி, சுந்தரத் தெலுங்கின் தேவதை. ஆனால், இவர் படித்ததெல்லாம் நம்ம சிங்காரச் சென்னையில். அதுவும் பயோடெக்னாலஜி. இதுதான் அவரை 'வெப்பம்' படத்தின் ஹீரோயின் ஆக்கியதா என்றால், ''இல்லை, ஆவக்காய் பிரியாணி'' என்கிறார் கௌதம். ஆவக்காய் பிரியாணி, பிந்துமாதவியின் முதல் தெலுங்கு படம்.

''அந்தப் படத்தில் அவரது கண்கள் பேசிய வார்த்தைகள்தான் 'வெப்பம்' படத்தின் ஹீரோயினாக அவரை 'டிக்' அடிக்க வைத்தது'' என்கிறார்.

''மாதவியின் கண்களில் இருக்கும் மயக்கமும் கிறக்கமும்தான் 'வெப்பம்' படத்தின் மொத்தக் கதையையும் தாய்க்கோழி போல அடைகாக்கும்'' என்கிறார் இயக்குனர் அஞ்சனா.

ஆக மொத்தத்தில் பிந்து மாதவியின் கண்கள் கௌதம் மேனனின் கதையை மயக்கிய கண்கள்.

- மகிமைராஜன்

# உங்கள் மங்கையர் மலரில்...

பிப்ரவரி 2011

# 30 வது

## ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்!

புரட்டப் **தங்க மினுக்கு 360!**

புரட்டப் **விவரங்களும், போட்டிக் கூப்பனும்**

புதையல்! **மங்கையர் மலர் டிசம்பர் இதழில்...**

**அருமையான பம்பர் பரிசு! மிஸ் பண்ணிடாதீங்க!**

- போட்டிகள் ஏராளம்!
- பரிசுகள் தாராளம்!
- புத்தம் புதிய வடிவு!
- பளிச் பொலிவு!

அதிக.. அதிக..
அதிகப் பக்கங்கள்

மேலும் விவரங்கள்...?

காத்திருங்கள்...

அடுத்த இதழ் இதே பக்கம்



ஞாநி

தன் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கு நேரடியாகப் பதில் சொல்ல முடியாத போதெல்லாம் ஆரிய-திராவிட பகை, பார்ப்பன சதி என்ற பிரசாரங்களில் இறங்கும் கருணாநிதி வேலூர் கோட்டை மைதானப் பேச்சிலும், சமீப கால அறிக்கைகளிலும் அதே உத்தியை மறுபடியும் கையில் எடுத்துக் கொண்டிருக்கிறார். இவையெல்லாம் விஷ(ம)ப் பேச்சு என்பதில் சந்தேகமே இல்லை.



அவர் ஆரியர்கள் என்று கருதும் பிராமணர்கள் பலரின் உதவியோடும் கூட்டோடும் தான் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார். 'போகாதே போகாதே என் கணவா, பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன்' என்று புலம்பியும், தன்னை விட்டுப் போனால் காங்கிரசுக்கு அதிக இழப்பு என்று மிரட்டியும், அவர் கூடவே வைத்துக்கொண்டிருக்க விரும்பும் காங்கிரசின் தலைமை காஷ்மீர் பிராமணர்களின் வாரிசுதான். கருணாநிதி குடும்பத்தின் அத்தனை தொழில்களிலும் பிராமணர்களின் பங்கு கணிசமாக இருக்கிறது. புதிய வருணாசிரமத்தில் உச்சியில் உட்கார்ந்திருக்கும் புதிய பார்ப்பனர் கருணாநிதிதான்.

எனவே, அவர் காலாவதியாகிப் போன உத்தியை உதறிவிட்டு நேர்மையாகப் பிரச்னையை எதிர்கொள்ள முன் வரவேண்டும். ஆ.ராசா, தலித் என்பதனால் பாராளுமன்றத்தில் இவ்வளவு எதிர்ப்புக் கூச்சல் இதே டி.டி.கிருஷ்ணமாச்சாரியாக இருந்த போது அவர் ராஜினாமா செய்த அடுத்த நாளே அமைதியாகிவிட்டார்கள்' என்று (தி.மு.க. ஏடான முரசொலியில் எழுதும் சின்னக் குத்தூசி பாணியில் சொல்வதானால்) விஷ(ம)த்தைக் கக்கியிருக்கிறார் கருணாநிதி.

டி.டி.கே விவகாரம் என்ன? ஆ.ராசா விவகாரம் என்ன என்று பார்ப்போம்.

**1957**ல் முந்த்ரா என்ற தொழிலதிபரின் பங்குகளை அரசுக்குச் சொந்தமான எல்.ஐ.சி நிறுவனம் வாங்கி நஷ்டமடைந்தது என்பதுதான் புகார். பங்குகளை வாங்க உத்தரவிட்டவர் நிதித்துறை செயலாளர் எச்.எம். பட்டேல். நிதி அமைச்சராக டி.டி.கே. இருந்தார். எல்.ஐ.சி. இழந்தது ஒன்றரை கோடி ரூபாய். பதிலுக்கு காங்கிரஸ் தேர்தல் நிதிக்கு முந்த்ரா இரண்டரை லட்சம் ரூபாய் கொடுத்ததாகச் சொல்லப்பட்டது. கான்பூரில் முந்த்ராவின் மில்லை மூடினால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை

இழுப்பார்கள். அதை மூடக் கூடாது என்று நிபந்தனை விதித்ததை முந்த்ரா ஏற்றுக்கொண்டார்.

முதலீட்டுக் குழு ஒப்புதல் இல்லாமல் முந்த்ராவின் பங்குகளை எல்.ஐ.சி. வாங்கிய முறைகேட்டை அம்பலப்படுத்தியது எதிர்க்கட்சிகள் அல்ல. பிரதமராக இருந்த நேருவின் மருமகனும், இந்திராவின் கணவரும் ஆளுங்கட்சி எம்.பி.யுமான பெரோஸ் காந்திதான். எதிர்க் கட்சிகள் அவரோடு சேர்ந்து கொண்டன.

நேரு, உடனடியாக மும்பை உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி எம்.சி.சாக்ளாவை விசாரணை கமிஷனாக நியமித்தார். பங்குகளை வாங்க உத்தரவிட்டது நிதிச் செயலாளர்தான் என்றும் அதற்கான தார்மிகப் பொறுப்பு நிதி அமைச்சருடையது என்றும் சாக்ளா முடிவு செய்தார். தான் 'லுக் இண்ட்டு திஸ் மேட்டர்' என்று சொன்னதாக டி.டி.கே.வும், அதை பங்குகள் வாங்கச் சொன்னதாகப் புரிந்து கொண்டதாக பட்டேலும் சாட்சியத்தில் சொல்லியிருந்தார்கள். டி.டி.கே. ராஜினாமா செய்தபோது நேரு, உங்களுக்கு இதில் தொடர்பில்லை என்றாலும், நீங்கள் தார்மிக அடிப்படையில் விலகுகிறீர்கள் என்பதைப் புரிந்துகொள்கிறேன் என்று சொன்னார்.

டிசம்பர் 16, 1957ல் பெரோஸ் காந்தி புகார் எழுப்பினார். ஜனவரி முதல் வாரத்தில் சாக்ளா கமிஷன் பகிரங்க விசாரணையைத் தொடங்கியது. நூற்றுக்கணக்கான பொதுமக்கள் முன்னிலையில் 11 நாட்கள் விசாரித்த உடனே சாக்ளா அறிக்கை கொடுத்தார். அமைச்சர் ராஜினாமா செய்தார். எல்லாமே ஒரு மாதத்துக்குள் முடிந்துவிட்டது. முந்த்ரா போலிப் பங்குகளை விற்றதற்காகச் சிறையில் அடைக்கப்பட்டார்.

கருணாநிதி அவர்களே, அப்புறம் எதற்காகத் தொடர்ந்து அவையில் யாரும் கூச்சல் எழுப்ப வேண்டும்?

# இரண்டு விஷங்கள்!

ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரம் வெளிவந்து ஒரு வருடத்துக்கு மேல் ஆகிறது. நேரு ஒரே வாரத்தில் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியை விசாரிக்க நியமித்தது போல மன்மோகன்சிங் ஏதாவது நியமித்தாரா? கனிமொழி, ஆ.ராசா டேப் பதிவுகள் அம்பலமாகிப் பல மாதங்கள் ஆகிவிட்டன. கருணாநிதி அதைப் பற்றி இன்னும் வாயையே திறக்கவில்லை. என்ன செய்வது? பதிவு செய்த மெஷின் பார்ப்பான் கண்டுபிடித்த



* ஆ.ராசா

மெஷின் என்று சொல்ல முடியாதே.

பிரதமரின் மருமகனே அரசின் முறைகேட்டை வெளிப்படுத்தும் சூழல் நேரு காலத்தில் இருந்தது. ஆ.ராசாவின் ஊழலை அவர் கட்சியையே சேர்ந்த எந்த தி.மு.க காரராவது வெளிப்படுத்தும் வாய்ப்பு இருக்கிறதா? கருணாநிதி காலத்தில் யாராவது எந்த ஊழலையாவது வெளிப்படுத்தினால், அவரால் கம்யூனிட்டி சர்ட்டிஃபிகேட் ஆராய்ச்சி மட்டும்தான் நடத்த முடியும்.


முந்த்ராவின் பங்குகளை எல்.ஐ.சி.யை வாங்கச் செய்து நஷ்டமடைந்தது தவறு என்று மட்டும்தான் சாக்ளா சொன்னார். அதில் யாருக்கும் பணம் கை மாறியதாக எந்த ஆதாரமும் இல்லை என்றார். விவான் போஸ் குழுதான் கட்சிக்குப் பணம் தரப்பட்டதாகச் சொன்னது. நேரு, தன் உளவுத் துறையை விசாரிக்கச் செய்தார். அமைச்சர், அதிகாரிகள் யாரும் பணம் பெறவில்லை என்று உளவுத் துறை கூறியது.

தவிர முந்த்ரா ஒரு மோசடிப் பேர்வழி என்பது முன்பே நேரு, டி.டி.கே. பட்டேல் எல்லாருக்கும் தெரியும். முந்த்ரா பங்கு மார்க்கெட்டில் செய்துவரும் நடவடிக்கைகள் பற்றி பல குறிப்புகளை டி.டி.கே.வும் நேருவும் கோப்புகளில் முன்பே பதிவு செய்திருக்கிறார்கள். முந்த்ரா கம்பெனி திவாலானால் பங்கு மார்க்கெட்டில் சிக்கலும் முந்த்ராவுக்குக் கடன் கொடுத்த வங்கிகளுக்குச் சிக்கலும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை இழப்பும் வரும் என்பதால், தற்காலிகத் தீர்வாக முந்த்ரா பங்குகளை எல்.ஐ.சி. வாங்குவதென்ற முடிவை நேரு அரசு எடுக்க வேண்டியிருந்தது. அது உண்மையில் பொருளாதார நெருக்கடி பற்றிய ஜட்ஜ்மெண்ட் எரர்தானே தவிர ஊழல் அல்ல.

* அச்சுதானந்தன்



ஆ. ராசா செய்தது அப்பட்டமான மோசடி. ஸ்பெக்ட்ரம் விற்பனை விதிகளை, தேதிகளை மாற்றி அமைத்தது, அனுபவமில்லாத கம்பெனிகளுக்கு லைசன்ஸ் கொடுத்தது, அவர்கள் அதை விற்று பல கோடி சம்பாதித்தது, நீரா ராடியாவுடன் பேரங்களில் ஈடுபட்டது, பிரதமர் சொன்னதைக் கேட்காதது எல்லாம் ஒரு சாதாரண பாராளுமன்றக் கூட்டுக் குழுவால்



### இந்த வாரக் கவலை!

**புதிய பீஹார் சட்டசபையில் கிரிமினல் எம்.எல்.ஏக்கள் 59 சதவிகிதம்! பழைய சபையில் 35 சதவிகிதம்தான். 85 பேர் மீது கொலைக்குற்றங்கள் உள்ளன. இப்போது 47 கோடீஸ்வர எம்.எல்.ஏக்கள். முன்பு வெறும் 8 பேர்தான் கோடீஸ் வரர்கள்.**

கூட விசாரிக்க முடியாமல் கருணாநிதி வகையறாக்களால் வருடக்கணக்கில் தடுக்கப்பட்டு வருகிறது. இதைக் கேள்விகேட்டால் விஷத்தைக் கக்குகிறார் கருணாநிதி. பக்த வத்சலம் சொன்னது போல விஷக் கிருமிகள் பரவிவிட்டன. அவர் கருணாநிதி வகையறாக் களைத்தான் குறிப்பிட்டிருக்க வேண்டும். தேர்தலின்போது சரியான மருந்து அடிக்கத் தவறினால் நாம்தான் மாண்டு போவோம்.

## விஷம் 2

மருந்து என்று நினைத்து விஷத்தைப் பயன்படுத்துவது அரசியலில் மட்டுமல்ல விவசாயத்திலும் ஆபத்தானதுதான். கேரளத்தின் காசர்கோடு மாவட்டம் இந்தியாவின் கேன்சர் தலைநகரமாக மாறி வருவதற்குக் காரணம் எண்டோசல்பான் என்ற பூச்சி மருந்து விஷம்.

சுமார் 25 வருடங்களாக காசர்கோடு மாவட்டத்தில் முந்திரி, தேயிலை, காபித்தோட்டங்களில் விமானம் மூலம் எண்டோசல்பான் தெளிக்கப்பட்டு வந்ததன் விளைவாக இன்று மாவட்டத்தில் பத்து கிராமங்கள் முற்றிலும் புற்றுநோய் பாதிக்கப்பட்டவையாகிவிட்டன. தோல் நோய்கள், கண்பார்வை இழத்தல், மூளை வளர்ச்சி குன்றுதல் என்று பல நோய்கள் குழந்தைகளையும் பெரியவர்களையும் தாக்குகின்றன என்று அகமதாபாத் சூழல் ஆய்வு நிலையம் காசர்கோட்டில் செய்த ஆய்வில் கண்டறிந்தது. 123 வீடுகளில் சாம்பிள் சர்வே செய்த போது 93 வீடுகளில் புற்று நோய் என்ற அளவுக்குத் தாக்கம் மோசமாக இருக்கிறது. ஒரே வருடத்தில் சுமார் 500 பேர் இறந்திருக்கிறார்கள்.

இப்போது உயர் நீதிமன்ற உத்தரவையடுத்து கேரள அரசு எண்டோசல்பானை மாநிலம் முழுவதும் தடை செய்துவிட்டது. ஆனால் இந்திய அரசு தடை செய்ய மறுக்கிறது. அது மட்டுமல்ல உலக அளவில் எண்டோசல்பானை தடை செய்யும் முயற்சியையும் எதிர்க்கிறது!

ஏற்கெனவே அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, ஸ்வீடன், நெதர்லாந்து, சிங்கப்பூர், சிரியா, ஆகியவை தடை செய்துவிட்டன. ஆஸ்திரேலியா, ஜப்பான், ஸ்ரீலங்கா முதலிய பல நாடுகளில் கடும் கட்டுப்பாடுகள் உள்ளன. இந்தியாவும் முழுத்தடை விதிக்கக் கோரி மேதா பட்கர் தலைமையில் சென்ற வாரம் நாடாளுமன்றம் நோக்கிப் பேரணி நடத்தப்பட்டது.

### இந்த வாரப் பூச்செண்டு!

**வீடு வீடாகச் சென்று ஒவ்வொருவருக்கும் சர்க்கரை, ரத்த அழுத்தநோய்கள் உள்ளனவா என்று சோதிக்கும் திட்டத்தைத் தொடங்கியிருப்பதற்காக தமிழக அரசுக்கு இ.வா.பூ.**

சில உடனடி லாபங்களுக்காக நம்மை தொலைநோக்கில் பலி கொடுக்கும் முட்டாள்தனத்தை நாம் அரசியல், விவசாயம் என்று எல்லா துறைகளிலும் செய்துகொண்டிருக்கிறோம். சமூகத்தில் சில பூச்சிகளைக் கொல்வதற்கு, களைகளை அழிப்பதற்கு 'திராவிட இயக்கம்' நமக்கு ஒரு காலத்தில் தேவைப்பட்டது. இன்று அதுவே ஒரு எண்டோசல்பானாகிவிட்ட நிலையில் அவசரமான மறு பரிசீலனைகள் தேவைப்படுகின்றன.

டாக்டர். சுதா சேஷய்யன்



# கடவுளைக் காட்டிலும் விதி பெரிதா?

ஆண்டவனை வணங்குவதற்காகப் புறப்பட்ட அவருக்கு, விந்தையான சிந்தனை தோன்றியது. நம் எல்லோரையும்விட உயர்ந்தவர் கடவுள்; சரி, ஆனால், அவரைவிட உயர்ந்தவர் (அல்லது உயர்ந்தது) உண்டா?

இராமர் சன்னிதியில் நின்று யோசித்தவருக்கு, இராமபிரானின் கோதண்டம் கண்ணில்பட்டது. 'வில்லையும் அம்பையும் தூக்கிக் கொண்டு பதினான்கு ஆண்டுகள் இந்த இராமரும் சீதையும் படாதபாடு பட்டார்களே!' - இவ்வாறு நினைக்கும்போதே, கடவுளேயானாலும் கானகத்தில் கஷ்டப்பட்டதற்குக் காரணம் விதியல்லவா என்ற எண்ணமும் எழுந்தது. ஆமாம், விதி படுத்திய பாடுதானே, காகுத்த ராமனைக் காட்டிலும் மேட்டிலும் அலைய வைத்தது; மண்ணிலும் தூசிலும் வாடச் செய்தது.

கடவுளைக் காட்டிலும் விதி பெரியது. உண்மைதான். ஒரு பிறவியில் செய்ததற்கு, மறுபிறவியில் விளைவு தரும். இராமாவதாரத்தில், சூரியன் மகன் சுக்ரீவனோடு சேர்ந்த நாயகன், இந்திரன் மகன் வாலியை வென்றார். விதி வெறுமே விட்டுவிடுமா? அடுத்த பிறவியில், அதற்கான மாற்றம் செய்தது. அதனால்தான், கிருஷ்ணாவதாரப் பெருமான், இந்திரன் மகன் அர்ச்சுனனோடு சேர்ந்து, சூரியன் மகன் கர்ணனைப் பகைத்தார்.

அப்படியானால், கடவுளைக் காட்டிலும் விதி பெரியது. ஆனால், வினைப் பயன்களையே விதி தருகிறது. ஏற்கெனவே நமக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் வினைப் பயன்களை, விதியானது நம்மிடம் சேர்க்கிறது. இப்போது, வினைப் பயன்கள் பெரியவை.

வினையின் பயன்களாக வருபவையே வினைப்பயன்கள். கர்மவினை என்னும் மரத்தின் கனிகளே, வினைப் பயன்கள். அவை இனித்தாலும், புளித்தாலும், காரணம் என்னவோ, மரத்தின் இயல்புதான்! மரம் நல்லதானால், நன்னீர் பெற்றதானால், கனி இனிக்கும். மரம் கெட்டதானால், மாசடைந்த நீரில் வளர்ந்ததானால், கனி புளிக்கும். இப்போது அடுத்த நிலைக்கு வந்தாகி விட்டது; வினைப் பயன்களைக் காட்டிலும், அவற்றை உண்டாக்கும் வினைகளே பெரியவை.

சன்னிதியிலிருந்து வந்தவருக்கு ஏதோ புரிந்தது.

***நமஸ்யாமோ தேவாந்நநு***
***ஹதவிதேஸ்தேபி வசகா***
***விதிர் வந்த்ய: ஸோபி பிரதிநியத***
***கர்மைக பலத:***
***பலம் கர்மாயத்தம் கிமமரகணை:***
***கிம்ச விதிநா***
***நமஸ்தத் கர்மேப்யோ விதிரபி ந யேப்ய:***
***பிரபவதி***

***(பர்த்ருஹரி -- நீதி சதகம் -- 92)***

கடவுள், விதியின் வசப்படுகிறார். விதியோ, கர்மபலன்களையே தருகிறது. பலன்களோ, கர்மவினைகளால் நிர்ணயிக்கப் படுகின்றன. இவ்வாறிருக்கையில், பிரம்

# வாரம் ஒரு மந்திரம் 6



மாவோ (பிரம்மாவுக்கே விதியென்று ஒரு பெயருண்டு) பிற கடவுளரோ என்ன செய்ய முடியும்? எனவே, நல்ல செயல்களையே நான் நமஸ்கரிக்கிறேன்.

செயல்கள் நன்மையானால், நிலையும் நன்மையாகும்; கடவுளும் நன்மை செய்வார். நல்ல செயல்களைச் செய்ததால், அசுர குலத்தில் பிறந்த பிரஹலாதனுக்குக் கடவுள் நன்மையானார்; தீய செயல்களைச் செய்த தால், பிரம்மாவின் கொள்ளுப் பேரனான இராவணனுக்குக் (பிரம்மாவின் மகன் புலஸ் தியர், அவர் மகன் விஸ்ரவா, அவர் மகன் இராவணன்) கடவுளும் பகையானார்.

(மந்திரம் ஒலிக்கும்...)

# அடிக்காதீங்க... அவன் என் மகன்!



விருதுகள் வழங்கும் அமைப்பாளரின் அந்த வார்த்தைகளை ஆசிரியர் பொன்னம்பலத்தால் ஜீரணிக்கவே முடியவில்லை. அவரைத் திக்குமுக்காட வைத்திருந்தன.

டில்லியிலிருந்து சென்னை வரும் ஒரு புகைவண்டியின் அன்ரிசர்வ்ட் பெட்டியின் ஜன்னலோரத்தில் அமர்ந்திருந்த அவர் கண்களில் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. மனமோ அன்று காலையில் நடந்தவற்றைக் கசப்புடன் நினைத்து வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது.

''அய்யா! இந்த விஷயத்தை ஒங்ககிட்ட எப்படிச் சொல்றதுனே தெரியலைங்க. இருந்தாலும் சொல்லியாகணும். என்னை மன்னிச்சிருங்க'' என்ற பீடிகையோடு அந்தச் செய்தியைச் சொல்ல ஆரம்பித்தார் கலைவாணன். அவர்தான் விருதுக் குழு ஒருங்கிணைப்பாளர்.

''இந்த வருசத்திலேருந்து நாடு முழுவதிலும் உள்ள ஆசிரியர்களில் மூணு பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் 'பன்முக ஆளுமை கொண்ட ஆசிரியர் விருது'னு ஒரு விருதை அறிவிக்க, பல தகுதிகளையும் அலசி ஆராய்ஞ்சு மூணு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தோம். அந்த மூணு பேர்ல தமிழ்நாட்டிலேருந்து நீங்க வந்திருக்கிறதுல தமிழனான எனக்குக் கூடுதல் பெருமை...''


''அய்யா! கொஞ்சம் இருங்க. அதெல்லாம் சரிதான். ஆனா கடைசி நேரத்துல விழாவுக்கு ஒரு நாள் முந்தி உங்க தேர்வை நிறுத்தி வெச்சிருக்கோம்னு சொன்னா என்னங்க அர்த்தம்? இந்த விருதை நானா கேக்கலையே ஒங்ககிட்ட? நீங்களாகப் பல விவரங்களையும் கேட்டீங்க. என்னை இந்த விருதுக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறதா தகவல் சொன்னீங்க... ஜனாதிபதி கையால விருது வாங்கிக்கிறதுக்காக டில்லிக்கு வாங்கனு அழைப்பும் கொடுத்தீங்க. அதை நம்பி நானும் வந்திட்டேன். இப்பப் பாத்து ஒன்னோட தேர்வு ரத்து. போய்ட்டு வாங்கனு சொல்றீங்களே?'' என்று மறுபடியும் உடைந்துபோன குரலில் பலவீனமாக் கேட்டார் ஆசிரியர் பொன்னம்பலம்.

''அய்யா மன்னிச்சுக்குங்க. அசிரியர் சமுதாயத்திலேயே வழங்கக்கூடிய மிக உயரிய விருது இது. நீங்க மாணவர்களுக்குச் சொல்லித் தருகிற விதம், பழகுகிற விதம், கண்டிப்பு இது மட்டுமல்லாமல் மாணவர்களின் இசை, நடனம், நாடகம்னு அவங்களுக்குள்ள ஒளிஞ்சிருக்கிற திறமைகளை வெளிக்கொணர்ந்தது, மொழியாற்றல் மிக்க உங்களைப் போலவே மாணவர்களையும் தமிழிலும் ஆங்கிலத்திலேயும் பிரகாசிக்கச் செய்தது, ஏறக்குறைய அத்தனை மாணவர்களையும் ஒங்க பாடத்தில தொண்ணூறு விழுக்காட்டுக்கு மேல மதிப்பெண் வாங்க வெச்சது, நினைவாற்றலுக்கு 'நிமோனிக்ஸ்' எனும் பயிற்சி அளித்தது, பள்ளி அசெம்பிளி கூட்டத்தில் ஒவ்வொரு மாணவனும் ஜொலிக்க வெச்சது, தனி மனித ஒழுக்கம் இப்படி நூத்துக்கணக்கான காரணிகளை வெச்சுத்தாங்க ஒங்களைத் தேர்ந்தெடுத்தோம்...ஆனா...''

''அய்யா! அதெல்லாம் என்னோட இயல்பு. எந்த விதமான அங்கீகாரத்தையும் நான் எதிர்பார்க்கலை...''

''இருங்க'' என்று இடைமறித்தார் கலைவாணன். ''இந்த உயரிய விருதுக்கு உங்களோட பெயரைப் பரிந்துரை செய்யறதுக்கு முன்னாடி ஒரு குழுவே உங்கள் செயல்

லதானந்த்



பாடுகளை ரகசியமா ரெண்டு மாசம் கண்காணிச்சு அறிக்கை அனுப்பினதுக்கு அப்புறம்தான் அதிகாரபூர்வமா உங்களுக்கு அழைப்பும் அனுப்பினோம். இந்த விருது வழங்குறதில ஒரு கண்டிஷனும் இருக்கு. அதாவது விருது வாங்குறவர் மேல விருது பெறுகிற நாள் வரைக்கும் எந்த ஒரு புகாரும் இருக்கக் கூடாதுங்கிறதுதான் அது!''

''அய்யோ! அப்படினா என் மேல ஏதாவது புகாரா? எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் அப்படி ஏதும் இல்லையே?''

''அய்யா! மன்னிச்சிருங்க! சிவபாலன்னு ஒரு ஸ்டூடண்ட் ஒங்க மேல ஆறு மாசத்துக்கும் முன்னாடி ஒரு புகார் கொடுத்திருக்கான். அதன் பேர்ல துறை ரீதியான விசாரணை நடத்தும்படி நேத்துத்தான் உத்தரவு போட்ருக்காங்க. எங்களுக்கும் அதோட நகல் அனுப்பியிருக்காங்க. துறை ரீதியா நடவடிக்கையை எதிர்கொள்ளுகிற ஒருத்தருக்கு விருது வழங்கக் கூடாதுங்கிறது விதிமுறை.''

பொன்னம்பலத்துக்குத் தலை சுற்றுவது போலிருந்தது. ஒரு நிமிடம் கண்ணை மூடி ஏதோ யோசித்தார். ''ஓ! அந்த சிவபாலனா?'' எனத் தமக்குத்தானே கேட்டுக்கொண்டார்.

''சரிங்க! அப்ப நான் வர்றேன்'' எனக் கைகூப்பி விடைபெற ஆயத்தமானார்.

''அய்யா! சென்னையிலிருந்து தில்லி வந்துட்டுப் போறதுக்கான முதல் வகுப்பு ரயில் கட்டணம் இதில இருக்கு. வாங்கிக்குங்க'' என்று கலைவாணன் ஒரு கவரை நீட்டினார்.

''வேண்டாங்க!'' என்று இலேசாகப் புன்னகை பூத்தவாறு மறுதலித்து விட்டு மெல்ல நடந்தார் பொன்னம்பலம்.

ரயிலில் திரும்பிக் கொண்டிருந்தபோது அவர் மனம் அந்தச் சிவபாலனைச் சுற்றியே வட்டமிட்டு வந்தது.

அரசியல் பின்னணியுள்ள குடும்பத்திலிருந்து வந்த மாணவன்தான் சிவபாலன். அவனுக்கு வீட்டில் என்ன பிரச்னையோ.. பள்ளிக்கு ஒழுங்காக வரமாட்டான். வகுப்பிலும் மிகுந்த தொல்லை தருவான். வறுமைச் சூழலில் தவிக்கும் எத்தனையோ ஏழை மாணவர்களுக்குப் பல்வேறு உதவிகள் செய்து அவர்கள் படிப்புத் தடைபடாமல் பார்த்துக்கொள்ளும் ஆசிரியர் பொன்னம்பலத்தின் எவ்வித முயற்சிகளாலும் சிவபாலனைத் திருத்த முடியவில்லை. வகுப்பு முடிந்து அனைவரும் போன பின்னர் சிவபாலனுக்குக் கனிவுடன் அறிவுரைகள் சொல்வார். சிறப்புத் தனி வகுப்புகள் அவனுக்கு மட்டுமே எடுத்தும் பார்த்துவிட்டார். பலன்தான் இல்லை

பள்ளி வளாகத்திலேயே புகை பிடிப்பது, மது அருந்திவிட்டு வகுப்புக்கு வந்து

**சிவபாலன் முகத்தில் எப்போதும் தெரியும் குரூரம் மறைந்து போயிற்று!**

கலாட்டா செய்வது என நாளுக்கு நாள் அவனது அட்டகாசம் அதிகரித்துக் கொண்டே போனது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த பொன்னம்பலம், ஒரு நாள் சிவபாலனின் அப்பாவை நேரில் பார்த்து சிவபாலனின் ஒழுக்கக் கேடுகளை ஒன்று விடாமல் சொல்லிவிட்டார்.

அரசியல் அரசியல் என்று வீட்டிலேயே தங்காமல் சுற்றி வந்துகொண்டிருக்கும் சிவபாலனின் அப்பாவுக்கு இது பெரும் ஆத்திரத்தை அளித்திருக்க வேண்டும். அன்றிரவு சிவபாலனை அடித்துத் துவைத்து விட்டார். சிவபாலனின் மொத்தக் கொடூரமும் பொன்னம்பலத்தின் மீது திரும்பியது. விளைவு.... பொய்யான ஒரு புகாரைப் பல இடங்களுக்கும் தட்டிவிட்டான்.

தன் தந்தையிடம் சொல்லி அவரை சிறந்த ஆசிரியருக்கான விருதுக்குப் பரிந்துரைக்கும்படியும் அவ்வாறு செய்யாவிட்டால் இந்த ஜென்மத்துக்கு அவனை பாஸ் போட மாட்டேன் என்று மிரட்டியதாகவும் அதற்கு தான் பணியாததால் தந்தையாரிடம் பொய்கள் கூறித் தம்மைப் பழிவாங்கிவிட்டதாகவும் அந்தப் புகாரில் அள்ளி விட்டிருந்தான். அதன்பிறகு அவன் பள்ளிக்கு வருவதையும் நிறுத்திவிட்டுத் தம் தகப்பனையே அடித்துவிட்டு வீட்டிலிருந்து கொஞ்சம் நகைகளையும் எடுத்துக் கொண்டு எங்கோ ஓடி விட்டதாகக் கேள்விப்பட்டார் பொன்னம்பலம்.



அந்தச் சிவபாலனின் பொய்ப் புகாரால் இவ்வளவு அசிங்கப்படுகிறோமே என முதலில் கலங்கிப் போனார் பொன்னம்பலம். 'அப்பழுக்கற்ற ஆசிரியப் பணியில் தூய தொண்டாற்றி வரும் தம் மீதா இப்படிப்பட்ட புகார்?' எனக் கொஞ்ச நேரம் கிலேசப்பட்டாலும் விரைவிலேயே தெளிந்துவிட்டார்.

''ஆண்டவா! இந்தப் பையனுக்கு நல்ல புத்தி கொடு!'' என்று மனமுருகி வேண்டிக்கொண்டு அந்த விஷயத்தை அன்றே மறந்துவிட்டார். ஆனால் நிர்வாக இயந்திரம் மறக்குமா? இதோ தம் வேலையைக் காட்டி விட்டது.

மெல்ல மெல்ல சகஜ நிலைக்குத் திரும்பி ஜன்னலோரத்தில் அமர்ந்து தெளிவடைந்த மனத்தோடு வெளியே பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தார். ரயில் ஏதோ ஒரு வடக்கத்திய ஸ்டேஷனில் நின்று கொண்டிருந்தது.

பிளாட்பாரத்தில் ஒரே களேபரம்! ஏழெட்டுப் பேர் யாரோ ஒருவனைப் போட்டு அடித்து உதைத்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுதுதான் பொன்னம்பலம் கவனித்தார். அடிபட்டுக்கொண்டிருந்தவன்... அட... 'இது சிவபாலன்தானே?' என்று நினைத்து மறுபடியும் பார்த்து ஊர்ஜிதப் படுத்திக்கொண்டார்.

வேகமாக இறங்கி அடித்துக்கொண்டிருந்தவர்களைப் பார்த்து எதற்காக அடிக்கிறீர்கள் என்று ஹிந்தியில் வினவினார்.

அவரது வேட்டி சட்டைக் கோலத்தைப் பார்த்த ஒருவன்,

''தமிழ் ஆளா நீங்க? பாருங்க சார் அநியாயத்த! பச்சக் கொழந்த கழுத்திலிருந்து செயின நைசா எடுத்துப் பாக்கெட்ல போட்ருக்கான். புடிச்சிட்டோம். நாலு போடு போட்டு போலிஸ்ல புடிச்சிக் குடுக்கப் போறோம்!''

ஆசிரியர் பொன்னம்பலம் கூட்டத்தைப் பார்த்து மிக மெல்லிய குரலில் சொன்னார்.

''அய்யா! எல்லாரும் என்னை மன்னிச்சிருங்க. இவன் என்னோட மகன்தான்! அவன் வேணும்னு அப்படிச் செய்யலை. லேசா மன நலம் பாதிக்கப் பட்ருக்கான். விட்ருங்க. நான் இனிமே கவனமாப் பாத்துக்கிறேன்!'' எனத் தொழுது வேண்டிக்கொண்டார்.

கூட்டம் கசமுசவென்று பேசிக்கொண்டு சிவபாலனை விட்டுக் கலைந்து சென்றது. ரயில் புறப்பட விசில் ஊதியது. வேகமாகப் பொன்னம்பலம் வண்டியில் ஏறித் தம் இருக்கையில் அமர்ந்துகொண்டார். சிவபாலன் பிளாட்பார்மில் பொன்னம்பலத்தையே வெறித்துப் பார்த்தவாறு நின்றிருந்தான். அவன் முகத்தில் எப்போதும் தெரியும் குரூரம் சுத்தமாய் மறைந்து போயிருந்தது. ●

## பாலிடிக்ஸ் பஜார்




'ராசாவை மீடியா டார்கெட் செய்வது ஏன்?' என்ற தலைப்பில் சமீபத்தில் தி.மு.க. ஆதரவு மீடியா பிரமுகர்கள் கூட்டம் சென்னையில் நடந்தது. இதற்குப் போட்டியாக சோ, சு.சுவாமி, செ.கு.தமிழரசன் ஆகியோரை வைத்துக் கூட்டம் போட ஏற்பாடு நடக்கிறதாம். கோவையில் திரைப்பட வளர்ச்சிக் கழகம் என்ற அமைப்பை நடத்தி வரும் 'நலம் விரும்பி' என்பவர் இந்தக் கூட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறாராம். தி.மு.க ஆதரவு கூட்டம் தமிழகம் முழுக்க நடந்தால் இந்தக் கூட்டமும் தமிழகம் முழுக்க நடக்குமாம்.



### ஏட்டிக்குப் போட்டி!





தி.மு.க.வில் எல்லா மாவட்டங்களுக்கும் தேர்தல் பொறுப்பாளர்கள் நியமித்தாயிற்று. பல அமைச்சர்கள், மாவட்ட அரசியலில் தங்களுக்கு வேண்டாதவர்களைத் தலைமையின் செல்வாக்கைப் பயன்படுத்திப் பொறுப்பாளர்களாகப் பல மாவட்டங்களுக்குத் துரத்தி விட்டார்களாம்! உதாரண



"கடந்த சட்டமன்றத் தேர்தலில் எட்டு சதவிகிதம் வோட்டுதான் காங்கிரஸ் பெற்றது. ஆனால் வரிசையாக அணி வகுக்கும் ஊழல்கள், விலைவாசி உயர்வு காரணமாக அதன் செல்வாக்குச் சரிந்து விட்டது. இருந்தும் எங்கள் அம்மா காங்கிரஸ் கூட்டணியை விரும்ப காரணம், தேர்தலில் தி.மு.க.வின் பண பலத்தையும் அதிகார துஷ்பிரயோகத்தையும் கட்டுப்படுத்தத்தான். காங்கிரஸ் கூட்டணி இருந்தால் தேர்தல் கமிஷனும், தேர்தல் அதிகாரிகளும் கண்டிப்புடன் இருப்பார்கள். மத்திய அரசின் இரும்புக் கரங்கள் தி.மு.க. திட்டமிட்டிருக்கும் ஜகஜ்ஜால விளையாட்டுக்களைத் தடுத்து நிறுத்திவிடும்'' என்கிறார் அ.இ.அ.தி.மு.க. மூத்த பிரமுகர். இந்தச் சூழலில் டிசம்பர் மாதம் சோனியா பிறந்த நாள் கொண்டாட்டங்களுக்கு ஜெ.வை அழைக்க தில்லியில் ஏற்பாடு நடக்கிறதாம்.


### ஏன் வேண்டும் காங்கிரஸ்?

## பொறுப்பாளர்-வெறுப்பாளர்



மாக எ.வ. வேலு, வீரபாண்டி ஆறுமுகம் ஆகியோர் தங்களுக்கு வேண்டாத சட்டமன்ற உறுப்பினர்களான முறையே பிச்சாண்டி, ராஜேந்திரன் ஆகியோரைத் தூக்கிவிட்டார்களாம். இப்போது பொறுப்பாளர்களின் கவலை, தங்களுக்குத் தேர்தல் சீட் கிடைக்குமா என்பதுதான். ''பொறுப்பாளர்கள் வேலை... பூக் கமிட்டி போடுவது, வேட்பாளர் செலக்ஷனில் கருத்தைச் சொல்லுவது, 'வீக்'கான ஏரியாக்களைச் சரிசெய்வதுதான். மற்றபடி அவர்களும் தேர்தல் சீட்டுக்கு மனு செய்யலாம்'' என்கிறார் அறிவாலயம் பிரமுகர் ஒருவர்.

## அதிகாரியைத் துரத்திய உளவுத்துறை!



பொதுப்பணித்துறைச் செயலர் ராமசுந்தரம் விருப்ப ஓய்வில் போன
தற்குக் காரணம் காவல்துறை உயர் அதிகாரிகளுக்குள் உள்ள அதிகாரப்
போட்டி என்கிறார்கள். ராமசுந்தரம் மனைவி அர்ச்சனா ராமசுந்தரம்,
கூடுதல் டி.ஜி.பி.ஆக இருக்கிறார். அங்கே நடக்கும் உள்ளடி அரசியலில்,
ராமசுந்தரத்தைக் கண்காணிக்க ஓர் உளவுத்துறை அதிகாரி நியமிக்கப்பட்டா
ராம். கடுப்பான ராமசுந்தரம், 'பை...பை...' சொல்லிவிட்டாராம். இப்
போது அர்ச்சனா ராமசுந்தரமும் மத்திய அணி பணிக்கு முயற்சி செய்
கிறாராம்.

**- சஞ்சயன்**

## ஆவேசமா? அன்பா?



கவிஞர் ஜெயபாஸ்கரனின் 'மனைவியானேன் மகனே' என்ற கவிதைத் தொகுப்பைச் சமீபத்தில் டாக்டர் அன்புமணி வெளியிட்டுப் பேசும்போது, ''பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு 10 லட்சம் கோடி லிட்டர் மதுவைக் குடித்து வந்த தமிழக மக்கள், இப்போது 36 லட்சம் கோடி லிட்டர் மதுவைக் குடித்து வருகிறார்கள். நாட்டுக்குக் கேடு என்று தெரிந்த ஒன்றைச் செய்பவர்கள் தேச விரோதிகள். எனவே தமிழக ஆட்சியாளர்களை தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்ய வேண்டும்'' என்று ஆவேசமானார். அவரை 'கூல்' செய்யும் விதமாக பா.ம.க.வுக்கு வேண்டியவரும், அன்புமணி அமைச்சராக இருந்தபோது தனிச் செயலாளராக இருந்த வருமான தனவேலை பொதுப்பணித் துறைச் செயலாளராக நியமித்துவிட்டார் கருணாநிதி. கூட்டணி கல்யாணம் டும்...டும்...டும்...

# மை லைப்ரரி!





"இலக்கியத் தேடல் எனக்குள் அதிகமானபோது, புத்தகத் தேடலும் சங்கிலித் தொடர் போல மிக அதிகமானது. அதற்கு விதை ஊன்றியவர்கள் கல்கியும், சாண்டில்யனும். அவர்களின் வரலாற்று நவீனங்களாக ஒரு கட்டத்தில் வாங்கிக் குவித்தேன். சமூக நாவல், கவிதை என புத்தக சேமிப்பு அடுத்தகட்டத்துக்கு நகர்ந்தது. அவற்றைப் படிக்கப் படிக்க கூடவே என் மனமும், நல்லவற்றை நோக்கி நகர்ந்தது. என்னை நல்வழிப்படுத்தியவை நான் வாசித்த புத்தகங்களே.''

**- திருநீலக்குடி மா.உலகநாதன்**

**வாசகர்களே!**
**உங்கள் வீட்டு நூலகத்தைப் பற்றியும் அதன் சிறப்பைப் பற்றியும் உங்களைக் கவர்ந்த நூல் குறித்த அனுபவங்களை ஃபோட்டோவுடன் எழுதி 'மை லைப்ரரி' என்று குறிப்பிட்டு அனுப்பவும்.**
**பிரசுரமாகும் அனுபவத்துக்குப் பரிசு உண்டு.**



ஈரோட்டில் குணா இங்கிலீஷ் அகாடமி என்கிற நிறுவனத்தைப் பதினைந்து ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். கல்வி சார்ந்து இயங்கி வருவதாலோ என்னவோ, என் வீட்டில் நூலகம் மிகவும் அவசியமாக அமைந்து போனது. தொள்ளாயிரம் புத்தகங்கள், என் வீட்டு அலமாரிகளை ஆக்கிரமித்துள்ளன. நினைவு தெரிந்து நான் முதன் முதலாக வீட்டுக்கு வாங்கி வந்த புத்தகம், டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி எழுதிய 'எண்ணங்கள்'. கல்லூரி மாணவப் பருவத்தில் பெரியார் புத்தகங்கள் மீதும், அதனைத் தொடர்ந்து காரல்மார்க்ஸ் புத்தகங்கள் மீதும் அளவு கடந்த ஆர்வம் தோன்றியது. விளைவு? புத்தகங்கள் வரிசையாக வந்து குவியத் தொடங்கின. வாலிப வயது கடந்து செல்கையில், பெரியாரின் கடவுள் மறுப்புக் கருத்துகள் என்னிலிருந்து விலகிச் சென்றன. அப்போது கள்ளிக்கோட்டையிலிருந்து என் நண்பர் இராஜன், பகவத் கீதை முழுமையான புத்தகத்தை எனக்குத் தம் அன்பளிப்பாக அனுப்பி வைத்திருந்தார். புத்தகம் வந்து பத்து ஆண்டுகள் வரைக்குமாக அதனைத் திறந்து வாசிக்கும் மனநிலை எனக்கு வரவில்லை. முப்பத்தைந்து வயதில் அதனை வாசிக்கத் தொடங்கியபோது, என்னால் விவரிக்க இயலாத புதிய பாதைகளுக்கான நுழைவாயிலைத் திறந்து வைத்தது பகவத் கீதை.



**- சிவகுணசேகர், ஈரோடு**

# கல்கி, ஸ்டெபினி, உதயமூர்த்தி...

இருநூறு புத்தகங்களுக்கு மேல் உள்ளடக்கியது, என் வீட்டு நூலகம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான முத்துக்கள். புத்தகங்கள் மட்டும் என்றல்ல, பொது அறிவு சார்ந்த ஆடியோ வீடியோக்களும் உண்டு. அத்தனையும் என் மகளுக்காக வாங்கிக்குவித்தவை. அடிப்படையில் நான் ஆசிரியை என்பதால் புத்தகங்கள் மீது எனக்கு எப்போதும் தீராக் காதல். 'வரலாற்றில் சில அதிசயங்கள்' என்கிற பெரிய புத்தகம், என் நூலகத்தின் பொக்கிஷம். காளிதாசரின் ரகுவம்சம், குமாரசம்பவம், போன்ற நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்பு நான் தேடிப் பிடித்து வாங்கியவை. காளிதாசரின் மேகதூதம் புத்தகம் என் தேடலில் உள்ளது. ப்ளஸ் ஒன் படிக்கும் என் மகள் சூர்யாவுக்காக என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா தொகுப்பு புத்தகங்களும், சி.டி.க்களும் வாங்கி வைத்துள்ளேன். புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியரான ஸ்டெபினி மேயர் நாவல்களின் தீவிர வாசகி என் மகள் சூர்யா. தன் மகள் இந்திரா காந்திக்காக ஜவாஹர்லால் நேரு சிறையிலிருந்தபடி எழுதிய கடிதங்கள் அடங்கிய புத்தகம் ஒன்றினை, ஒரு தாய் தம் மகளுக்குத் தரும் அன்புப் பரிசு எனக் கையொப்பமிட்டு என் மகள் சூர்யாவுக்கு அளித்துள்ளேன். இப்படி எனக்காகவும், என் மகளுக்காகவும் வாங்கி அடுக்கிய புத்தகங்களால் நிரம்பியுள்ளது வீட்டு அலமாரி!''

**- கலைச்செல்வி மோகனரெங்கன், மணச்சநல்லூர்**




**கதைகள், கவிதைகள், பரிசுப் போட்டி...**

# கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!

டிசம்பர் 2010 விலை ரூ 8/-

## அருள்வாக்கு

# ஆஹாரம்



ஆஹாரம் என்றால் நாக்கால் சாப்பிடுவது மட்டுமில்லை. பஞ்ச இந்திரியங்களுக்கும் ஒவ்வோர் ஆஹாரம் உண்டு. பல காட்சிகளைப் பார்க்கிறோம். இது கண்ணுக்கு ஆஹாரம். பலவிதமான பாட்டு, பேச்சுக்களைக் கேட்கிறோம். இது காதுக்கு ஆஹாரம். இப்படியே நாம் அனுபோகம் பண்ணுகிறதெல்லாம் நமக்கு ஆஹாரம்தான். இதில் எல்லாமே சுத்தமானதாய் இருக்க வேண்டும். மனசைக் கெடுக்கிற காட்சிகளைப் பார்க்கப்படாது; மனசைக் கெடுக்கிற பேச்சுக்களைக் கேட்கக் கூடாது; அனுபவிக்கிறதெல்லாம் ஈச்வர ஸாக்ஷாத்காரத்துக்கு உதவுகிறவையாகவே இருக்க வேண்டும்.

இப்படி பொதுப்படையாகச் சொன்னாலும், இந்தப் பலவிதப் புலன்-நுகர்ச்சிக்கான ஆஹாரங்களிலும் வாயால் நுகர்கிற ஆஹாரந்தான் முக்கியமாக இருப்பதால் அதைப் பற்றி இவ்வளவு ஆசார விதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதுதான் ஸ்தூலமாக நமக்கு உள்ளேயே போய், தேகம் முழுக்க ரத்தமாக வியாபிக்கிறது; இதுவே சித்தத்தையும் பாதிக்கிறது. ஒரு பக்கம் ஆஹாரமில்லாவிட்டால் மனுஷ்யன் ஜீவிக்கவே முடியவில்லையென்றால், இன்னொரு பக்கமோ அது மித ஆஹாரமாக இல்லாவிட்டால் தேஹத்துக்கும் சிரமம், மனசுக்கும் அசாந்தி என்றாகிறது. வயிற்றிலே திணித்துக் கொண்டே போவதால் சாப்பாட்டுப் பொருளுக்கும் நஷ்டம், காரியம் செய்ய முடியாமலும் நஷ்டம், இவற்றைவிட தியானத்தில் மனசு ஈடுபடாமல் போவது பெரிய நஷ்டம். ஆகையால் 'சோற்றால் அடித்த பாண்டம்' என்றே மனுஷ்யனுக்குப் பேர் இருப்பதால் இந்தப் பாண்டமும், இதற்கு உள்ளேயிருக்கிற மனசும் நல்லபடியாக வளர்வதற்காக ரிஷிகள் காட்டிக் கொடுத்திருக்கும் போஜன விதிகளை மேற்கொண்டு நடத்திக்காட்ட வேண்டும். இதன் முக்கியத்துவமும் அவசியமும் எல்லோருக்கும் புரிவதற்குப் பரமேச்வரனைப் பிரார்த்தனை பண்ணிக் கொள்கிறேன்.

பக்தி, ஞானம், உயர்ந்த குணங்கள், உத்தமப் பண்புகள் ஆகியவற்றால்தான் மனுஷன் மனுஷனாக வாழ்கிறான் என்பது அர்த்தம். இந்தக் குண விசேஷங்கள் விருத்தியாகவும் ஆஹார நியமமே உதவுகிறது என்று நம் சாஸ்திரங்கள் காட்டுகின்றன.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**



# வே.எழிலரசு



பழைய நாட்குறிப்பின்
பக்கங்களைப் புரட்டியபோது
அதில் நமது காதல்
ஒட்டிக் கொண்டிருந்தது.

உன் மனம் தொட்டு, என் இதயம்
கொட்டிய எழுத்துகள் அங்கே
முத்துக்களாக
ஒளி வீசிக்கொண்டிருந்தன.

உனது நாட்காட்டிகள் எங்கே சொல்?
அதைக் கிழித்துப் போட்டாய்தானே?

உன் மனத்தைப் பார்த்தேன்
வழிந்துகொண்டிருந்தன
கவிதைகள்

\- சூர்யநிலா

**ஃபா**தர் நவமணி ஆபிரகாமைத் தமது ஞானத்தந்தையாக மனத்துக்குள் வரித்திருந்த உதயகுமாருக்குப் பெருமையாக இருந்தது. ஆக ஆனந்தின் அப்பாவுக்கும் ஃபாதர்தான் ஞானத் தந்தை.

குடும்ப வருமானத்தின் ஊற்றுக் கண்ணாக இருந்த முத்துக்கருப்பன் இறந்த பின்பு, நிர்க்கதியாக நின்ற ஆனந்தின் அம்மாவை நேரடியாகவும் நண்பர்கள் மூலமும் தேற்றியிருக்கிறார். தமது திருச்சபையில் தமக்கிருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி ஆனந்தின் அம்மா சுயமரியாதையோடு, தமது சொந்த உழைப்பில் வாழ்வதற்கான வழியை ஏற்படுத்தித் தந்துள்ளார்.

ஆனந்தின் எதிர்கால மனநிலையைக் கருத்தில் கொண்டு, ஆனந்த் அப்பாவின் மரணம் குறித்தான தகவல்களை மறைத்துள்ளார். ஆனந்தோடு கடந்த இரண்டு வருடங்களாக நேரடி பழக்கம் ஏற்பட்ட பின்புகூட அந்த நிஜங்கள் வெளிப்பட்டுவிடாமல் மௌனம் காத்துள்ளார். ஆனால் ஃபாதர் எந்தத் தகவல்கள் ரகசியம் என்று கருதினாரோ, எந்தத் தகவல்கள் ஆனந்துக்குத் தெரியக்கூடாது என்று விரும்பினாரோ - அவைகளை ஆனந்த் இது நாள்வரை அறிந்தே வைத்துள்ளான். தமது ஊகத்தின் பாதையில் பயணித்ததோடு நின்றுவிடாமல், தேடித் தேடித் தகவல்களைத் திரட்டியுள்ளான்.

இவை வாழ்வின் தவிர்க்க முடியாத நியதிகள்தான். நாம் ரகசியம் என்று எதையும் மறைத்துவிடவும் முடியாது. அம்பலம் என்று எதையும் வெளிச்சமாக்கிவிடவும் முடியாது. தேடுகிறவர்கள் கண்டடைந்துவிடுவார்கள். ஆனாலும் பாவம் அந்தத் துறவி நல்ல மனத்தோடு இவைகளையெல்லாம் செய்திருக்கிறார். அவரின் இயற்கையான இயல்பின்படி நிர்க்கதியாய் நின்ற ஆனந்தின் அம்மாவுக்கு உதவியிருக்கிறார். அதிலும் அவர்களின் மத உணர்வுகளின் அடிப்படை ஆதாரங்

காதல் + கலாட்டா + கலக்கல் தொடர்கதை

# காதல் ஜெயம் 12

களைச் சேதாரமாக்கிவிடாமல் உதவியிருக்கிறார். இது ஒன்றும் உதயகுமாரைப் பொறுத்தவரை புதிய விஷயமில்லைதான். ஃபாதருக்கு சுவாமி விவேகானந்தர் மீதும் மிகுந்த ஈடுபாடு உண்டு என்பதையும் உதயகுமார் அறிவான். அவ்வப்பொழுது சுவாமிஜியை மேற்கோள்களால் நினைவுபடுத்துவார்.

கோடை விடுமுறைகளில் இலவசத் தொழிற் பயிற்சி முகாம்கள் நடத்திய காலங்களில், மருத் துவத் தன்னார்வக் குழுக்களை வழிநடத்திய காலங் களில், கடற்கரைக் குப்பங்களில் ஃபாதர் ஓய்வின்றி அலைந்திருக்கிறார். அப்பொழுதெல்லாம் பிரசங்கம் நிகழ்த்தாமல் அவர் அவற்றை முடித்தபோது உதயகுமார் கேட்பான், ''ஏன் ஃபாதர் ஜனங்களை முழந்தாளிட்டு ஜெபிக்கச் சொல்லலை?''

ஃபாதர் புன்னகையோடும் உள்ளார்ந்த புரி தலோடும் சொல்வார்...

''பசியால் துடிக்கிறவன்கிட்ட மதப்பிரசாரம் செய்யறதும் தத்துவ போதனை செய்யறதும் அவனை அவமானப்படுத்துவதற்குச் சமம்.''



**ஃபா**தர் பொய் சொல்லிட்டாருன்னு ஆனந்த் உதிர்த்த வார்த்தைகள் காதுகளின்

எல்லைக்குள் வருவதற்குள் மனம் ஒரு பாண்டி ஆட்டம் ஆடிவிட்டது. ஃபாதர் மீது வைத்திருந்த மதிப்பீடு கள் சிறு வயதில் தோன்றிய பிரமிப் பினால் வளர்ந்த ரசிக மனோபாவம் மட்டும்தானா? எனது சிந்தனைத் தராசில் அளக்கப்பட்ட தேர்ந்த கணிப்பு இல்லையா? என்று அக விசாரணை நடந்தது. ஆனால் அதன் பின்பு ஆனந்த் சொன்ன அதிர்ச்சி யான செய்தியும் - அதன் பின்னணி யும் தமது தேர்வும் கணிப்பும் பொய்த்துப் போகவில்லை என்ற ஆறுதலைத் தந்தது.

''எங்க அப்பா அன்னிக்குத்தான் முதன்முதலா எங்க அண்ணன் சிங்காரவேலனைக் கடலுக்குள்ளாற அழைச்சுட்டு போனாரு...''

''தொழில் பழக்கவா?''

''தொழிலா...?'' ஆனந்த் அலுப்புடன் உதட் டைப் பிதுக்கினான்.

''எங்க அம்மா, அப்பாகிட்ட அடிக்கடி சொல் லும். 'யோவ் நீ மட்டும்தான் வலைவீசி மீனைப் புடிக்கணும். எம்புள்ள மனுசங்கள புடிப்பான். உன் வலையில் மாட்டுன மீன் எல்லாம் செத்துப் போயிடும். ஆனா என் புள்ள வீசுற வலையில மாட் டுனவனுக்கு, அப்பத்தான் வாழ்க்கையே பொறக் கும். அதுக்குத்தான் என் புள்ளைக்கி சிங்கார வேலன்-னு பேரு வெச்சுருக்கன்'னு. அம்மா கனவு நிராசையாயிடிச்சு.''

உதயகுமார் 'சிங்கார வேலர்' - என்ற பெயரை உச்சரித்துப் பார்த்தான். ஆனந்தின் அம்மா சாதாரணப் பெண்மணி அல்ல என்று தான் முதலி லேயே எண்ணியிருந்தது உறுதிப்பட்டது.

ஆனந்த் வானத்தைப் பார்த்துப் பெருமூச் செறிந்தவாறு சொன்னான்...

''அன்னிக்கு நல்ல நிலாக்காலம். அண்ணன் கடலைப் பாக்க ஆசைப்பட்டுது.''

''கடலைப் பார்க்கவா?''

''ஆமா. கடலுக்குள்ளாற போனதும் எங்க அண் ணனுக்கும் அப்பாவுக்கும் சாகச மனோபாவம் வந்துடுச்சி. அண்ணன் கச்சத் தீவையும், தீவுல இருக்குற மாதா கோயிலையும் பாக்க ஆசைப் பட்டுடுச்சி. அதுக்கென்னடா மவனேன்னு அப்பாவும் படகை ஓட்டிட்டாரு. அங்க சிங்கள ராணுவம் வந்துட்டுது.''

வானத்தை அண்ணாந்து பார்த்தபடி பேசிக் கொண்டிருந்த ஆனந்தின் உதடுகள் ஆத்திரத் தில் துடித்தன. கண்களில் ஈரம், தீட்டப்பட்ட கத்தி பாய்ச்சப்பட்ட ஒளியில் தகதகப்பது போல் கண்கள் பளீரிட்டன.

உதயகுமார் படபடப்போடு, ''ஸ்ரீலங்கா மிலிட்டரியா?'' என்றான்.

ஆனந்த் 'ஆமாம்' என்று தலை அசைக்க, கண்களில் திரண்டிருந்த அந்தத் திரவக் குண்டு கள் மடியில் விழுந்தன. அடர்த்தியான மௌ னம் உரையாடலின் குறுக்கே விழுந்து விட்



**சேலம் துக்கடா!**

**சே**லம் மாவட்டம் தும்பல், பேளூர், வாழப்பாடி, அஞ்சலக் கோட்டை போன்ற இடங்களில் முக்கிய பணப் பயிர் பாக்கு. இங்கிருந்துதான் தமிழகத்தின் பல பாகங்களுக்கும் பாக்கு ஏற்றுமதியாகிறது. பட்டுக் கோட்டை பாக்கைப் போல தும்பல் பாக்கு துவர்க்காது.

**- கவின்டோனி, மதுரை**

டிருந்தது. என்ன நடந்திருக்குமென்று உதயகுமாருக்கு எளிதில் ஊகிக்க முடிந்தது.

ஆனந்த் எதிர்த் திசையில் முகத்தைத் திருப்பிக்கொண்டு, ''சிங்கள ராணுவம் எங்க அண்ணனை 'பொடியன்' 'பொடியன்'-னு சொல்லிச்சாம்.''

ஆனந்த் 'பொடியன்' என்ற சொல்லை உச்சரித்தபோது பச்சாதாபத்தைவிட பெருமிதம் மேலோங்கி இருப்பதுபோல உதயகுமாருக்குத் தோன்றியது. ஆனந்த் ஏன் சென்னைக்கு அனுப்பப்பட வேண்டும் என்று ஃபாதர் விரும்புகிறார் என்பது சட்டென்று புரிந்துவிட்டது. ஆனாலும் அதை இன்னும் ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள அவன் விரும்பினான்.

ஆனந்த் தம்மை நொடியில் சமன்படுத்திக் கொண்டு, ''என் அப்பாவுக்கும் அண்ணனுக்கும் நடந்த கொடுமையை எனக்குச் சொல்லாம மறைச்சிட்டாங்க. நான் அப்போ விவரம் தெரியாத சின்னப் பையன். அப்பா போன படகு புயல்ல மாட்டிக்கிச்சுனு சொன்னாங்க. நான் வளர்ந்த பிறகும்கூட, எனக்கு விவரம் தெரிஞ்ச பிறகும்கூட அதை யாரும் சொல்லலை. எனக்கு அதெல்லாம் தெரியக் கூடாதுங்கறது ஃபாதரோட கட்டளை. உங்களுக்குத் தான் தெரியுமே. இங்க ஃபாதர் சொல்றது தேவ வாக்காச்சே...''

உதயகுமார் ஆமோதிப்பதுபோல் தலையாட்டினான். ஆனாலும் இது தொடர்பான தமது கருத்தையும் ஆனந்திடம் பதிவு செய்துவிட வேண்டுமென்று விரும்பினான். அதனால் கேட்டான்.

''ஃபாதர் ஏன் அப்படி மறைச்சாருன்னு நினைக்கிற?''

ஆனந்த் கொஞ்சமும் தயங்காமல், தெளிவாக, சரியான மறுமொழியைச் சொல்வான் என்று உதயகுமார் எதிர்பார்க்கவில்லை. ஆனந்தை சமாதானப்படுத்த வேண்டுமென்று மனத்துக்குள் ஒத்திகைப் பார்த்த தமது சொற்களையே ஆனந்தும் தேர்ந்து சொல்வான் என்று எதிர்பார்க்கவில்லை.

''என்னோட எதிர்கால நன்மைக்குத்தான்; என்கிட்ட அதைச் சொல்லாம மறைச்சுட்டாரு. பக்குவமில்லாத வயசுல பழிவாங்குற உணர்வுல, நான் ஏதாவது இயக்கத்துல சேர்ந்து, என் படிப்பைப் பாழாக்கிடக் கூடாதேங்கற நல்லெண்ணத்துலதான் ஃபாதர் எனக்கு எதுவும் தெரிய வேண்டாம்னு விரும்புனாரு.''

உதயகுமாருக்குத் திருப்தியாக இருந்தது. ஒரு நல்ல சினேகிதனைத் தான் ஃபாதர் தமக்காகத் தேர்ந்து இருக்கிறார்.

ஃபாதர் ஆனந்தின் மீதுள்ள கருணையினால் இதைச் செய்கிறாரா...? அல்லது என் மேல் உள்ள அன்பின் காரணமாக இதைச் செய்கிறாரா? ஃபாதர் செய்கின்ற உதவி ஆனந்துக்கா? எனக்கா?

உதயகுமாரின் சிந்தனையைக்

## சேலம் துக்கடா!

மேட்டூர் அணை அமைந்திருக்கும் இடம் ஒரு காலத்தில் விவசாய நிலமாம். கிட்டத்தட்ட பதினைந்துக்கும் மேற்பட்ட கிராமங்களை விழுங்கிவிட்டுத் தான் மேட்டூர் அணை எழும்பியிருக்கிறது. தண்ணீர் வற்றிப் போகும் சமயத்தில் நீர்ப்பிடிப்பு பகுதியில் மூழ்கியிருக்கும் கோயில் தலைகாட்டுவதே இதற்கு சாட்சி.

- சச்சிதானந்தம், மேட்டூர்



கலைப்பது போல ஆனந்த் ஒரு கேள்வியை வீசினான்.

"என்ன இருந்தாலும் ஃபாதர் ஒரு மதத்தின் பிரதிநிதிதானே?"

"ஏன் அப்படிச் சொல்ற?"

"எல்லா மதமும் போராளிகளுக்கு எதிர்நிலையிலதான் நிக்கும்?"

"இதை இப்படிப் பொத்தாம் பொதுவா, ஒத்தை வாக்கியத்துல சொல்லிட முடியாது ஆனந்த். இது நிறைய விவாதிக்க வேண்டிய விஷயம்..."

"எனக்குத் தெரிஞ்ச எந்த தர்க்கமும் உண்மையை நோக்கிப் பயணிக்கிறது இல்லை. அகந்தையை நோக்கித்தான் பயணமாகும்."

ஆனந்த் சொல்லியதில் மறைமுகமாய் வெளிப்பட்ட தத்துவார்த்த உண்மை உதயகுமாரைப் புன்னகைக்க வைத்தது.

ஆனந்த் மென்மையாகச் சிரித்துக் கொண்டே சொன்னான்.

"இப்போ நான் சென்னைக்குப் போயாகணும்-னு ஃபாதர் ஏன் துடிக்கிறார் தெரியுமா?"

"ஏன்?"

"இங்க இப்போ மீனவர் பாதுகாப்புப் பேரவை-ன்னு புதுசா ஒரு இயக்கம் ஆரம்பமாயிருக்கு. அதுல என்னை மாதிரி சின்ன வயசுப் பசங்களையெல்லாம் சேத்துக்கறாங்க."

"அப்படியா?"

"ஆமா. என்னைக்கூட துணைச் செயலாளர் பதவிக்கு நாமினேட் பண்ணணும்-னு விரும்பறாங்க. இந்த விஷயம் ஃபாதருக்கும் தெரியும்."

"இதுமாதிரி பொது அமைப்புல பொறுப்பேத்துக்கினு செயல்படறது நல்ல விஷயம்தானே? தனி மனிதனா சாதிக்க முடியாததையெல்லாம் அமைப்பா செயல்பட்டா சாதிக்க முடியுமே?"

"ஃபாதர் அதை விரும்பல."

"ஏன்?"

"ஏன்னா... இந்த அமைப்போட கொடியில வெறும் மீன் படம் மட்டுமில்ல..."

"அப்போ..."

"சின்னதா ஒரு வில்லும், பெரிசா ஒரு புலியும் கூட இருக்கு."

உதயகுமார், ஆனந்தின் முகத்தையே பார்த்தான். அவனால் எதையும் படிக்க முடியவில்லை. எனவே கேட்டான்.



**"எனக்குத் தோத்துப் போறதிலயும் செத்துப் போறதிலயும் சம்மதமில்லை."**

"சரி. உன்னோட விருப்பம் என்ன? நீ அந்த அமைப்புல சேரப்போறியா?"

"எனக்குத் தோத்துப் போறதிலயும் செத்துப் போறதிலயும் சம்மதமில்லை."

"அப்போ...?"

"ஜீவனில்லாத மானங்கெட்ட வாழ்க்கையை வாழறதுக்கும் விருப்பமில்லை."

"அதனால..."

"அதனால படிக்கப்போறேன். படிப்பு என்னை அறிவாளியா மாத்தும்-னு நம்பறேன். அறிவு மானத்தை இழந்துடாத உணர்வை கொடுக்கும்-னு நம்பறேன். அறிவும், தன்மானமும் நான் இழந்தவைகளை மீட்டெடுக்கும்னு நம்பறேன். அதனால நான் படிக்கப்போறேன்."

"அப்ப சென்னைக்குப் போலாம்"-னு சொல்லிக் கொண்டே எழுந்து நின்றான் உதயகுமார். ஆனந்தும் எழுந்து நின்றான். **(தொடரும்)**

# சேரனின் தெய்வம்!





சேலத்தின் எல்லா மாரியம்மன் கோயில்களுக்கும் தலைமை பீடம், கோட்டை மாரியம்மன். கூடவே சேர நாட்டை ஆண்ட சிற்றரசர்களின் காவல் தெய்வம். சேலத்தில் நடக்கும் மிகப் பெரிய திருவிழா, கோட்டை மாரியம்மன் கோயில் திருவிழா தான். கோயில் அளவில் சிறியது. ஆனால், சக்தியில் பெரியவள். திருமணிமுத்தாறு ஆற்றுப் படுகையிலிருந்து 26 அடி உயரத்திலிருக்கிறது அம்மனின் கருவறை. நீருக்கும் நெருப்புக்கும் மூலம் மாரியம்மன். அதனால் தான் இங்கே அக்னி திசையில் வலது காலை ஊன்றியும் இடது காலை மடக்கியும் இவள் அமர்ந்திருப்பது வீராசனக் கோலத்தில். பொதுவாக அம்மன் கோயில்களில் அரக்கன் தலை அவள் காலடியில் இருக்கும். இங்கு இருப்பது தாமரை.

சேலம் மாநகரத்துக்கு இரண்டு காவல் தெய்வங்கள். திருமணி முத்தாற்றின் கிழக்குக் கரையில் கோட்டை மாரியம்மன்; மேற்குக் கரையில் எல்லைப் பிடாரி. மற்ற கோயில்களைப் போல சூரிய, சந்திர கிரகண நேரங்களில் இங்கே கோயில் நடை சாத்தப்படுவது இல்லை. கிரகண ஈர்ப்புக்கெல்லாம் கட்டுப்படாத பராசக்தியின் அம்சம் இவள். இந்நாட்களில் இங்கு வந்து வழிபடுவோருக்குத் தம் எல்லையற்ற சக்தியின் பலன்களை மாரியம்மன் வழங்குகிறாள். வெயில் உக்கிரத்தால் அம்மை நோய் கண்டால், கோட்டை மாரியம்மன் கோயில் பலி பீடத்தில் உப்பு, மிளகாய் போட்டுப் பிரார்த்தனை செய்ய, உடனே உக்கிரம் தணிந்துவிடுவது அனுபவ நம்பிக்கை. வெல்லம் கலந்த இடித்த பச்சரிசி மாவு, பாயசம், மாவிளக்கு, பனை வெல்லம் கலந்த கம்பு பானகம் என்று பக்தர்கள் அன்றைக்குப் படைக்கிறார்கள். பிரார்த்தனைப் பொருட்களாக கண்மலர், மண் உரு, உலோகத்தால் ஆன கை, கால், வயிறு ஆகியவற்றை அளிக்கின்றனர். அங்கப் பிரதட்சணம், அடிப் பிரதட்சணம், முடி காணிக்கை என்றும் பிரார்த்தனைகளை நிறைவேற்றுகிறார்கள்.

ஆடி மாத விழாக்களில், கோட்டை மாரியம்மனுக்குப் பூக்களை எடுத்து வந்து பூச்சாட்டு முடித்துவிட்டுத்தான் சேலம் நகரத்தில் உள்ள தாதகாபட்டி, செவ்வாய்ப்பேட்டை, அம்மாபேட்டை, பொன்னம்மாபேட்டை, சஞ்சீவிராயன்பேட்டை, அன்னதானப்பட்டி, பட்டகோயில், குகை ஆகிய அம்மன் கோயில்களில் பண்டிகையைத் தொடங்குகிறார்கள்.





வாசகர் யோசனை:

**ராஜகுமாரி, சென்னை**

கனவு பல காட்டல்!

# எல்லாம் சம்மதம்!



ஞானக்கூத்தன்

அகம், புறம் என்பதில் அகம் என்பது வீடு. புறம் என்பது வெளி. 'அவர் இருக்கிறாரா?' என்று கேட்டால் 'ஆம். அவர் உள்ளே இருக்கிறார்' எனவும் 'இல்லை. அவர் வெளியே போயிருக்கிறார்' எனவும் பதில் கிடைக்கும். வெளி என்பது குறிப்பிடப்படாத இடம். ஆனால், ஒரு நிகழ்ச்சி என்பது அகம், புறம் இரண்டிலும் நடக்கும். எனவே மனிதன் எப்போதும் ஒரு நிகழ்வில் பங்கு கொண்டவனாகவே இருக்கிறான்.


● தாரா கணேசன்



தேவதச்சன் 'என் எறும்பு' என ஒரு கவிதை எழுதியிருக்கிறார். கவிதையின் நாயகனுடன், அதுவும் ரயிலில், பயணம் செய்கிறது. அப்போது,

*அருகில் இருந்த வயதான*
*மனிதன்*

*அதை*
*நசுக்கிக் கொல்ல முயன்றான்*




6

கொன்றுவிட்டான்.
இறந்து கிடக்கும் என் எறும்பைத்
தூக்கிச்
செல்ல யார் வருவார்கள்
இன்னும் சில எறும்புகள் இன்னும்
சில
எறும்புகள்.

எறும்பை 'என்' என்று சொந்தம் சொல்வதும் பின்னர் எறும்புக்கு நிகழ்வதைக் கூறுவதிலும் ஒரு 'சூழ்ச்சி' தெரிகிறது.



ஆனால், தாரா கணேசனின் ஒரு கவிதையில் வரும் நாயகன் வேறு வித மானவன். அவனது வினை செய் இடமும் விநோத மானது. இடம் 'செத்த காலேஜ்' என்று மக்களால் அழைக்கப்பட்டு வந்த அருங்காட்சி அகம். நாயகனை இப்படி அறிமுகப் படுத்துகிறார் கவிஞர்.



✱ தேவதச்சன்

வியர்வை புழுங்கிய
கோடை மதியத்தில்
என்ன செய்வதென
யோசிக்க
முதலில் போகத்
தோன்றிய இடம்
அருங்காட்சியகம்

உள்ளே போக வேண்டுமென்று கூட
அவசியமில்லை
வேர்க்கடலை கொறித்துக்கொண்டே
வேடிக்கை பார்க்கலாம் சற்று

**கோ**டை மதியத்தில் பொழுது போக்க முடியாத ஒருவனின் மனநிலையைக் கவிதை வெளிப்படுத்துகிறது. ப்பது வரிகளுக்கு மேல் நடக்கும் க்கவிதையைத் தாரா கணேசன் இப்படி டிக்கிறார்.

நடக்கவோ சூழ்கவோ
புதையவோ இருக்கவோ இறக்கவோ
எல்லாம் சம்மதம் என்றே
தோன்றுகிறது

கவிதையின் கடைசி வரிகள் வெளிப்படுத்தும் மனநிலைக்குப் பொருத்தமான இடமாக அருங் காட்சியகம் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கிறதோ? உள்ளே போக வேண்டிய அவசியம்கூட இல்லை என்று சொல்லப்பட்டிருப்பது கவிதை நாயகனின் அனுபவம் காரணமோ? உள்ளே என்ன இருக்கிறது என்பது தெரிந்து விட்டதால் உள்ளே போக அவசிய மில்லாமல் போய் விடுமா?

அருங்காட்சியகத்துப் பொருள்களின் 'இருத்தல் வகைமை'யால் ஈர்க்கப்பட்டவர் ஏன் வெளியே நின்று வேடிக்கை பார்க்க விரும்புகிறார்? ஒரு விஷயம் கவனித்தீர்களா? வேடிக்கை பார்க்கப்பட்டவர்களுக்கு அசைவு இருக்கிறது. ஆனால் வேடிக்கை பார்ப்பவரிடம் இல்லை. பார்க்கப் போனால் இவரும் ஒரு சிலைதான்.

(அடுத்த வாரம் பார்ப்போம்...)

## 05.12.2010 முதல் 11.12.2010 வரை

## தஞ்சை பரத்வாஜ்



### மேஷம்

நல்ல யோகமான வாரம் இது. உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கடல் கடந்து செல்லும் யோகம் கிட்டும். உத்தியோகத்தில் பாராட்டுதலைப் பெறுவீர்கள். பணக் கஷ்டம் இருக்காது. இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். கல்வி வளம் மேலோங்கும். குரு வழிபாடு செய்து வந்தால் சங்கடங்கள் தீரும்.




### ரிஷபம்

திருமணம் தடை விலகிக் கைகூடும். குடும்ப வாழ்வில் இருந்து வந்த சண்டை சச்சரவுகள் விலகி அமைதி நிலவும். வராத நிலுவைகள் வந்து சேரும். விலகிப் போனவர்கள் வந்து சேருவார்கள். சொத்து வாங்கும் யோகம் உண்டு. இல்லற வாழ்க்கை இனிமையாக இருக்கும். குழந்தைகள் பற்றின கவலை தீரும். ராகு / கேதுவை வழிபட நன்மை உண்டாகும்.



### மிதுனம்

தூரதேச அழைப்பு வந்து சேரும். வீடு மாற்றம் தவிர்க்க இயலாது. கல்வி வளம் மேலோங்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். பணப் பிரச்னை தீரும். எதிர்ப்புகள் விலகும். சுப நிகழ்ச்சி நடக்கும். உடல்நிலை சீராகும். வேலையில் இடமாற்றம் ஏற்படும். சிலருக்குப் புதிய வேலை வாய்ப்பு வந்து சேரும். சனிபகவானை வழிபட்டு வர நற்பலன் உண்டாகும்.




### கடகம்

அயல்நாட்டு மனிதர்களால் நல்ல தகவல் வந்து சேரும். பொருளாதார நெருக்கடி விலகும். மன பயம் விலகும். சுபகாரியம் கைகூடும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். குழந்தைகள் இடம்மாறிச் செல்வார்கள். பண வருவாய் மிகுதியாகும். வீடு / மனை வாங்க நல்ல நேரம் இது. மகப்பேறு பாக்கியம் கிட்டும். குழந்தைகள் மூலம் சந்தோஷம் உண்டாகும்.



### சிம்மம்

வாக்குவன்மை மேலோங்கும். தொழில் துறையில் இடமாற்றம் உறுதி. பணக் கஷ்டம் இருக்காது. எதிரிகளால் தொல்லை அதிகரிக்கும். குழந்தைகள் இடம்மாறிப் போவார்கள். பூர்வீகச் சொத்து கை மாறிப் போகும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.



### கன்னி

நீண்டகாலப் பிரச்னை முடிவுக்கு வரும். உற்றார் உறவினர்களின் தொல்லை நீங்கும். மன அமைதி ஏற்படும். சுபகாரியப் பேச்சு வார்த்தை பலன் அளிக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். சத்ரு தொல்லை நீங்கும். கடன் சுமை தீரும். வீடு மாற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். சனி / ராகு / கேதுவை வழிபட்டு வர நற்பலன் உண்டாகும்.

# நடக்குமென்பார்; நடக்கும்!



## துலாம்

புண்ணிய ஸ்தலம் சென்று குலதெய்வ வழிபாடு செய்து வாருங்கள். மகான்களின் தரிசனம் கிட்டும். அனாவசியமான செலவுகள் தேடி வரும். சிலருக்குக் கடல் கடந்து போகும் யோகம் கிட்டும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சனி / குருவை வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.




## மகரம்

வேலையில் உயர்வு ஏற்படும். புதிய வேலை வாய்ப்புத் தேடி வரும். கடன் சுமை தீரும். எதிரிகளால் தொந்தரவு இருக்காது. நீண்ட தூரப் பிரயாணம் தேடி வரும். பணப் பிரச்னை இருக்காது. ஆரோக்கியம் / குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். புதிய தொழில் முயற்சி பயன் அளிக்கும். அயல்நாட்டு மனிதர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரும்.



## விருச்சிகம்

மனத்தில் உற்சாகம் மிகுந்து காணப்படும். குழந்தைகள் மூலம் சுபச் செலவு ஏற்படும். வீடு / மனை வாங்க சிறந்த காலம். உடல் ஆரோக்கியம் சீராகும். வாகனத்தில் செல்லும்போது உஷார். இல்லற வாழ்வில் இருந்துவந்த பிரச்னை தீரும். யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். ராகு / கேதுவை வழிபட்டு வர நற்பலன் உண்டாகும்.



## கும்பம்

தன யோகம் வாய்க்கும். புதிய பொருட்சேர்க்கை உண்டாகும். குழந்தைகள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். தூரதேச அழைப்பு வீடுதேடி வரும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். ஆரோக்கியம் பாதிக்காது. பண வசதி பெருகும். நண்பர், உறவினர் மூலம் ஆதாயம் கிட்டும். ராகு / கேது / சனியை வழிபட்டு வர நற்பலன் உண்டாகும்.



## தனுசு

மனசஞ்சலம் தீரும். இல்லற வாழ்வில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. நண்பர்கள் / உறவினர்கள் மூலம் உதவி கிட்டும். வேலையில் இடமாற்றம் உண்டாகும். வீடு மாற்றம் ஏற்படும். வாக்கு வன்மை மேலோங்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். குழந்தைகள் இடம் மாறிப் போவார்கள். ராகு / கேது / சனியை வழிபட்டு வர நற்பலன் உண்டாகும்.



## மீனம்

உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். கடன் பிரச்னை தீரும். பூமி மூலம் ஆதாயம் கிட்டும். கோர்ட் வழக்கு முடிவுக்கு வரும். நல்ல வேலைவாய்ப்புத் தேடிவரும். மன சஞ்சலம் தீரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கடன்சுமை தீரும். வீடு மாற்றம் உண்டாகும். ராகு / கேது / சனியை வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்..




கர்வம்தான். என் கர்வத்துல சில பேரையாவது பங்கெடுக்க வைக்கணும் என்பதும் என் சிறிய ஆசை. அனாதைப் பிணங்களை மரியாதையோடு அடக்கம் செய்யும் என் செயல்பாட்டுல பெண்களையும் இணைச்



# தயாநிதிக்குத் தகவல் சொல்லிடுங்க!

'என்னது ரோட்டு ஓரமா ஒருத்தன் செத்துக் கிடக்கறது யாருன்னே தெரியலையா? சொந்தக்காரங்க யாரும் தேடிட்டு வரலையா? என்னய்யா இது ஒரே வம்பா இருக்கு. வெயிட் பண்ணிப் பார்ப்போம். இல்லைன்னா 'லைஃப்' தயாநிதிக்குச் சொல்லிவிடுவோம். அவர் எடுத்துட்டுப் போயி சகல மரியாதையோட அடக்கம் செஞ்சிடுவார்' - சேலம் வட்டாரத்தில் இப்படித்தான் பெரும்பாலும் தெரிய வருகிறார் லைஃப் ட்ரஸ்ட் தயாநிதி. அடிப்படையில் உடற்கல்வி ஆசிரியர். ஆனால் ஆர்வமெல்லாம் சேவையில்தான். இவரோடு இந்தப் பணியில் ஈடுபடுபவர்கள் எல்லோரும் பெண்கள் என்பது கூடுதல் ஆச்சர்யம்...

''காதல் திருமணம் மட்டும் செஞ்சுக்கலைன்னா என்னால இந்தமாதிரி சேவைகள்ல ஈடுபட முடிஞ்சிருக்காது'' என்கிற தயாநிதியின் மனைவி மதலைமேரி இடைநிலை ஆசிரியர். குழந்தைகள் காப்பகத்தில் வளர்ந்தவர்.

''மக்களுக்குச் சேவை செய்யணும் என்கிற எண்ணம் எல்லோருக்கும் வந்துடாது. அதுக்குன்னே பிரத்தியேகமானவர்களைக் கடவுள் படைக்கிறார்னு நம்புறேன். அந்த வகையில் நான் கடவுளுக்கு நெருக்கமானவன்ங்கறதுல எனக்கு எப்பவுமே தனி

சுக்கிட்டது அதோட வெளிப்பாடுதான்.

விழுப்புரம் ஒடுவாங்குப்பதுல 1000 கழிப்பிடங்களை என் முயற்சியால அரசாங்க உதவியோடு கட்டுனதுதான் தொடக்கப் புள்ளி. அது முற்றுப் புள்ளி ஆகாம இன்னைக்கு வரைக்கும் தொடர்துன்னா அது கடவுளோட ஆசீர்வாதமில்லாம வேறு ஒண்ணுமில்லை'' என்கிற தயாநிதிக்குச் சொந்த ஊர் விழுப்புரம் மாவட்டம் கக்கனூர் கிராமம். கல்யாணம் செய்துகொண்டு சேலம் வந்த பிறகு ஆறு மாதம் சும்மாவே இருந்திருக்கிறார். திருமணிமுத்தாற்றில் அந்தச் சம்பவம் நடக்கும் வரை....

''அன்னைக்கு மணிமுத்தாற்றுப் பாலத்துல கொஞ்சம் கூட்டம். உள்ளே எட்டிப் பார்த்தா நடுத்தர வயதில் ஒருவர் இறந்து கிடக்கிறார். கூட்டம் உச்சுக்கொட்டி பரிதாபப் பட்டுட்டு விலகிப் போய்கிட்டே இருக்குது. மனுஷ உயிர்க்கு அவ்வளவுதானா

மதிப்புன்னு எனக்குள்ள கேள்விகள் ஆதங்கமா உருவெடுக்க ஆரம்பிச்சது. மறுநாள் காலையில பிரார்த்தனை முடிஞ்சதும் என் மனைவியைக் கூப்பிட்டு என்னோட பாதை இனி சேவைதான். என்னால குடும்பத்துக்கு எந்தவித உதவியும் இருக்காது. நீதான் பார்த்துக்கணும்னு சொல்லிட்டு முறைப்படி ட்ரஸ்ட் ஆரம்பிக்கற வேலையில் இறங்கிட்டேன்,'' என்று லைஃப் ட்ரஸ்ட்டின் ஆரம்பப் புள்ளியைச் சொல்கிற தயாநிதியின் காலை வேலையே நியூஸ் பேப்பரில் அனாதைப் பிணங்களாக இறந்து கிடக்கின்றனர் என்ற செய்தி வந்திருக்கிறதா என்று பார்ப்பதுதான். லைஃப் ட்ரஸ்ட்டின் இந்தச் செயல்பாடுகள் நாளடைவில் வெளியே தெரியவர மக்களே இவருக்கு ஃபோன் செய்து தகவல் சொல்ல ஆரம்பித்துவிட்டனர்.



*தயாநிதி

வேறு என்னவெல்லாம் செய்றீங்கன்னு கேட்டால் ஒரு பட்டியலை அடுக்குகிறார் தயாநிதி. ''லைஃப் ட்ரஸ்ட் மூலமா முன்னூறுக்கும் மேற்பட்டவங்களுக்கு இலவசமா கம்ப்யூட்டர் கோர்ஸ் (DCA) சொல்லித் தந்திருக்கோம். இதுல பத்துக்கும் அதிகமானவங்க BPOல ஒர்க் பண்ணறாங்க. நாங்க நடத்துற இந்தக் கிளாஸ்ல சேர்றதுக்கு ஒரே ஒரு கண்டிஷன், கம்ப்யூட்டர் படிக்க ஆர்வமிருந்தும் அதுக்குப் பொருளாதார ரீதியா வசதி இல்லாதவங்களா இருக்கணும். விதவைகளுக்கு முன்னுரிமை. அதில்லாம 75க்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்கள் இயங்கிக்கிட்டிருக்கு. அவங்களுக்கு லைஃப் ட்ரஸ்ட் முயற்சியில வங்கிக்கடன் வாங்கிக் கொடுத்து கௌரவமா வாழ வெச்சுருக்கோம்.



அனாதையாகச் சாலையோரங்களில் சுற்றித் திரிபவர்கள் யாரையும் அனாதையாகச் சாகவிடக்கூடாது. அவர்களுக்கு என்று தனியாக ஒரு ஹோம் ஒன்றை ஆரம்பிக்கணும். அதுக்காக சேலத்தில் நல்லுள்ளம் கொண்ட புரவலர்களைத் தேடிக் கொண்டிருக்கிறது லைஃப் ட்ரஸ்ட்,'' என்கிற தயாநிதியின் சேவையைக் கௌரவப்படுத்தும் நோக்கில் சேலம் கார்ப்பரேஷன் லைஃப் ட்ரஸ்ட்டுக்கு ஒரு ஆம்புலன்ஸை வழங்கி இருக்கிறது.

லைஃப் ட்ரஸ்ட் ஒரு தனியாரின் வணிக வளாகத்தில் இயங்கி வருவதால், வளாகத்துக்கு முன் ஆம்புலன்ஸ் நிற்பதை அபசகுனமாக நினைத்த சில 'நல்ல உள்ளங்கள்' அந்த வணிக வளாகத்திலிருந்து லைஃப் டரஸ்ட்டை வெளியேற்றும்படி நெருக்குதல் கொடுத்து அதில் வெற்றியும் பெற்றிருக்கின்றனர். ''இதெல்லாம் சகஜம் ஸார்'' என்று சிரிக்கிறார் தயாநிதி.



**வாசகர் யோசனை:**
**மைதிலி ஆராவமுதன்-சேலம்**

# நியூஸ்






ஆனைமடுவு என்கிற புழுதிக்குட்டை

சேலம் வசிஷ்ட நதிக் கரையில் இருக்கும் பஞ்சபூதத் தலங்களில் (வசிஷ்ட மாமுனியால் பிரதிஷ்டையான லிங்கங்களைக் கொண்ட கோயில்கள் என்கிறது தலபுராண வரலாறு) ப்ருத்வி (நிலம்)க்கு உரிய தலம் பேளூர் ஈஸ்வரன் கோயில். இதன் இடது புறத்தில் நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது ஆனைமடுவு டேம். வசிஷ்ட நதிக்கரையில் இருக்கும் பெரிய டேம் இதுதான். ஆனால் வசிஷ்ட நதிக்கும் இதற்கும் எந்த ஒட்டு உறவும் இல்லை. கிழக்கில் நெய்யமலை; மேற்கில் மயில் சுரடு; வடக்கில் நொச்சுக் கோட்டை; தெற்கே 67 அடிகள் உயரத்தில் அணை.

இதற்கிடையில் தண்ணீர்த் தேங்கித் ததும்பி நின்று ஐந்து வருஷமாயிற்றாம். "அப்படித் தேங்கிடுச்சுன்னா 5011 ஏக்கர் நிலங்களுக்கு இங்கிருந்து பாசனத்துக்குத் தண்ணி போகும்" என்கிறார் இதன் பாது காப்புப் பணியில் இருக்கும் கந்தசாமி. டேம் கட்டிய பிறகுதான் பெயர் ஆனைமடுவு என்றாயிருக்கிறது. அதற்கு முன்பு பெயர் புழுதிக்குட்டை. முக்கால் கிலோ மீட்டர் நீளம். மற்றபடி யானைக்கும் இந்த அணைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை!

**வாசகர் யோசனை:**
**நிரஞ்சனி, சென்னை**

## சாட்சிக்கு போலிஸ் சிலை!





வாழப்பாடி சிங்கிபுரத்துல ஆண்கள் மட்டுமே வழிபட அனுமதிக்கும் கோயில் ஒண்ணு இருக்கு. அது ரொம்பவும் துடியான சாமின்னு நம்மை அழைச்சுட்டுப் போனார் கல்கி வாசகர் வாழப்பாடி சுந்தரவடிவேல் சிங்கிபுரத்துலேர்ந்து இறங்கி ஒரு கி.மீ. காட்டுக்குள்ள நடந்தா அஞ்சலாங்குட்டை முனியப்பன் அருள்பாலித்துக்கொண்டிருக்கிறார். "அஞ்சலாங்குட்டையார்கிட்ட நியாயமான வேண்டுதல் வெச்சா வீடு போறதுக்குள்ள நிறைவேறிடும்" என்கிறார் பரம்பரை பூசாரி ஜெயராஜ். இதைக் கேள்விப்பட்டு சென்னையிலிருந்து

# ஏ ங் தி ப வ ன்

### காந்திஜி தங்கிய போஸ்ட் ஆபிஸ்!

தேசத் தந்தை காந்திஜி சேலத்தில் வை.நடேசபண்டாரம் அவர்களின் விருந்தினராகத் தங்கிய வீடு இப்போது சேலம் அஸ்தம்பட்டி அஞ்சலகமாக இயங்கி வருகிறது. இது சேலம் ஆர்ட்ஸ் காலேஜுக்கு எதிர்ப்புறம் செல்லும் வீதியில் இருக்கிறது. 1934ஆம் ஆண்டில் காந்திஜி தங்கிய அறையில் அடையாளமாக அவரது புகைப் படமும் மார்பளவு சிலையும் நிறுவப்பட்டிருக்கின்றன. சேலத்துக்கு அருகிலிருக்கும் திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்துக்கு அவர் விஜயம் செய்தபோது, சில ஆலோசனைகள் செய்யும் பொருட்டுதான் காந்திஜி இங்கு வந்து தங்கி இருக்கிறார். அஞ்சலகம் திறந்திருக்கும் நேரத்தில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். அஞ்சலகத்துக்கு இடையூறு ஏற்படாவண்ணம் தேசப்பிதா தங்கியிருந்த அறையைப் பார்த்துப் பரவசப்படலாம்!

**வாசகர் யோசனை: இடைப்பாடி அமுதன், சேலம்**






### புத்தருக்குப் பொங்கல்!

இன்றைக்கு சேலத்தின் பொதுமருத்துவமனையின் எதிர்ப்புறம் தலைவெட்டி முனியப்பராக அருள்பாலித்துக் கொண்டிருப்பவர் புத்தர். காஞ்சி மகேந்திர பல்லவர் காலத்தில் சேலத்தில் பௌத்த மதம் இருந்ததற்கான அடையாளம்தான் இந்தப் புத்தர் சிலையும், ஆறகளூர்க்கு அருகே ஆளுயர புத்தர் சிலைக்கு மக்கள் பொங்கலிடுவதும். தலைவெட்டி முனியப்பர் என்றாகிப் போன புத்தர் அவருக்கே உரிய தியான நிலையில் வீற்றிருக்கிறார். சேலம் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் இந்தக் கோயிலுக்கு பூஜை செய்வதற்காக பூசாரி ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**வாசகர் யோசனை: இரா.கணேசன், சேலம்**



ஒரு தொழிலதிபரும் வழிபாட்டுக்காக வந்திருந்தார். அவர் நடிகர் கட்சியில் முக்கிய பொறுப்பில் இருப்பவர். ''ஏன் ஆண்களுக்கு மட்டும் அனுமதி''ன்னு கேட்டா? ''கோயில் காட்டுக்குள்ள இருக்கு. சரியான பாதை கிடையாது. அதனால பெண்கள் வந்தா சிரமமா இருக்கும்னுதான் அனுமதிக்கறது இல்லை.வேறெந்தக் காரணமும் கிடையாது'' என்கிறார் ஜெயராஜ். கோயிலில் இருந்த போலிஸ் சிலை நம்மை ஈர்த்தது. புரிந்து கொண்ட பூசாரி, ''போலிஸ் உத்தியோகம் வேணும்னு வேண்டுதல். நிறைவேறுன பிறகு சாட்சி சிலை செஞ்சு வெச்சுருக்காங்க'' என்றார் அவர்.

**வாசகர் யோசனை : சுந்தரவடிவேல், வாழப்பாடி**

**கா**தலுக்கும் நட்புக்கும் இடையே சிக்கித் தவிக்கும் முன்னாள் கமாண்டரின் உணர்வுகளின் தள்ளாட்டம்தான் 'மன்மதன் அம்பு' படத்தின் கதை. கமாண்டராக கமல். ஆக்ஷனுக்கும் அட்வெஞ்சருக்கும் முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப் பட்டிருக்கும் படத்தில் அனைத்து காட்சிகளை மையச்சரடாக இணைப்பது காமெடி தானாம். மேடி மாதவனுக்கு தொழி



'மன்மதன் அம்பு'

**'அ**ம்மு' என்ற குறும்படத்தை இயக்கி 2005 ஆம் ஆண்டு தங்கப்பதக்கம் வென் ரமேஷ், முதல்முறையாக இயக்கும் படம் தம்பிக்கோட்டை. ''தம்பிக்கோட்டை கிராமத்துக்கு, காலேஜ் என்.என்.எஸ். மூலம் பாலம் கட்டப்போகும் ஹீரே அங்கு ஹீரோயினோடு சேர்ந்து காதல் பாலம் கட்டுவதுதான் கதை படையப்பாவில் ரம்யா கிருஷ்ணன் மிரட்டியது போல தம்பிக்கோட்டையி சங்கீதா மிரட்டுவார்'' என்கிறார் அம்மு ரமேஷ். பாலத்தையு ஒரு கேரக்டராகவே நடிக்க வைத்திருக்கிறாராம். படத்தின் முத பகுதியில் சந்தானத்தின் காமெடியும் இரண்டாம் பகுதியி எம்.எஸ்.பாஸ்கரின் காமெடியும் தவிலின் இரண்டு பக்கங்க போல கொட்டி முழுங்கி இருக்கின்றனவாம்!



**'சி**ங்கம்' படத்தின் வெற்றிச் சூடு தணிவதற்குள் தனுஷை வேங்கையாகப் பாயத் தயாராகிவிட்டார் இயக்குனர் ஹரி. படிக்காதவன் படத்தில் ஜோடி சேர்ந்த தனுஷ் - தமன்னா கூட்டணியில் படம் ஸ்பீடும் ஃபைட்டுமாக வளர்ந்து வருகிறதாம். சண்டக்கோழியில் ராஜ்கி



# ஆக்ஷன் லிட்ரேச்சர்



லதிபர் வேடம். கே.எஸ்.ரவிக்குமார் கம லோடு பணியாற்றும் ஐந்தாவது படம் இது. மற்ற நான்கும் சூப்பர் டூப்பர் ஹிட். ஓர் உல்லாசக் கப்பல் பயணத்தைத் தொடங்கும்போதுதான் கதையும் தொடங்குகிறதாம். கப்பலோடு சேர்ந்து கதையும் பயணிப்பது போல திரைக் கதையை அமைத்திருப்பதுதான் ஹை லைட்டாம். கதைப்படி த்ரிஷா, மாதவ னுக்குதான் ஜோடி. கமலுக்கு இல்லை...

ணின் உக்கிரமான நடிப்பில் மயங் கிய ஹரி, இந்தப் படத்தில் அதே உக்கிரத்தோடு ஒரு பாத்திரத்தை ராஜ்கிரணுக்கென உருவாக்கி இருக்காராம். ஹரியின் எல்லாப் படத்தைப் போலவும் வேங்கையிலும் அருவா அசால்டா விளையாடுமாம். தேவிஸ்ரீபிரசாத்தின் இசையில் விவேகா எழுதி இருக்கும் பச்சமிளகா ாளத் தொடங்கும் பாடல் பெயரைப் போல செம காரமாம்.

'பரிமளா திரையரங்கம்' படத்தில் கதாநாயகனாக அறிமுகமாகும் பிகாஷ், மறைந்த நகைச்சுவை நடிகர் ஐசரி வேலனின் பேரன். நூற்று இருபத்தாறு படங்களில் நடித்திருக்கும் நடிகர் ஸ்ரீமன், முதல்முறையாகத் யாரித்திருக்கும் படம் இது. ''கிராமத்து டூரிங் டாக்கிஸில் அரும்பும் ாதலை கலர்புல்லாக கதை அறுபடாமல் சொல்லியிருக்கிறேன். ியேட்டரை மையப்படுத்தி எடுத்து தேசிய விருது வென்ற பார்த்திபனின் 'ஹவுஸ்ஃபுல்' படம் போல பரிமளா திரையரங்கமும் கண்டிப்பாக ஜெயிக்கும்'' என்கிறார் இதன் இயக்குனர் ஜீவன்.

- மகிமைராஜன்



'வேங்கை'



'தம்பிக்கோட்டை'




''சென்னையில் குடி தண்ணீர் கேன் வாங்கும்போதெல்லாம் சின்ன வயதில் நான் வசித்த மேட்டூர்தான் நினைவுக்கு வரும். என் அப்பா டெக்ஸ்டைல் மில்லில் வேலை பார்த்ததால், ஊழியர்கள் குவார்டர்ஸ்சில் வசித்தோம். அந்த நாட்களில் தண்ணீருக்குப் பஞ்சமில்லாமல், இருபத்திநாலு மணி நேரமும் தண்ணீரைத் தண்ணீராகச் செலவழிப்போம்.

அணையிலிருந்து தண்ணீர்த் திறந்து விடப் போகிறார்கள் என்றால், வேடிக்கை பார்க்கப் போய்விடுவோம். மதகுகளைத் திறந்ததும், புதுத் தண்ணீர் செம்மண் நிறத்தில் குற்றால அருவியின் சப்தத்துடன் கீழே விழுவதைப் பார்த்தது மறக்கவே முடியாது'' - பால்ய நதிக்குள் மூழ்குகிறார் இயக்குநர் சசி.

''ஏழாம் வகுப்பு படித்தபோது, சேலத்திலிருந்த பாட்டி வீட்டுக்கு லீவுக்கு வந்திருந்த சமயத்தில்தான் நான் கிணறு ஒன்றில் நீச்சல் கற்றுக் கொண்டேன். லீவு முடிந்து மேட்டூர் திரும்பியதும், ஆற்றில் நிறைய தண்ணீர் ஓடுவதைக் கண்டதும் 'நமக்குத்தான் நீச்சல் தெரியுமே' என்ற தைரியத்தில் ஆற்றில் குதித்து விட்டேன். ஆனால், பெருக்கெடுத்து ஓடும் ஆற்றின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிப் போனேன். கைகள் நீச்சல் அடித்தாலும், உடல் ஆற்றோட்டத்தில்தான் போய்க்கொண்டிருந்தது. கடைசியாக சிறு பாறையைப் பிடித்துக் கரையேறினேன்.


இயக்குனர் சசி

அப்பா, வி.ஆர். எஸ். வாங்கிக் கொண்டு சேலத்தில் செட்டில் ஆனபோது, குகை ஏரியாவில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் படிப்பு தொடர்ந்தது. வகுப்பில் நான் அதிபுத்திசாலி இல்லாவிட்டாலும் ஐந்தாறு ரேங்க்கில் வருவேன். ஸ்கூல் முடித்ததும், சேலம் கலைக் கல்லூரியில் பி.காம் சேர்ந்தேன். காலேஜ் நாட்களில் பாரதிராஜா, பாலு மகேந்திரா படங்களைப் பார்த்து ரசிப்பேன். டைரக்டர் மகேந்திரனின் 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' படத்தை இரவுக் காட்சி பார்த்துவிட்டு வீடு திரும்பியபோது, அந்தப் படம் என் மீது ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக நடு இரவில் முகம் கழுவி, நகம் வெட்டி, என் புத்தக அலமாரியில் இருந்த புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைத்தது நன்றாக நினைவிருக்கிறது'' என்று தன்னை சினிமாவை நோக்கிக் காலம் ஆற்றுப்படுத்திய நிகழ்வைக் கூறுகிறார் சசி.

''அந்தக் கணம் முதல்தான் 'எது ஒருவனை நல்லவனாக்குகிறதோ, சந்தோஷத்தைக் கொடுக்கிறதோ, அதை நோக்கித்தான்

# ஊருக்குப்
# காலில்

வாசகர்களே! மண் மணம் மாறாத உங்கள் ஊர் பாசத்தை நெகிழ்வோடு 10 வரிகள்

அவன் போகணும்' என்ற லட்சிய விதை எனக்குள் வேரூன்றியது. அது சினிமாதான் என்று தீர்மானித்தேன். கவிதைகள், கதைகள் மீது இருந்த ஆழமான ஆர்வத்தால், 'டைரக்ஷன்தான் என் இலக்கு' என்று முடிவு செய்தேன்.

சேலத்தில் நடந்த அரசுப் பொருட்காட்சி ஒன்றில் என் கூடப் படித்த நண்பன் ஒருவனைச் சந்தித்து, அவன் மூலமாக சினிமாக் கனவுகளுடன் சென்னை வந்து, அவன் கூடவே ரூமில் தங்கிக் கோடம்பாக்கத்தில் கதவைத் தட்டினேன். அதன்பின் நான் சந்தித்த கஷ்ட நஷ்டங்கள், சவால்கள் எல்லாவற்றையும் தாண்டி முதல் படமான 'சொல்லாமலே' வெளியானபோது, நான் ஒரு ரசிகனாக பல படங்கள் பார்த்த சேலம் பிரபாத் தியேட்டர் படப் போஸ்டரில் 'நம்ம ஊர் பையன்' என்ற அடைமொழியுடன் என் பெயரைப் போட்டு மண்ணின் மைந்தனை அங்கீகரித்தது சேலம்.

படிக்கிற காலத்தில் நண்பர்களுடன் பைக்கில் ஏற்காடு மலை ஏறி, மூன்றாவது வளைவில் உட்கார்ந்து மணிக்கணக்காய் சினிமா பற்றிப் பேசியது மாதிரியே, சினிமாவுக்கு வந்த பிறகும், நண்பர்களுடன் அங்கே உட்கார்ந்துகொண்டு படத்தைப் பற்றிப் பேசியது உண்டு.

என் முதல் படத்தை வெளியிட்டு கௌரவப்படுத்திய பிரபாத் தியேட்டர் இன்று லாரி குடோன். தியேட்டரில் பேனர் எழுதிக்கொண்டிருந்த ஓவியருக்கு வேலை போய் விட்டது. ஆனாலும், வரைந்து பழகிய அவர் கைகளால் சும்மா இருக்க முடியவில்லை. தியேட்டருக்கு எதிரில் ஒரு சுவரில் தினம் ஒரு பொன்மொழி எழுதி வைக்க ஆரம்பித்தார். ஒரு நாள் என் சேலத்து நண்பன், அவர் எழுதிய ஒரு பொன்மொழியைக் குறிப்பிட்டு, 'இந்தப் பொன்மொழி என்னை மிகவும் கவர்ந்து விட்டது; உனக்குப் படத்துக்குப் பிரயோஜனமாக இருக்குமா பார்' என்று ஒரு கடிதம் போட்டான்.

'பூ' படத்தின் இரண்டு கட்டப் படப்பிடிப்பு முடிந்த நிலையில், நான் உற்சாகமிழந்து, குழப்பத்தில் ஆழ்ந்திருந்த நேரம் அது. அந்தப் பொன்மொழியைப் படித்த மறுகணம் எனக்கே உற்சாகம் பீறிட்டது. புதிய மனிதனாகப் புறப்படத் தயாரானேன்."

எனக்கு டானிக்காக அமைந்த அந்தப் பொன்மொழி: ''ஒரு நிமிடம் துணிந்து விட்டால் இறந்துவிடலாம்; ஒவ்வொரு நிமிடமும் துணிந்துவிட்டால் வாழ்க்கையில் ஜெயித்துவிடலாம்.

அந்த விநாடி முதல் நான் ஒவ்வொரு கணத்திலும் துணிவுடனும், உற்சாகத்துடனும் வாழ ஆரம்பித்தேன். அந்த பேனர் ஆர்டிஸ்டை தினம் தினம் மானசீகமாக வணங்கிக்கொண்டிருக்கிறேன். அவரை நேரில் சந்தித்து, அவர் காலில் விழுந்து வணங்கும் நாளுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன்'' என ஊர் குறித்த நினைவுகளைத் தொழுகிறார் சசி.

- எஸ்.சந்திரமௌலி

# போனா விழுவேன்!






திண்டுக்கல்லில் தாடிக்கொம்பு, கும்பகோணத்தில் தாராச்சுரம், திருநெல்வேலியில் கிருஷ்ணா புரம்... சேலத்தில் தாரமங்கலம்... எதுக்குன்னு கேட்கறீங்களா? இவையெல்லாம் சிற்பத்துக்குப் பெயர்போன கோயில்களைக் கொண்ட ஊர்கள். தாரமங்கலம் சிற்பங்கள் தனித்தன்மை வாய்ந்தவை... கண்களுக்குள் ஆச்சர்யத்தை நிறைப்பவை...



மகா விஷ்ணு தம் தங்கை சிவகாம சுந்தரியைக் கைலாச நாதப் பெருமானுக்குத் தாரைவார்த்துத் தந்த திருத்தலம் தாரமங்கலம். கைலாசநாதர் கோயிலில் அழகிய கற்சிற்பங்கள் அணிவகுத்தாற்போல அமைந்திருப்பதால், காண்போர் கண்களுக்குச் சிற்ப மங்கலமாகவே காட்சியளிக்கிறது!



* மன்மதன்...

* கி.பி.பதிமூன்றாம் நூற்றாண்டு கோயில் எனக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. கட்டி முதலிகள் கட்டியெழுப்பிய கோயில் என்று. இளஞ்சிவப்பு நிறங்கொண்ட தனி வகையான கல்லினையே பயன்படுத்தியுள்ளனர். கற்கள், பம்பாரப்பட்டி எனும் கிராமம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளன. சிற்ப வேலைப்பாடுகளில், நாயக்கர் கால கலை வேலைப்பாடுகள் வெளிப்பட்டுள்ளன. சிறிய அளவிலாக இருந்தாலும் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன சிற்பங்கள். கோயிலின் வெளிப்பிரகார கல் தூண்கள், அதில் செதுக்கப்பட்டிருக்கும் குதிரைகள் கட்டியம் கூறுகின்றன. அவைகள் அளவில் சிறியனவாக இருந்தபோதிலும், ஸ்ரீரங்கம் கோயிலின் சேஷராயர் மண்டபத்துத் தூண்களை

# சிற்ப



* அக்னிவீரபத்திரர்



* சிவசக்தி கோபம்



# மங்கலம்!

நினைவுபடுத்துகின்றன.

* மூலவர் சன்னிதி எதிரே, ஆறுமுகப் பெருமான் சன்னிதி அருகே இரு தூண் களில் வாலி வதை படலக் காட்சி. இராமர் மறைந்திருந்து வாலியை வதம் செய்த நூதனம், நுட்பமாகச் சிற்பமாக வடிக்கப் பட்டுள்ளது. ஒரு தூணில், அம்பு எய்திடும் நிலையில் இராமர். சற்று தூரமாக இன் னொரு தூணில் வாலி. இதில் என்ன சிறப்பு? இராமர் தூணிலிருந்து பார்த்தால், கண்களுக்கு வாலி தெரிவார். வாலி தூணிலிருந்து பார்த்தால், பார்வைக்கு இராமர் தெரிவதில்லை. அத்தனை நுணுக்

* ஊர்த்துவத்தாண்டவம்



* பதஞ்சலி



* உற்சவர் சோமாஸ்கந்தர் சன்னிதி எதிரே பிராகாரச் சுவரில் கிளி வாகனத்தில் மன்மதன். அன்னபட்சி வாகனத்தில் ரதி. சிற்ப வடிவிலேயே இருவரும் பேரழகுடன் காண்போரை ஈர்க் கின்றனர். இதிலும் ஒரு நுட்பம். மன்மதன் முகத்திலிருந்து ரதி முகத்தை நோக்கினால், ரதி முகம் தெரியாது. ரதி முகத்திலிருந்து மன் மதன் முகம் நோக் கினால், மன்மதன் முகம் தெரிகிறது. காரணம், மன்மதன் பெற்ற சாபம் என்று கதையாக வருகிறது ஒரு புராணம்.



...ரதி *

* சிவகாம சுந்தரி, கைலாச நாதர் கல்யாணம் நடந்த தலம் என்பதால் பிராகாரச் சுவர்களில் கல்லி லேயே மாவிலைத் தோரணங்கள், வாழைப் பூ, அக்னி வளர்த்து ஹோமம் வளர்த்தல், நலுங்கின்போது கோலாட்டக் காட்சிகள் ஆகியன சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன. திருமணத்துக்காகத் தென்னை ஓலையால் பின்னப்பட்ட தடுக்கு மற்றும் மாலைகள் போன்றவை, சுவர்களில் வண்

ணத்தடுக்கு வாடாமாலை எனக் குறிப்பிடும்படியாக வடிக்கப்பட்டுள்ளன. சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் சின்னங்களான வில், புலி, மீன் ஆகியன ஆங்காங்கே பொறிக்கப்பட்டுள்ளன.





* சிவபெருமானின் ஆபரணங்களில் நாகம் தவிர்க்க முடியாதது. தூண்களில் யாழி சிற்பங்களுக்கும் மேலாக நாகம் செதுக்கப்பட்டுள்ளது. ஒரே கல்லில்



* தலபுராண சிற்பம்

மேலே நாகம், கீழே யாழி! அதிலும் ஒவ்வொரு யாழியின் உருவத்திலும் அதன் வாயின் உட்பகுதியில் கல் உருண்டை கவனமாகச் செதுக்கிப் பொருத்தி வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கைலாசநாதர் சன்னிதி எதிரே இடது புற எதிர்த் தூணில் யாழியின் வாயில் மூன்று கல் உருண்டைகள். அத்தனை உருண்டைகளும் விரல் நுனி கொண்டு இடறினாலோ, குச்சி கொண்டு சுழற்றினாலோ, யாழியின் வாய்க்குள்ளேயே சுழல்கின்றன!

மூலவர் சன்னிதி எதிரே மகா மண்டபத்தின் மேல் விதானத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் சிற்பங்கள் ஒவ்வொன்றும் அண்ணாந்து பார்த்து அதிசயப்படத்தக்கவை. ஆச்சர்யமூட்டுபவை. அத்தனை நுணுக்கம். அவரவர் வாகனங்களுடன் அஷ்டதிக்கு பாலகர்கள். ஒரு மாபெரும் சதுரம் நடுவே மூவிதழ் தாமரை. அவற்றை எட்டுக் கிளிகள், தலைகீழாகத் தொத்தியபடி தாங்கிக் கொண்டுள்ளன. தாமரை மலர் மொட்டுகளில் கல் வளையங்கள் சுழல்கின்றன. சதுரத்தின் நான்கு மூலைகளிலும் தரைப்பகுதி நோக்கிக் கீழ் முகமாகக் கல் சங்கிலிகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. கல் சங்கிலிகளின் ஒவ்வொரு வளையங்களும், மூங்கில் தடி கொண்டு சுழற்றினால் சுயாட்சி பெற்றது போலச் சுழல்கின்றன. "ஆலயத்துக்குச் சென்றேன். நான் கண்ட சிற்பக் காட்சியினை எழுதித் தெரிவிப்பதென்பது இயலாத காரியம். தாரமங்கலம் சென்றதில் சிலப்பதிகாரம் எனக்குக் கிடைக்காவிட்டாலும், சிற்பச் செல்வத்தினைக் கண்டுகளித்த திருப்தி எனக்குக் கிட்டியது!" எனக் குறிப்பிட்டுள்ளார் தமிழ்த் தாத்தா உ.வே.சா.

**வாசகர் யோசனை :**
**பானு பெரியதம்பி**

**கல்வெட்டுகள்**

# நாதவெள்ளமும்... கீதப் பிரவாகமும்!

**அமரர் கல்கி**



ஆயிரமாயிரம் ஆண்டுகளாகக் காவேரி நதி எத்தனையோ புண்ணியம் செய்திருக்கிறது. சோழ நாட்டை வளப்படுத்திக் கோடிக் கணக்கான மக்களுக்கு அன்னதானம் செய்து வந்திருக்கிறது. இன்றைய தினம் தமிழகத்தில் கொடிய பஞ்சம் பரவாமல் மக்கள் அரைவயிற்று உணவேனும் பெற்று வருகிறார்கள் என்றால், அதற்குக் காரணம் காவேரி ஆறுதான்.

அத்தகைய காவேரி நதி இறைவனிடத்தில் முறையிட்டுக் கொண்டது. ''இத்தனை புண்ணியம் இத்தனை காலமாகச் செய்து வருகிறேனே! எனக்கு மோட்சம் கிடையாதா? சொர்க்கலோகத்துக்கு வராமல் என்றென்றைக்கும் நான் இந்தப் பூமியில் இருந்து வரவேண்டியதுதானா?'' என்று கேட்டது.

அதற்கு இறைவன் திருவாய் மலர்ந்ததாவது: ''பொன்னி நதியே! உன்னுடைய புண்ணியத்துக்கெல்லாம் ஈடாகக்கூடிய சொர்க்க இன்பத்துக்கும் மேலான ஆனந்தத்தை உனக்கு அளிக்கிறேன். உன்னுடைய கரையருகில் ஸ்ரீ தியாகப்பிரம்மம் என்னும் மகான் சிறிது காலம் வசிப்பார். இணையற்ற நாத சுகம் ததும்பும் பக்திமயமான கீர்த்தனங்களை இயற்றுவார். அந்த மகானுடைய சமாதியும் அவ்விடத்தில் ஏற்படும். ஆண்டுதோறும் ஸ்ரீ தியாகப்பிரம்ம உற்சவத்தைக் கொண்டாடுவதற்காக அங்கே கர்நாடக சங்கீத வித்வான்கள் அனைவரும் ஒருங்கே வந்து கூடுவார்கள். அவருடைய அமர கீர்த்தனங்களைப் பாடுவார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் கேட்டுப் பரவசமடைவார்கள். அவர்களுடைய ஆனந்தமெல்லாம் ஒன்று சேர்ந்து உன்னைச் சேரும்! உன்னுடைய இரு கரையும் ததும்பும்படியாக நாத வெள்ளமும் கீதப் பிரவாகமும் பொங்கிப் பெருக்கெடுத்து அலை மோதிக் கொண்டு ஓடும். இதைக் காட்டிலும் வேறு என்ன இன்பத்தைச் சொர்க்க லோகத்துக்கு வந்து நீ அடையப் போகிறாய்? பூலோகத்திலேயே இருந்து புண்ணியம் செய்து கொண்டு ஆனந்தமாக வாழ்வாயாக!''

இறைவன் அளித்த இந்த வரப்பிரசாதம் காவேரி நதிக்குப் பூரண திருப்தி அளித்தது. இன்றைக்குத் தேவர்கள் எல்லாம் சேர்ந்து வந்து காவேரியைப் பார்த்து, 'சொர்க்கத்துக்கு வரவேண்டும்' என்று வருந்தி அழைத்தாலும் ''வேண்டாம்! நான் இங்கேயே இருக்கிறேன். நீங்களும் ஆண்டுக்கு ஒருமுறை திருவையாற்றுக்கு வந்து இங்கே பொங்கும் கானாமுதத்தைப் பருகிவிட்டுச் செல்லுங்கள். தேவாமிர்தம் என்று சொல்கிறீர்களே, அதற்கு இவ்வளவு மகிமை உண்டா என்று தெரிந்துகொண்டு திரும்புங்கள்!'' என்று காவேரித்தாய் சொல்லுவாள் என்பதில் ஐயமில்லை.

வாழ்க சுதந்திரம்; வாழ்க நிரந்தரம்! நூலிலிருந்து...




# ராமனாக மாறிய விட்டலன்!

**தி**ட்டமிட்டபடி ராமதாஸரும் அவரது சீடர் தத்துவும் சத்ரபதி சிவாஜியின் நகரை அடைந்தனர். மிகவும் மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்றார் சிவாஜி. உணவு உட்கொள்ள வைத்தார். அப்போது ராமதாஸரின் உடலில் உள்ள தழும்புகள் சிவாஜியின் கண்களில் பட்டன. திடுக்கிட்டார். காரணம் கேட்டார். மௌனமாக இருந்தார் ராமதாஸர். ஆனால் தத்து நடந்ததை விவரித்தான். உடனே அடித்தவனை சிறையில் அடைத்தார் சிவாஜி. இதை அறிந்தவுடன் ராமதாஸர் தானே சென்று அவனை விடுவித்தார். அவனுக்கு நல்வார்த்தைகள் கூறினார். பிறகு சிவாஜியிடம் 'இவனுக்குப் பொற்காசுகள் கொடுத்து அனுப்பு' என்றார்.

பின்னர் ராமதாஸர் ஓர் அற்புதமான நூலை எழுதி அதை சிவாஜியிடம் அளித்தார். ஒன்பது சருக்கங்கள் கொண்ட அந்த நூலுக்கு 'தாஸபோதம்' என்று பெயரிட்டார் சிவாஜி. ராஜநீதிகளை மிகத் தெளிவாகப் போதித்தது அந்த நூல். அதற்குத் தினமும் பூஜை செய்தபடி ஆட்சி நடத்தினார் சிவாஜி.

**ரா**மதாஸரிடம் சிவாஜி கொண்ட பக்தி பலருக்கும் பொறாமையைக் கிளப்பியது. தவிர ராமதாஸரின் தோற்றமும் பலருக்கு ஏற்புடையதாக இல்லை. அவரை மனநிலை சரியில்லாதவர் என்று எண்ணியவர்களும் உண்டு. ராமதாஸர் எப்போதும் கைவசம் ஒரு சிறு வில்லை



வைத்திருந்தார். அமரும்போதும் தம்மைச் சுற்றி சிறு கற்களை வைத்துக் கொண்டார். திடீர்த் திடீர் என அந்தக் கற்களை எதிர்ப்புறமாக வீசுவார்.

'இப்படித் தோற்றம் கொண்ட ஒருவரிடம் தங்கள் மன்னன் இவ்வளவு மரியாதை கொள்வதா? 'காட்டில் வசிக்கும் பித்தன் எழுதிய நூலுக்கு இத்தனை முக்கியத்துவம் அளிப்பதா?' சிவாஜியின் அரசவையில் இருந்த காகா பண்டிதர் என்பவருக்கு இது அதிகப்படி எரிச்சலையும் பொறாமையையும் ஏற்படுத்தியது. கோபம் மேலிட சிவாஜியின் அரசவையிலிருந்து வெளியேறிவிட்டார் அவர்.

சிவாஜிக்கு இதனால் வருத்தம் உண்டானது. காகா பண்டிதரிடம் மதிப்பு கொண்டிருந்தவர் அவர். எனவே இந்தப் பிரிவு அவரைச் சோகம் கொள்ளச் செய்தது.



இதை அறிந்தார் ராமதாஸர். இதைத் தொடர்ந்து சிவாஜி தம்மிடம் வந்தபோது, ராமபிரானின் பெருமைகளை விவரிக்கும்படியான பஜனைப் பாடல்களைப் பாடினார். முடிவில்லாததுபோல் நீண்டுகொண்டிருந்தன அந்தப் பாடல்கள். அப்போது அந்தப் பக்கமாக வந்த காகா பண்டிதர் இந்தக் கானத்தைக் கேட்டார். அந்த இசையில் துலங்கிய தெய்வீகம் அவரைச் சிலிர்க்கச் செய்தது. ராமதாஸர் பாடிக்கொண்டே ஆடியது, அனுமனே பாடி ஆடுவதுபோல புலப்பட்டது பண்டிதருக்கு. பஜனை முடிந்தவுடன் ராமதாஸரின் பாதங்களில் விழுந்தார். தம்மை மன்னிக்குமாறு வேண்டினார். அவரை அன்புடன் தழுவிக்கொண்ட ராமதாஸர், 'நீங்கள் மீண்டும் சிவாஜியின் அரசவையில் இருக்க வேண்டும்' என்று கேட்டுக் கொள்ள, சம்மதித்தார் காகா பண்டிதர். அவர் மனத்தில் காழ்ப்புணர்ச்சி அறவே அகன்றுவிட்டது. அமைதி தோன்றியது.

ஆனால், கதையைக் கேட்டுக்கொண்டிருந்த ஜருகண்டியால் அமைதியாக இருக்க முடியவில்லை. 'ராமதாஸரின் அருமை பெருமைகளை அறிந்துகொண்டேன். ஆனால், பாண்டுரங்கனின் சரிதத்துடன் அவர் எப்படிச் சம்பந்தப்படுகிறார்?' என்று கேட்டான்.

பரவாயில்லையே என்பதுபோல் அவனைப் பார்த்த ராமநாதன், தொடர்ந்தார்.

துக்காராமின் இனிமையான பாடல்கள் ராமதாஸரின் காதுகளையும் எட்டின. பண்டரிபுரம் சென்றுகொண்டிருந்த குழு ஒன்று ராமதாஸரையும் பண்டரிபுரத்துக்கு அழைத்தது.

மறுத்துவிட்டார் ராமதாஸர். 'என் மனத்தில் ராமபிரானைத் தவிர வேறு யாருக்கும் இடமில்லை' என்று கூறினார்.

ஆனாலும் காலப்போக்கில் சுற்றி இருந்தவர்களின் வற்புறுத்தல் தாளாமல் அரைகுறை மனத்துடன் பண்டரிபுரத்துக்குச் சென்றார்.

பண்டரியில் பெருக்கெடுத்து ஓடிய பக்தி வெள்ளம் அவரைப் பிரமிக்க வைத்தது. விட்டலன் நேரடியாகவே தம் தலைசிறந்த பக்தர்களுடன் பேசுவதும், விளையாடுவதும் ராமதாஸருக்கு மிகுந்த வியப்பை ஏற்படுத்தியது. என்றாலும் 'ராமனே கடவுள்' என்ற தமது ஒருமித்த நிலையை மாற்றிக்கொள்

வதில் அவருக்கு ஓர் தயக்கம் தொடர்ந்து இருக்கத்தான் செய்தது.

விட்டலனின் சன்னிதியை அடைந்தார். அப்போதும் ராமபிரான்தான் அவர் சிந்தனையை நிறைத்திருந்தார். 'இந்தச் சன்னிதிக்குள் வந்துவிட்டு இப்படி எண்ணுவது தவறோ?' குற்றஉணர்வு தோன்றியது. அவர் கைகள் விட்டலனின் திரு உருவத்தை நோக்கிக் குவிந்தன. ஆனால் மனம்?


அதுவரை யாரும் எழுப்பியிராத ஒரு வேண்டுதலை அன்று அந்த ஆலயம் எதிர்கொண்டது. 'இறைவா, நீ சீதா, லட்சுமணனுடன் ராமபிரானாகக் காட்சி தர வேண்டும்' என்று வேண்டினார் ராமதாஸர்.

அடுத்த கணம் 'ஜெய் ஜெய் விட்டல, பாண்டு விட்டல' என்று இடைவிடாது பக்தி கோஷம் புரிந்துகொண்டிருந்த மக்களுக்கு நடுவே பாண்டுரங்கனின் கருவறையில் அந்த மாயம் நடந்தது. விட்டலன் மறைந்தான். அந்த இடத்தில் ஒரு புதிய ஒளி பரவியது. சீதை, லட்சுமணன், அனுமன் ஆகியோருடன் காட்சி தந்தார் ராமபிரான்.

சில நொடிகளுக்குப் பிறகு கருவறை பழைய நிலையை அடைந்தது. ராமரின் திரு உருவத்துக்குப் பதிலாக மாயப் புன்னகையுடன் இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு காட்சி அளித்தது விட்டலனின் திருவுருவம். தங்கள் கண்ணெதிரே நடைபெற்ற இந்தப் பேரதிசயத்தால் வார்த்தைகள் அற்ற நிலையில் விக்கித்து நின்ற பக்தர்கள் ராமதாஸரை வணங்கினர். பின்னர் ஒரு கூட்டம் அவரை சந்திரபாகா நதிக்கரைக்கு அழைத்துச் சென்றது.

அங்கே சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்தார் ஒருவர். விட்டலனின் அருமை பெருமைகளை இனிய கவிதைகளின் மூலம் அவர் இசைபட எடுத்துக் கூறினார். ஒரு சிறு இடைவெளி கிடைத்ததும், ராமதாஸரையும் மேடை ஏற்றியது பக்தர்குழு. அவர் ராமநாமத்தின் சிறப்புகளை பாடல்கள் மூலம் வெளிப்படுத்தினார். மக்கள் கூட்டம் மந்திரத்தால் கட்டுப்பட்டதுபோல் இதைக் கேட்டு ரசித்தது.

அன்று இரவு ஏதோ சக்தியால் உந்தப்பட்டவர் போல ராமதாஸர் எழுந்தார். விட்டலனின் ஆலயத்தை நோக்கி நடந்தார். அர்ச்சகர் இரவில் முதல் ஜாமப் பூஜையை முடித்துவிட்டு ஆலயக் கதவுகளை மூடிவிட்டுச் சென்றிருந்தார். ராமதாஸர் ஆலயத் திருக்கதவுகளைத் தொட்ட மாத்திரத்தில் அவை இதற்காகவே காத்திருந்ததுபோலத் திறந்துகொண்டன. ராமதாஸர் உள்ளே சென்றார். பாண்டுரங்கனின் திருவுருவத்தைக் கண்டார். பக்தியின் விளைவாக அவர் கண்களிலிருந்து நீர் வழிந்தது. விட்டலனை ஆரத் தழுவினார். அவன் திருப்பாதங்களில் தம் முகத்தைப் பதித்தார். அன்று விட்டலனுக்கு ஒரு புதுமையான அபிஷேகம் நடந்தது - கண்ணீர் அபிஷேகம்! பின் அங்கிருந்து கிளம்பினார் வீர சிவாஜியை சந்திக்க.



**ஔ**ரங்கசீப்பின் படை தட்சிண பாரதத்தின்மீது படையெடுத்து

# அபங்க அமுதம்

**மாஜேமாஸை விடேவரீ**
**விட்டல சரணீ நிரந்தரீ**
**பண்டரபுர மனோரத ஜ்யாசா**
**தன்யதன்ய தோ தைவாசா**
**ஜோ ஜோ பண்டரீஸ கேலா**
**தேனே களிகாள ஜிங்கிலா**
**ராமதாஸ ம்ஹணே பண்டரீ**
**நாணா ஸாதனேவிண தாரீ**

**- சமர்த்த ராமதாஸர்**

''எனது மனமாகிய செங்கல் மீது, விட்டலனின் பாதங்கள் நிரந்தரமாக நிற்கட்டும். பண்டரிபுரம் போக ஆசை கொண்டவர்கள் பாக்கியசாலிகள். மிகவும் புண்ணியம் செய்தவர்கள். பண்டரி யாத்திரை சென்றவர்களோ கலிகாலத்தை வென்றவர்கள். நியமம், நிஷ்டை போன்ற பலவித சாநுதனங்கள் இன்றியே பண்டரிபுரம் செல்லலாம்...''

வந்து கொண்டிருந்தது. ராமதாஸர் அவர்களை எதிர்கொண்டார். 'சிவாஜியின் படையை உங்களால் சமாளிக்க முடியாது. வீணாக இறந்துவிடாமல் வந்த வழியே திரும்பிச் செல்லுங்கள்' என்றார்.

இதற்கெல்லாம் மசியாமல் அந்தப் படை தொடர்ந்து முன்னேற ராமதாஸர் தம் வில் வித்தையைக் காட்டத் தொடங்கினார்.

அம்பை எய்தார். பாய்ந்து சென்றுகொண்டிருக்கும் அந்த அம்பை மின்னல் வேகத்தில் சென்று தானே பிடித்தார்.

ஒரு மரத்தின் மீது தம் அம்பை விட அந்த மரத்தின் ஒவ்வோர் இலையையும் மாறி மாறித் துளைத்தது அவரது அம்பு. பிறகு 'நான் சிவாஜியின் படையில் உள்ள ஒரு சாதாரண வீரன்' என்றார்.

சாதாரண படைவீரனே இப்படி என்றால்? எண்ணிப் பார்த்த படைவீரர்களின் மனத்தில் அச்சம் படர்ந்தது. வந்த வழியே சிதறி ஓடினார்கள். ராமதாஸரின் அருமை பெருமைகளைப் பலரும் உணரத் தொடங்கினர்.

ஒரு நாள் அந்தணர் ஒருவர் ராமதாஸரிடம் வந்து மிகவும் வருத்தப்பட்டார். 'ஐயா, குடும்பத் தொல்லைகள் தாங்கமுடியவில்லை. இதிலிருந்து எனக்கு விடுதலை அளிக்க வேண்டும்' என்றார்.

ராமதாஸர் எதுவும் பேசாமல் நடக்கத் தொடங்கினார். அந்தணரும் அவரைப் பின் தொடர்ந்தார். வழியெல்லாம் வேண்டுதல், தம்மைக் குடும்பத் தொல்லைகளிலிருந்து ராமதாஸர் கரை ஏற்றவேண்டும் என்று.



ராமதாஸர் ஒரு பெரிய குளத்தின் கரையை அடைந்தார். அங்கு ஒரு மரம் இருந்தது. அதன் ஒரு கிளை நன்கு குவிந்து குளத்தின் மேற்புறம் நோக்கி இருந்தது. அந்தக் கிளையைச் சுட்டிக் காட்டினார் ராமதாஸர். அவரது உத்தரவைப் புரிந்து கொண்ட அந்தணர் மரத்தில் ஏறினார். பின் அதன் கிளையைப் பிடித்துக்கொண்டு தொங்கலானார். ஏன்?

யாத்திரை தொடரும்

# சேலம்



ஒரு கிலோ மல்லி 800 ரூபாய்; ஒரு கிலோ கனகாம்பரம் 600 ரூபாய்... இது பூ விலை மாதிரி தெரியலையேன்னு நினைக்கிறீங்களா...?! "சேலம் பூச்சந்தையில் சீஸன் டைம்ல 1200 ரூபாய்க்குக் கூட விற்கும் கண்ணு. அப்ப மட்டும் ஒரு நாளைக்குப் பத்துலேர்ந்து பன்னிரெண்டு லட்சம் வரைக்கும்கூட சந்தையில யாவாரம் ஆகும். தஞ்சாவூர், கும்பகோணம், ஆரணி, ஆத்தூர், விழுப்புரம்... இங்கெல்லாம் சேலத்துலேர்ந்துதான் பூ போகுதுன்னா நீயே கணக்குப் போட்டுக்க கண்ணு" - பூ கணக்கா மணக்க மணக்கச் சொல்கிறார் எஸ்.எஸ். அண்ணாமலை. இவர் பூ கமிஷன் மண்டி வியாபாரத்தில் மூன்றாம் தலைமுறை.

சேலம் மார்க்கெட்டில் இருக்கும் பூச்சந்தைக்குள் நுழைந்தால் குவியல் குவியலாக சாமந்தி, பாலித்தின் பைகளில் பொட்டலங்களாக அரளி, மலர்ந்து மலராத மல்லி, பருவக் குமரியின் வெட்கத்தைப் போலச் சிவந்திருக்கும் கனகாம்பரம், தராசின் நிறுவையிலிருக்கும் முல்லை, வாடவே வாடாத வாடாமல்லி, பூக்கவே பூக்காத தாழம்பூ... எல்லாம் தங்களின் வாசனைகளைக் கதம்ப மாலையாக்கி நம் நாசிகளை வரவேற்கும். சேலம் பூச்சந்தையின் ராஜா சாமந்திதான் ஈரத்தோடு ஒரு கிலோ 20 ரூபாய்; உலர்ந்தது 40 ரூபாய். பொங்கல், ஆயுத பூஜை சமயங்களில் மட்டும் சாமந்திக்குக் கிராக்கி ஜாஸ்தி. ஒரு கிலோ 120 வரைக்கும் விற்பனையாகும். சேலம் சுற்று வட்டாரத்தில் இரண்டாயிரம் ஏக்கரில் பூ விவசாயம்தான் முக்கியத் தொழில். அரியானூர், பொம்மிடி, கண்ணங்குறிச்சி, சீரகபாடி, புத்தூர், தின்னப்பாடி... ஆகியவை பூ விவசாயத்தின் முக்கியமான கேந்திரங்கள். தமிழகத்திலே சேலம் பூச்சந்தைதான் பெரிது என்றாலும், பூ வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஒருவர்கூட பூ விவசாயம்






அண்ணாமலை



ஸ்ரீனிவாசன்





செய்வதில்லை. எல்லோரும் கமிஷன் ஏஜெண்டுகள்தான்.

மதுரை மல்லிக்கும் சேலத்து மல்லிக்கும் என்ன வித்தியாசம்? - அண்ணாமலையிடமே கேட்டோம். ''மதுர மல்லி அநியாயத்துக்கு மணக்கும் கண்ணு. சேலத்து மல்லி நியாயமா மணக்கும். கலர்ல மதுர மல்லி வெள்ளைக்காரன் கணக்கா வெளுப்பா இருக்கும். சேலத்து மல்லி நம்மள மாதிரி கலர் கம்மி '' என்று கேலியாக வார்த்தைகள் உதிர்கின்றன அவரிடமிருந்து.

சேலம் பூச்சந்தையில் உதிரிப் பூக்களின் வியாபாரத்தோடு பூமாலையும் விற்பனைக்கு இருக்கின்றன. காலையில் ஆறு மணியிலிருந்து பூக்கள் வர ஆரம்பித்தாலும் சந்தை இயங்க ஆரம்பிக்க பத்து மணியாகிவிடுகிறது. ''சமயத்துல பதினொரு மணிகூட ஆகும்'' என்கிறார் இன்னொரு கமிஷன் ஏஜெண்ட் ஸ்ரீனிவாசன். ஆனால், ஒரு மணிநேரத்துக்கு மேல் எந்தப் பூவும் விற்பனை ஆகாமல் தேங்கி நிற்காதாம். சேலம் பூச்சந்தையின் முக்கியமான ப்ளஸ் இது.

வாசகர் யோசனை :
சூர்ய நாராயணன் -சேலம்

## கவனிக்குமா கார்ப்பரேஷன்?

மணக்க மணக்க வருவாய் ஈட்டும் பூச் சந்தையின் முன்பு குமட்டல் வர வைக்கும் அளவுக்குக் குவிந்து கிடக்கின்றன குப்பைகள். அதுவும் அழுகின குப்பைகளின் துர்நாற்றம் பூக்களின் மீது திராவகத்தை வீசினாற்போல நாசியையும் முகத்தையும் சுழிக்க வைக்கின்றன. சேலத்தைப் பொறுத்தவரை, 'குரங்கு கையில் அல்ல; குப்பைகளின் கையில் பூமாலை.'





# ஒரு கிலோ 800 ரூபாய்!



## சுமார் 350 விளம்பரப் படங்களில் நடித்திருக்கும் சுமித் புகையிலை, குட

''எனக்கு இட்லி ரொம்ப பிடிச்ச டிஃபன். சென்னை வரும்போதெல்லாம் ஒரு கை பாத்துடறது வழக்கம். சட்னியில் இத்தனை வெரைட்டியா? கலர்கலரா தினுசு தினுசா இருக்கற சட்னியில இட்லியை முக்கிச் சாப்பிட்டா டண் டணா டண்தான்...'' என்று சொல்பவர் சுமித் அரோரா.

சுமித் குழந்தைகளின் ஃபேவரிட் அங்கிள். நாள் பூரா விளம்பரங்களின் மூலமாக டி.வி.யில் தெரியும் மிகப் பரிச்சயமான முகம். சன் நெட்வொர்க் DTH விளம்பரம் டண் டணா டண்ணினால் பயங்கர பிரபலம்.



''நான் ராஜஸ்தான் ஜெய்ப்பூரைச் சேர்ந்தவன். அங்கு தியேட்டர் (டிராமால நடிச்சுகிட்டு இருந்தேன்னு சொல்றது ஒல்டு) பண்ணிட்டிருந்தேன். அப்ப ஈ - டி.வி. அங்க ஆரம்பிச்சாங்க. அவங்க சேனல் சீரியலில் நடிக்க ஆரம்பிச்சேன். ஒரு வருடம் கழித்து மும்பை போய் அங்கு முயற்சி செய்யலாமேன்னுட்டு மும்பை வந்துட்டேன். எட்டு வருஷமா மும்பைவாசி...''

மாடல் ஆகணும், ஆக்டர் ஆகணும் என்று கண்களில் கனவுடனும் ஒரு வெறியுடனும் இருக்கிற இளம் ஆண் - பெண்களின் சரணாலயம் மும்பை. தினமும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வந்திறங்கும் இடம். சுமித்தும் பல கனவுகளுடன் இருந்திருக்கிறார்.



# டண் டணா டண்ணுக்கு டும் டும் டும்!

''இங்கு வந்தவுடன்தான் விளம்பரங்களில் நடித்தால் என்ன என்ற இன்ட்ரஸ்ட் வந்தது. தினமும் நாலைந்து ஆடிஷன்ஸ் போவேன். விளம்பரப் படம்னா என்ன, ஸ்கிரிப்ட் எப்படி ரெடியாகறது, எப்படிப் பேசணும், பாடிலாங்வேஜ் எப்படி.... இதனுடன் விளம்பரத்தின் ரீச் என்னவென்றும் அப்பதான் புரிய ஆரம்பிச்சது. 'ரா'வா இருந்தேன். மெல்ல மெல்ல நுணுக்கங்களைக் கத்துக்க ஆரம்பிச்சேன். என்னுடைய முதல் விளம்பரம் மாருதி கார். இது 2004ல் நடந்தது. நான்

ளம்பரங்களில் நடிப்பதில்லை என்பதைக் கொள்கையாக வைத்திருக்கிறார்.



ஹோலி பண்டிகைக்காக ஜெய்ப்பூர் போயிருந்தேன். அப்ப ஃபோன் மூலமா நான் செலக்ட் ஆகியிருப்பதாகச் சொன்னார்கள். முதல் விமானப் பயணம் பயங்கர த்ரில். தில்லி சென்று பிறகு மும்பை செல்லும் விமானம். நான் காலை எட்டு மணிக்கு ஷூட்டிங் ஸ்பாட்டில் இருந்தாக வேண்டிய நிலைமை. பஸ், டாக்ஸி, ஆட்டோ... என பிடித்து, சரியாக ஷூட்டிங் ஸ்பாட் போயிட்டேன். அங்கிருந்து என் ஜர்னி ஆரம்பிச்சது...'' என குதூகலமாகச் சொல்கிறார் சுமித்.

சுமார் 350 விளம்பரப் படங்களில் நடித்திருக்கும் சுமித் புகையிலை, குட்கா போன்ற விளம்பரங்களில் நடிப்பதில்லை என்று கொள்கை வைத்திருக்கிறார்.



பீட்ஸா, அமீர் கான், வித்யா பாலன், கமல் ஹாசன், மெஹரூத் (நம்ம வைகைப் புயலையும் சின்னக் கலைவாணரையும் இன்னும் பார்க்கவில்லை என்று தெரிகிறது)... இதெல்லாம் சுமித்தின் ரொம்ப பிடிச்ச லிஸ்டில் இருக்கும் சமாசாரங்கள்.

அநுசரி, மாடலிங் மற்றும் விளம்பரத்துறையைப் பொறுத்தவரை கோலோச்சுவது பெண்கள், அவர்களுக்குத்தான் வருமானமும் அதிகம். இதைப் பற்றி சுமித்தின் கருத்தென்ன என்று சின்னதாகப் பற்றவைத்தோம்.

நம்மை அலட்சியப்படுத்திவிட்டு, ''அதனாலென்ன, வீட்டை நிர்வகிப்பது பெண்கள். விளம்பரங்களில் பானம், உணவு வகை, வீட்டுத் தேவைக்கான சாமான்களில் பெண்கள் தோன்றுவதுதான் சரி. வீட்டை அவங்கதானே பாத்துக்கறாங்க. அதிகமான ஊதியம் தரலாமே..! (சரி கல்லுளி மங்கன்)'' என்கிறார் தாராள மனத்துடன்.

தற்சமயம் விளம்பரங்களுடன், திருமதி செல்வத்தின் ஹிந்தி வடிவமான 'பவித்ரா ரிஷ்தா'வில் நடிக்கும் சுமித், வெகு சீக்கிரம் தெலுங்கு சினிமா ஒன்றில் நடிக்க இருக்கிறாராம்.

''தமிழ் சான்ஸ் கிடைத்தால் கண்டிப்பாக நடிப்பேன். மொழியைக் கற்றுக்கொள்வேன். ஒவ்வொரு முறை சென்னை வரும்போதும் என்னைக் கவர்வது தமிழ் மக்களின் அன்பும் கவனிப்பும்! ரொம்பப் பாசக்காரங்க (உங்களுக்கும் தெரிஞ்சு போச்சா?) சவுத்தில் எனக்குக் கிடைத்த கௌரவத்தை நினைத்தால் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கு...'' என்கிறார்.

மாடல் ஆக வேண்டும் என நினைப்பவர்களுக்கு சுமித்தின் அட்வைஸ் - ''தன்னம்பிக்கை, பொறுமை, நேர்மை இது இருந்தால் போதும்... மாடல் ஆகலாம்'' என போட்டு உடைக்கிறார்.

வருகிற நவம்பர் 29 அன்று சுமித் தன் சிநேகிதி கலி(மொட்டு என்று அர்த்தம்)யை திருமணம் செய்து கொள்கிறார். அட்வான்ஸ் வாழ்த்துக்கள். டண் டணா டண்ணுக்கு டண் டணக்கா ஹே டணக்னக்கா...

- லதா சேகர்

# சேலம் மாவட்ட ஸ்பெஷல்



"மனசே சரியில்லே மாப்ளே... எங்காவது ரிலாக்சா போய்ட்டு வருவோம். என்ன சொல்றே..."

"எனக்கும்தான் மாம்ஸ். நீ எங்கே கூட்டிட்டுப் போறியோ... அங்கேயே நானும் வர்றேன். மனசுக்கு நிம்மதி கெடைச்சா போதும்!"

"கந்தாஸ்ரமம் போய்ட்டு வருவோம். சேலம் - ஆத்தூர் ரோட்டுல உடையாப்பட்டி கிராமத்துலேர்ந்து உள்ளே ரெண்டு கி.மீ. போவணும். எதிர்த்தாப்ல தெரியற மலை சன்னியாசி குண்டு! அதுல ஒரு இடத்துல கந்தாஸ்ரமம் அமைஞ்சிருக்கு. தரையிலேர்ந்து இருநூத்தைம்பது அடி உயரம். என்ன சொல்றே மாப்ளே?"

"அவனவன் பத்தாயிரம் அடி... பதினைஞ்சாயிரம் அடி உயர மலையெல்லாம் ஏறிக் குதிச்சிட்டு இருக்கான். உன் தயவு இருந்தா அந்த மலையையே தாண்டிடுவேன்ல!"

"அடக்கிவாசி மாப்ளே!"

"அப்படியே ஆவட்டும்!"

"பதினேழரை ஏக்கர் பரப்புல அமைஞ்சிருக்கு கந்தாஸ்ரமம். இங்க எல்லாமே பிரமாண்டம்தான். அதோ அச்சு அசலா ஒரு



# காரிய சித்திக்கு கந்தாஸ்ரமம்!





மனுஷன் உட்கார்ந்த மாதிரியே ஒருத்தர்... சாந்தமா உட்கார்ந்திருக்காரே அவரு யாருனு தெரியுமா?''

''தெரியாது மாம்ஸ்...''

''அந்த மகான்தான் ஸ்ரீமத் சத்குரு சாந்தானந்த சுவாமிகள். 1921ல் மதுரை அருகே அழகாபுரி கிராமத்துல அவதாரம்! 1925ல் காரைக்குடி நாகநாதபுரம் பாடசாலை. ஏழு வயதில் காந்தியுடன் சந்திப்பு. பத்து வயதில் சிறை. பின்னர் ரிஷிகேஷில் ஆன்மிகப் பயிற்சி. பதினொரு வயதில் சேந்தமங்கலம். பனிரெண்டு வயதில் குரு தீட்சை. சுப்பிரமணியன் என்கிற இயற்பெயர், அன்றிலிருந்து சாந்தானந்த சுவாமிகள் என்றாயிற்று. ஏழு வருஷம் மௌனம். அப்போது பிட்சாடனம். 1940ல் மீண்டும் சேந்தமங்கலம்.''

''வருஷம், வயசுக்கிரமமா அடுக்கிட்டே வராதீங்க. நான் என்ன பரீட்சையா எழுதப் போறேன். நேரா மேட்டருக்கு வாங்க!''

''கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்க மாப்ளே. வருஷத்தைச் சொல்லாம வுட்டுட்டா உனக்கு எதுவும் புரியாது. 1967ல் இந்த இடத்தைக் கண்டு பிடிச்சார் சாந்தானந்த சுவாமிகள். அப்பவே தமது அதிஷ்டானத்துக்கும், கந்தாஸ்ரமத்துக்குமான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கிட்டார். ஸ்ரீஸ்கந்தன் ஒரு சன்னிதி. அதன் எதிரே முருகனின் தாயார் பார்வதியாகிய ஸ்ரீஸ்கந்த மாதாவுக்கு ஒரு சன்னிதி. தாயும் மகனும் எதிரெதிரே சன்னிதி கொண்டுள்ளது இங்குதான். மலையில் ஸ்ரீ ஸ்கந்தன் வந்து நின்ற இடம் சன்னியாசி குண்டு. அந்த இடத்துலதான் கந்தாஸ்ரமம் அமைக்கப்பட்டிருக்கு. பஞ்சமுக ஆஞ்சநேயரும் பஞ்சமுக விநாயகரும் எதிரெதிரே தனி சன்னிதிகளில். தானுமாலயன், இடும்பன், முருகனைச் சுற்றி மனைவிகளுடன் கூடிய நவக்கிரக மூர்த்திகள். மொத்தத்துல கந்தாஸ்ரமத்துக்கு நாம வந்திருக்கிறது நம்பளோட 'லக்கு.' பார்க்க... பரவசப்பட இங்க எல்லாமே நல்ல 'லுக்கு'. இனிமே நமக்கு எல்லாமே 'க்ளிக்கு'தான் மாப்ளேய்ய்! திருவண்ணாமலையை நினைச்சா முக்தி, கந்தாஸ்ரமம் வந்தா காரியம் எல்லாம் சித்திதான்!''

✽ கணபதிராம சாஸ்திரி



வாசகர் யோசனை:
வ. ராமலெட்சுமணன்







# கவிதை கஃபே

## அபிநயம்

சரவிளக்குகளை
உடுத்திக்கொண்டு நிற்குமந்த
திருமண மண்டபத்தின் முகப்பில்
தெர்மாக்கோல் எழுத்துக்களால்
பொருத்தப்பட்டிருந்த
மணமக்களின் பெயரெழுத்தில்
ஓரெழுத்து
உதிரத் தொடங்கிய மலரென
சாய்ந்தமர்ந்திருக்க
தலை சாய்த்துப் படிக்கும்
அச்சிறுமியின் அபிநயம்
பேரழகுடையதாயிருக்கிறது.

- பா.ராஜா

## அனுபவ பாதங்கள்

இரத்தம் குடிக்கும் ஆசையில்
கூர்தீட்டி கண்விழித்துக் கிடக்கின்றன
சில சரளைக் கற்கள்,
அறிந்தும், நொறுங்க மிதித்தபடி
கடந்து செல்கின்றன
அனுபவங்களால் காய்த்துக் கிடக்கும்
பாதங்கள்

- க.சங்கரபாண்டியன்

## அசைதலின் பெருவலி

தோட்டத்தில்
கிளை பரப்பி நிற்கும்
மாமரப் பொந்தில்
உச்சிப் பொழுதின்
வெம்மையடங்கக் கரையும்
ஒற்றைக் குயிலின் மென்சோகம்
நடுநிசியில்
அழுகையோய்ந்து கிடக்கும்
சாவு வீட்டின்
ஒற்றை விசும்பலாய்
மனத்தைப் பிசைகிறது
ஞாபக அடுக்குகளின்
அடியாழத்தில்
அமிழ்ந்துபோன
பல பல துயரங்களை
அசைத்து அசைத்து
மேலெழுப்பப் போதுமானதாகிறது
அது...

- நிலாமகள்

## இதுவும் சுகம்தான்

ஏறியதும் தேடிப்பிடித்து
யாருமற்ற முழுநீள இருக்கைகளில்
ஆளுக்கொன்றாய் அமர்ந்தோம்
இருவருக்குமான சன்னலும்
ஏகாந்த தனிமையுமாக
சுகமாய் தொடங்கியது பயணம்
நிறுத்துமிடங்களில்
ஏறுபவர்கள் ஆக்கிரமிக்க,
கொஞ்சம் கொஞ்சமாய்
நகர்ந்து நகர்ந்து
நெருக்கியடித்து
அமரும்படியாய்ச் சுருங்கியது
எங்கள் இராஜ்யத்தின் எல்லை.
படிக்கவும், எழுதவுமாய்
அவரவர்க்கான உலகில்
தன்னிச்சையாய் நடைபோட்ட
இதுவும் வெகு சுகமாய்தான்...

- ஆதிலக்ஷ்மி

**வாசகர்களே!**

**உங்க க்யூட் கவிதைகளைச் சீக்கிரமா 'கவிதை கஃபே'ன்னு குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.**




'கவிதை கஃபே'
பகுதியில் இடம்பெறும்
கவிதைகளுக்கு
சன்மானம் உண்டு.

# குழந்தையுலகத்துத் திறவுகோல்!

சமைப்பதற்கென
நறுக்கப்படும் வெண்டைக்காயின்
புறக்கணிக்கப்படும் முனைகளையெடுத்து
நெற்றி
கன்னம்
தாடையென அப்பிக்கொண்டு பூதமாகி
முகத்தில் கோரமானச் சுழிப்பொன்றைக் காட்டி
திடுமென அச்சுறுத்தும் சிறுமியின் செயலுக்குப்
பயந்து போவதாப் நடிக்கும்பொழுதுதான்
நம் கைக்குச் சிக்குகிறது
குழந்தையுலகத்து கதவின் திறவுகோல்

– பா.ராஜா




# ஓவியமே முதல் தாய்மொழி!

சேலம்



மாவட்ட ஸ்பெஷல்












''கிராமங்களின் அழகியலையும், விவசாயத்தின் தேவையையும் உழவர்களின் உழைப்பையும் அரூப ஓவியங்களாக்கி உலகளவில் எடுத்துச் செல்வதே என் ஓவிய உலக லட்சியம்'' என்கிற மூர்த்தி சேலம் மாவட்டம் கரியானூர்காரர். தனியார் பள்ளி ஓவிய ஆசிரியரும்கூட. மதி என்பவரின் வழிகாட்டுதலே இவரை நவீன ஓவியப் பக்கம் சாய்த்திருக்கிறது.




● மூர்த்தி

''ஆதிமனிதர்கள் தம் உணர்வுகளை வெளிப்படுத்த பாறைகளிலும், குகைளிலும் வரைந்தும் செதுக்கியும் வந்தார் கள். அதுவே இன்று நாம் அவர்களின் வாழ்க்கை முறையை அறிந்துகொள்ள உதவும் ஆவணமாக உள்ளது. அதுபோல 'குழந்தைகள் எழுத படிக்கக் கற்றுக்கொள்ளும் முன் படம் வரைய கற்றுக் கொள்ள வேண் டும். அதுதான் அவர்களின் முதல் தாய்மொழி. வரைய கற்றுக்கொள் ளும் குழந்தையின் உலகம் அழகால் நிரம்பி வழியும்'' என்கிறார் மூர்த்தி. இவர் வரைந்த ஓவியங்களுக்காக, 'இளம் வளர்மணி', 'ஓவியச் சுடர்', 'Best artist' ... போன்ற அங்கீகாரங் களைப் பெற்றிருக்கிறார். பத் தாம் வகுப்பு படிக்கும்போது இவரது தந்தை கடன் தொல் லையால் காணாமல் போன சோகத்தை மறக்கவே வரை யத் தொடங்கினாராம்!







ஆரணிப் பட்டு, காஞ்சிபுரம் பட்டு, திருபுவனம் பட்டு, தர்மாவரம் பட்டு, பனாரஸ் பட்டு... இவையெல்லாம் மிகவும் பிரபலமான பட்டின் வகைகள். இவை அனைத்தும் உற்பத்தியாவதும் முறையே அந்தந்த ஊர்களில்தான். மேற்காணும் பட்டுகளுக்கு இணையான புகழுடைய பட்டும் ஒன்றும் இருக்கிறது. அது.... கேரளப் பட்டு. பட்டுக்குப் பெயர் வேண்டுமானால் கேரளாவாக இருக்கலாம். ஆனால் முழுக்க முழுக்க உற்பத்தியாவது சேலத்தில்தான். சேலம் மாவட்டத்தின் கொண்டாளம்பட்டி இளம்பிள்ளை, ஜலகண்டபுரம், நங்கவள்ளி போன்ற ஊர்கள் கேரளப் பட்டு உற்பத்தியில் பிரபலமானவை. இந்த ஊர்களைக் கடந்து போகையில் காதுகளில் கடக் கடக் என்ற ஓசையும், கூடவே எண்பதுகளில் வெளிவந்த இளையராஜா இசையமைத்த மெலடி பாடல்களையும் கேட்க நேர்ந்தால் தறி ஓடிக்கொண்டிருக்கிறது என்று கையிலடித்து சத்தியம் செய்யலாம்.



கிருஷ்ணநாதன்

''சேலம் மாவட்டம் முழுக்க ஐநூறு தறிகளுக்கு மேல் கேரளப் பட்டு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்றன'' என்கிறார் சிவநாராயணா டெக்ஸ்டைல் உரிமையாளர் எஸ். கிருஷ்ணநாதன்.

''மாதம் ஒன்றுக்குச் சராசரியா ஒரு லட்சம் கேரளப் பட்டுச் சேலைகள் உற்பத்தியாகுது. வேட்டிகளும் அதிகமாகவே உற்பத்தி பண்ணுறோம். சித்திரை விஷு, திருவோணம்... போன்ற திருவிழாக்கள்தான் இந்தப் பட்டு உற்பத்திக்கும் விற்பனைக்கும் சீஸன். துபாய், சிங்கப்பூர், மலேசியா... போன்ற வெளிநாடுகளில் இதற்கு ஏகக் கிராக்கி'' என்கிறார் இவர். இதற்கான நூலை, கோவையிலிருந்து தருவிக்கிறார்கள்.

''கேரளப் பட்டு நெசவுக் குன்னு மட்டுமில்லை. பொதுவாவே நெசவுத் தொழிலாளர்கள் பற்றாக்குறை அதிகம் . அடுத்த தலைமுறையில இந்த நெசவுத் தொழில் என்ன



ஆகுமோன்னு பயமா இருக்கு. ஒரு இடத்துல ஐம்பதாயிரம் ரூபாய் முன் பணம் வாங்கிக்கிட்டு தான் வேலைக்கு வர்றாங்க. அடுத்த இடத்துக்குப் போகும் போது அவங்க வாங்குன அட்வான்ஸை அடைக்கவும் மேற்கொண்டு பத்திலிருந்து இருபதாயிரம் வரைக்கும் அட்வான்ஸ் கடன் வாங்கறங்க. இதனால தொழிலாளர்களுக்கும் சரி உற்பத்தியாளருக்கும் சரி லாபம் ரொம்ப குறைஞ்சிருச்சு,'' என்கிற கிருஷ்ணநாதன் ''பவர்கட் பட்டு உற்பத்தியை ஏகத்துக்கும் பாதிக்குது'' என்கிறார்.








**சேலத்தில் தயாரிக்கப்படும் செயற்கைப் பட்டு, உலகப் பிரசித்தம். இங்கு தயாராகும் ஜவுளிகள் சீனாவின் தரத்துக்கு இணையானவை. எனவேதான் அமெரிக்கா, பெல்ஜியம், இத்தாலி, தென்னாப்பிரிக்கா, நார்வே, கனடா, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் சேலத்தின் ஜவுளிகள் மோஸ்ட் வாண்டட் லிஸ்டில் இருக்கின்றன. வட மாநிலத்தவரை ஈர்க்கும் கல்வேலைப்பாடுகள் கொண்ட சேலைகள் உற்பத்தியிலும் சேலம் தனித்த முத்திரை பதித்திருக்கிறது.**

செங்குந்த முதலியார் சமுதாயத்தைச் சார்ந்த மக்கள்தான் இந்தப் பட்டு உற்பத்தியில் மெஜாரிட்டி. தறி ஓட்டுபவர்களில் அதிகம் ஆண்கள்தான். பெண்கள் கூடமாட ஒத்தாசை செய்கின்றனர். சீஸன் நாள் சாதாரண நாள்... எனச் சராசரியாக ஒரு நாளைக்கு முந்நூறு ரூபாய்க்கும் மேல் சம்பாதிக்கிறார்கள். ஆனால், அதற்கு உடல்ரீதியாக அவர்கள் கொடுக்கும் விலை மிக அதிகம். நுண்ணிய நூல் என்பதால் தொழிலாளர்களுக்குக் கண்கள் அதிகமாகக் களைப்படைகின்றன. சுவாசம் தொடர்பான கோளாறுகளும் சகஜம். பெரும்பாலும் தறிகளின் சப்தத்தைக் கேட்டே தொழிலாளர்களின் வாழ்க்கை கழிவதால் அவர்களின் செவிகளும் நோவுக்கு உள்ளாகின்றன.

''சுவாசம் வழியாக உட்சென்ற பஞ்சுகளை நீக்குவதற்காகப் பூவம் வாழைப் பழமும், பனைவெள்ளமும் தொழிலாளர்களுக்குத் தருகிறோம்'' என்கிறார் கிருஷ்ணநாதன். என்றாலும் அவர்கள் வாழ்க்கைதான் இனிக்க மாட்டேன் என்கிறது.

# கல்கி கிளினிக்

**தேவிகா குமாரசாமி, மேலூர்:**

**என் பையனுக்குப் பத்து வயதாகிறது. படிப்பில் ஆர்வமுள்ளவன். ஆனால், அவன் எத்தனை முறை படித்தாலும் முக்கியமான பகுதிகளை மறந்துவிடுகிறான். ஏன்?**

**மனநல மருத்துவர் டாக்டர் ஆனந்த்:** புரிந்துகொள்வதற்கு அடிப்படையாக இருக்கும் ஞாபக சக்தி மரபியல் காரணிகளால் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அடிப்படையிலேயே அறிவுத்திறன் குறைவாக உள்ள குழந்தைகளுக்கு ஞாபக சக்தியும் குறைவாகத்தான் இருக்கும். இதை மாற்ற முடியாது. ஆனால், அறிவுத்திறமை இருந்தும், ஞாபக சக்தி குறைவாக இருந்தால் கவனச் சிதறல், மனச்சோர்வு ஆகியவை காரணமாக இருக்கலாம். கவனத்தைப் பன்முகமாக இருப்பதை மாற்றி, ஒரு முகமாக வைத்துக்கொண்டால் படிப்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள முடியும். இதற்குப் பிரத்தியேக கவுன்சிலிங் அளிக்கிறோம். மார்க் வாங்க வேண்டுமே என்ற பதற்றம்கூட ஞாபகமறதி ஏற்பட முக்கிய காரணம். இதைத் தவிர்க்க ரிலாக்சேஷன், மூச்சுப் பயிற்சி செய்யலாம். மனச்சோர்வுக்கு நல்ல மருந்துகள் உள்ளன. ஆனால், கவுன்சிலிங், மருந்துகள் அனைத்துமே பன்னிரெண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்குத்தான். அதற்குக் குறைவான வயதுள்ள குழந்தைகளுக்கு ஞாபகத்திறன் குறைவாக இருந்தால் பழக்கம் மாற்றுமுறை (Behaviour Changes Method) மூலம் பயிற்சி அளிக்கலாம். அதாவது ஒரு மணி நேரம் தொடர்ந்து நீ படித்தால் சாக்லேட் தருவேன்; பேனா பரிசு தருவேன்... என்று ஊக்கப்படுத்திக் கவனத்துடன் படிக்கச் செய்யலாம். 'டிஸ்லெக்சியா' எனப்படும் கற்றலில் குறைபாடு உள்ள குழந்தைகளுக்குக் கணிதம், மொழியின் எழுத்துகள் போன்றவற்றைப் படிப்பதற்கும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்கும் கடினமாக இருக்கும். இக் குழந்தைகளுக்கு என்று சிறப்பான பாடத் திட்டங்களும், பயிற்சி முறைகளும் இருக்கின்றன.

## டிஸ்லெக்சியா குறைபாடு!

**மல்லிகா விஸ்வநாதன், செய்யூர்:**

**என் மகன் எப்போதும் செல்ஃபோனும் கையுமாக இருக்கிறான். தூங்கும்போது கூட கையருகே செல்ஃபோன் இருக்கிறது. இதனால் மனநிலையில் பாதிப்பு வருமா?**

**மனநல மருத்துவர் டாக்டர் ஷாலினி:** எனக்குத் தெரிந்த ஒருவரின் மகன் எட்டாவது படிக்கிறான். ரொம்ப கூச்ச சுபாவம் உடையவன். தமது மகன் கூச்சமில்லாமல் அனைவரிடமும் பேசிப் பழக வேண்டுமென அப்பா மொபைல் வாங்கிக் கொடுத்திருக்கிறார். மகனும் கூச்சம் களைந்து நண்பர்களிடம் பேசியிருக்கிறான். ஒருநாள் மொபைல் panel உடைந்துவிட்டது. அப்பாவிடம் சொன்னால் திட்டுவாரே என்று புது மொபைல் வாங்க பணத்தை வீட்டிலேயே திருடினான். பின்னர் டாப்-அப் செய்ய ஐம்பது, நூறு, ஆயிரம்... எனத் திருடுவதைப் பழக்கப்படுத்திக்கொண்டான். ஒரு நாள் அப்பாவுக்குத் தெரிந்து அதிர்ந்தார். கூச்ச சுபாவம் மறைந்து, திருட்டுச் சுபாவம் வந்துவிட்டது. இன்றைய கால கட்டத்தில் மொபைல் வைத்திருப்பது பாதுகாப்பு என்று எண்ணி குழந்தைகளுக்கு வாங்கித் தருகிறார்கள். இது தேவையற்றது. காஸ்டலியான மொபைல் வைத்திருப்பது மதிப்பு


உங்கள் சந்தேகங்களை 'கல்கி கிளினிக்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@
ஒரு ஸ்பேஸ்

என்ற எண்ணத்தில் இளைய தலைமுறையினரிடம் திருடும் பழக்கம் அதிகரித்திருக்கிறது. மொபைலை ஆபரேட் செய்ய நமது கட்டைவிரலை அதிகமாகப் பயன்படுத்துகிறோம். இதனால், கட்டை விரலில் carpalr tunnel எனும் எலும்போடு தொடர்புடைய நரம்பு நசுங்கிப் போக வாய்ப்புள்ளது. மொபைல் பயன்பாடு அதிகமானதால் பல்வேறு சிறு உயிரினங்கள் அழிந்து வருவதாக, பூச்சி இயலாளர்கள் கூறுகின்றனர். பெரிய உயிரினமான மனிதனுக்கு அழிவு வந்தால்தான் மொபைல் பேசுவதைக் குறைத்துக் கொள்வோம் என்றெண்ணாமல் இப்போதே விழித்துக் கொள்வோம்.

அச்சுதானந்தன், கரூர்

**குழந்தைகள் தூங்கும்போது அவர்களது கை கால்கள் சில சமயம் சடக்கென்று தூக்கிப்போடுவது போல் செய்கிறார்களே, இது ஆபத்தானதா?**

குழந்தைகள் நல மருத்துவர் நவமணி பிரபாகரன்: இதில் இரண்டு வகை உள்ளது.




முதல் வகை Jiffernis எனப்படுவது; இது ஆபத்தில்லாதது. பொதுவாக எல்லாக் குழந்தைகளிடமும் காணப்படும். இது அடிக்கடி தென்பட்டால் கால்ஷியம் உட்பட சத்தான மருந்துகளைக் கொடுத்துச் சரிபடுத்தலாம்.

இரண்டாவது வகை 'Myoglonic' எனப்படும் வலிப்பு நோய். இது ஆபத்தானது. இந்த வகையில் குழந்தையின் உடலானது மின்சாரம் ஷாக் அடித்தால் எப்படித் தூக்கிப் போடுமோ, அதுபோன்று தூக்கிப் போடப்படும். இந்த வலிப்பு தென்பட்டால் கண்டிப்பாக மூளையில் பிரச்னை என்று அர்த்தம்.

தாய் கருவுற்றிருக்கும்போது வலிப்பு ஏற்பட்டாலோ, அல்லது மரபியல் காரணங்களாலோ Myoglonic வலிப்பு குழந்தைகளைத் தாக்கலாம். குழந்தை, பிறந்த சில நாட்களிலிருந்து முறையான மருந்துகளை அளித்தால் இந்த வலிப்பு நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

தொகுப்பு: **ஆர்.கே.**


* ஆனந்தன்



* ஷாலினி




* நவமணி பிரபாகரன்



kly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்போனில், kacll என்று டைப் செய்து
கள் கேள்வி, பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

# பொய்மான் கரடு!



சேலம் - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சேலத்திலிருந்து ஒன்பது கி.மீ. தொலைவில் மல்லூருக்கு அருகிலிருக்கும் பொய்மான் காடு, அமரர் கல்கி வாசகரிடையே ரொம்பவும் பிரபலம். கிழக்கு நோக்கியபடி இருக்கும் இரு பாறைகளின் இடுக்கில் ஒரு குறிப்பிட்ட தூரத்திலிருந்து, குறிப்பிட்ட கோணத்தில் பார்த்தால் மட்டுமே, மான் துள்ளி வருவதைப் போன்று தோற்றம் தெரியும். கோணமும் தூரமும் சற்று பிசகினால்கூட மான் மாயமாகி விடும். எனவே, பொய்மான் கரடு.

இந்தக் காடு இராமாயணத்தில் சீதையை ஏமாற்றிய மாய மான்(மாரீசன்) என்றும்... மானின் மீது இராமன் அம்பு எய்தபோது மான் மலையாய்ச் சமைந்துவிட்டது என்றும்... அம்பு பட்ட பிளவில்தான் மாயமான் தோன்றுகிறது என்றும்... புராணம் தோய்ந்த செய்திகள் இங்கே உலவுகின்றன. இப்போது காடின் மீது குடியிருப்புகள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. அவை அதிகமானால் ஏதோ ஒரு கோணத்தில் தெரியும் மாயமான், எந்தக் கோணத்திலும் தெரியாமல் போகும் ஆபத்து அதிகம்!

வாசகர் யோசனை: **இடைபாடி அமுதன்**



சேலம்

மாவட்ட ஸ்பெஷல்

நியூஸ் ஏந்தி பவன்

# சுகம் தரும் சுகவனேஸ்வரர்




இப்போ இருக்கிற சேலம் மாநகரின் மையப் பகுதி, புராண காலத்தில் வன(ஏ)மா இருந்திருக்கு. அங்கே ஈஸ்வரன் இருந்திருக்கார். பிரம்மா, சுக ரிஷி மீது உன் முகம் கிளி முகமாகக் கடவது என்று சபிக்கிறார். அந்த ரிஷி, இந்த வனத்துக்கு வந்து ஈஸ்வரனை பூஜித்து, இயல்பான முகம் பெற்று முக்தி அடைகிறார். வனத்தில் உறைந்திருக்கும் ஈஸ்வரன், சுகரிஷிக்கு சுகமளித்ததால் 'சுகவனேஸ்வரன்' என்றழைக்கப்படுகிறார்.

இறைவி சுவர்ணாம்பிகை எனப்படும் திருச்செம்பொன் நாயகி, மூலவர் லிங்க வடிவத்துடன் இருபுறமும் இறக்கைகள் தாங்கியுள்ளார். சுவாமி தரிசனத்தின்போது பக்தர்களுக்கு இறக்கைகள் தெரியாது. அபிஷேகத்தின்போது மட்டுமே தெரிய வாய்ப்பு. ஆதிசேஷன் பூஜித்த தலம். அதனால்தான் கோயிலின் தீர்த்த குளத்தில் தவளைகள் ஏதும் இல்லை!

சுவாமி தரிசனத்துக்காக வந்திருந்த நடிகர் எஸ்.வி. சேகர், கிளி முகம் தாங்கிய சுகபிரம்ம ரிஷிக்கெனத் தனியாக ஒரு சிறு கோயில் கட்டித் தந்துள்ளார். வைகாசி விசாகம் பத்து நாள் பெருந்திருவிழா. திருத்தேர் திருவிழா, சேலம் மாநகர மக்களுக்கு ஈஸ்வரன் கோயில் தேர்த் திருவிழா. ஆண்டுதோறும் அனைவர்க்கும் சுகம் அளிக்கும் பெரு விழா.

வாசகர் யோசனை: **இரா.கணேசன், சேலம்**



சின்னஞ்சிறிய அழகான மலை. அதன் மேல் தளத்தில் எழில் நிறைந்த கோயில். அழகிய குன்றினைச் சுற்றிலும் உயர்ந்தும் நீண்டும் சரிந்திருக்கும் மலைத் தொடர்கள், அத்தனையும் பசுமை. காணும் இடமெல்லாம் கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்குமாகப் பசுமை. இத்தனை ரம்மியமான ஓமலூர் காருவள்ளியில் கோயில் கொண்டுள்ளார், பிரசன்ன வெங்கட்டரமண சுவாமி. சேலத்தில் சின்னத் திருப்பதி இது!

திருப்பதி என்றாலே அது ஆந்திராவின் திருமலைதான். அங்கு கோயில் கொண்டுள்ள வேங்கடவனே இங்கும் எழுந்தருளியிருப்பதால் இத்தலம் சின்னத் திருப்பதி. முன்னூறு அடி உயர மலை ஏறிச் சென்றால், கோயிலை அடையலாம். இருநூற்றுப் பதினைந்தடி நீளம், தொண்ணூறு அடி அகலம் கொண்ட மதிற்சுவருக்குள் திருக்கோயில். கிழக்கே பிரதான நுழைவாயில். வடக்கே திருவாயில்.

'குன்றம் ஏந்திக் குளிர் மழை காத்தவருக்கு' ஒரு கும்பிடு போட்டபடி கோயிலின் உள்ளே நுழைகிறோம். வான் உயர்ந்த கொடி மரம், பலி பீடம், விளக்குத்தூண் கடந்து உள்ளே செல்கிறோம். வடபுற மதிற்சுவரையொட்டி சிறிய சன்னிதியில் ஆஞ்சநேயர். கருணை மழை வேண்டிக் கருவறை நோக்கிச் செல்கிறோம். இரு புறமும் இரு தேவியர் உடன் நிற்க வெங்கட்ட ரமண சுவாமி நடுவே நின்று அருள் காட்சி வழங்குகிறார்.


வாசகர் யோசனை: சுப்ரமணி, காருவல்லி

சேலம் மாவட்ட ஸ்பெஷல்

# சின்னத் திருப்பதி!







"என்ன கெளம்பிட்டியளாக்கும்?"

"போர ஜோலிக்குப் போயித்தானே ஆவணும்."

"தூரம் தொலைவெட்டா இருக்கே. வயசான காலத்துலெ... இங்குணக்குள்ளேனா பரவாயில்லை."

"இது பெரிய கேதமில்லையா... அதெல்லாம் பார்க்கமுடியுமா அப்புறம் எப்பப் போயிக் கேப்பியாம்? ஒரு மாசம் ஓடிடுச்சு. காரியத்துக்கும் போகத் தோதுப்படலெ..."

"நல்ல சாவுதானே?"

"ம். என் ஜோட்டு ஆளுதான்."

"எல்லாம் நம்ம கையிலயா இருக்கு, கூப்பிட்டா போகவேண்டியதுதேன்."

"அது உள்ளதுதேன்."

"புள்ள குட்டிகளுக்குக் கல்யாணம் முடிச்சாச்சா?"

"ம்! எல்லாம் தல எடுத்துடுச்சுக. ஒரு கொறையும் இல்லெ. இங்க அடிக்கடி

# ஒளியும்

பாரதிபாலன்

வருவாருள்லே...!''

''ஆமா... ஆமா... வெத் தலை பாக்குக் கடை வெச்சருக் காருன்னீகளே...''

''சும்மா ஆத்தமாட்டாப்புலெ. ஜாதகம் பாத்துக்கிட்டிருந்தாப்புலெ... அந்தாக்குனெ ஒரு கடையை வெச்சு ஒக்காந்திட்டாப்புலெ.''

''மேலுக்குச் சேட்டமுள்ளாமயா கெடந்தாரு...?''

''வெடிப்பாத்தேன் இருந்தாருன்னாங்க. காலையிலெ எழுந்திருச்சதும் வீட்டுக்கார அம்மாட்ட கொஞ்சூண்டு நீச்சத் தண்ணி கொண்டான்னுருக்காரு... சரின்னு அந்தம் மாவும் கொண்டாரப் போயிருக்கு... வந்து பாத்தா அந்தாக்குலெ சாஞ்சிட்டாராம். பேச்சு மூச்சக் காங்கலையாம்... உசிரு பிரிஞ்சுடுச் சாம்...''

''ப்சு! நல்ல சாவுதேன் போங்க. இழுக்காம பறிக்காம போய்ச் சேந்திட்டாரு...''

ஒரு பஸ்ஸைப் பிடித்து வந்திருக்கலாம்; இப்படி வேகாத வெயிலில் எதுக்கு வேகு வேகுன்னு நடக்கணும்; மிஞ்சிப் போனா ரெண்டு ரூபா துட்டு; போயிட்டுப் போவுது; கழுதைய விட்டெறிஞ்சா அலுங்காமக் கொண்டுபோய் விட்டுப்பிடுவான். எவ்வ ளவோ செலவு ஆகுது, திங்காம உங்காம ஊருப் பயகளுக்குக் கொடுக்குது; சனியன் ரெண்டு ரூபா துட்டுன்னு பஸ்லெ வந்திருக்க லாம்; சங்கதி அதுவல்ல. மனசுக்கு வேற ஏக்கம்! சோமு ஆசாரியோடு இப்படித்தான் - இதே வழியில்தான் பேசிக் கொண்டே நடப்பார். இப்போது சோமு ஆசாரி இல்லை. அவர் இல்லாவிட்டால் என்ன அவரோடு பேச முடியாதா? இப்படி நடக்கிறப்ப ஒவ்வொன் றைப் பார்க்கிறப்பவும் அவர் நினைப்புதான். உடல் தளர்ந்தாலும் மனம் வீராப்புதான். மனம் பொங்கிக்கொண்டு வந்தது!

''நமக்குக் கொடுத்து வெச்சலவு அம் புட்டுதேன்; திங்கிறதுக்கும் உடுத்துறதுக் கெல்லாம் எழுதி வாங்கிட்டு வந்தி ருக்கணும்'' என்பார் சோமு ஆசாரி. அவர் சொல்வது வாஸ்தவம்தான். ஒரு கொடையவாவது கையிலெ பிடிச்சுட்டு வந்திருக்கலாம். கொடை கொண்டு வர்றது பெரிசில்ல. அது சனியன சூதானமா திருப்பி வீட்டுக்குக் கொண்டாரணுமே? எங்கிட் டாவது போட்டுட்டு வந்திட்டா அவ்வளவு தேன்! அவ விடமாட்டா; அவ வாய்க்குப் பயந்துதேன் எதுக்குடா அந்தத் தொந்தரவுனு விட்டாச்சு! மணியக்காரருக்கு வெயிலின் உக்கிரம் தாங்க முடியவில்லை. என்னா இன்னும் கொஞ்சத் தூரம்தானே!குளத்தத் தொட்டுப் பிட்டா அப்புறம் சொகம்தேன். புளிய மர நிழலே பராக்குப்பாத்துட்டே வெரசா போயிடலாம். சோமு ஆசாரி இருந்தார்னா பாட்டுப்பாட ஆரம்பிச்சி டுவார். இப்படி இருமருங்கிலும் புளிய மரங்கள்; அடர்ந்த நிழல்; இப்பத்தான, வண்டி, காரெல்லாம் எத்தன சனங்க இந்த

### சேலம் துக்கடா!

இராஜராஜ சோழன் இலங்கைப் போருக்கு சென்றபோது அவரது வயது 17. இராஜராஜனின் தளபதி கொல்லி மழவன் இலங்கைப் போரில் இறந்தான். அவன் நினைவாக கட்டப்பட்டதுதான் தாசூர் ஏரி.

- அ.யாழினி பர்வதம்

வழியா போயிருக்கும், வந்திருக்கும். நமக்கே எம்பது வயசு; தாத்தன் பூட்டன் காலத்து மரங்க!

பயபுள்ளீக அம்புட்டையும் புடுங்கிப் போட்டுட்டு, அகலமா ரோடு போடப் போறாங்கலாம்; நாலு வழிப் பாதையாம்! மூணு மயிலு, நாலு மயிலு தூரம் எம்புட்டு மரங்க! அம்புட்டையும் தரை மட்டமாக்கிப் போட்டுட்டு தங்க நாற்கரைச் சாலை கொண்டாரப் போறாங்கலாம். அப்புறம் எம்போல அப்புராணிங்க எல்லாம் இப்படி நடக்கமுடியுமோ என்னவோ...!

மணியக்காரர் நடை வேகம் கண்டது. காலில் செருப்பு இல்லை. சிரமத்தோடுதான் நடந்தார். ஆனாலும் அது தெரியவில்லை. "சித்த இப்படி நின்னீங்கன்னா; தெச்சுக் கொடுத்துப்பிடுவேன்'' என்றான் செருப்புத் தைக்கும் சுப்பையா, அவன் அப்படித்தான் சொல்வான். அவன் பேச்சைக் கேட்டால் போற ஜோலி தொந்தரவு கெட்டுப் போயிடும்னு அவன் பேச்சுக்கு 'ஈங்' கொடுக்காம செருப்பை உதறிப் போட்டுவிட்டு நடந்துவிட்டார். "தினமுமா செருப்பு போட்டுக்கிட்டுத் திரியுது. தெக்க வடக்கன்னு எங்குட்டாவது ஜோலி தொந்தரவுனு கிளம்பினாத் தானே அது கழுதையத் தேடுது! இல்லைன்னா அந்தப் பகுமானமெல்லாம் நமக்கெதுக்கு?

''சின்னமனூர் செவ, ஒரு ஜோலியாப் போவணும்; நம்ம உருப்படிய தோது பண்ணி வச்சுக்கனு அந்த வண்ணாத்திட்ட முந்தா நாளே சொல்லுச்சு. இந்தா அந்தான்னு கிளம்புறவரைக்கும் காணோம்; அப்புறம் ஆத்துசெவ போயி கையோட ஆளக் கூட்டியாந்து, இந்த நாலு முள வேஷ்டியையும் இந்த சட்டைத் துணியையும் வாங்கப்பட்ட பாடு இருக்கே; வருசக் கூலினா எல்லாப் பயலுகளுக்கும் தொக்குதேன்!

**ஊ**ருக்குள் நுழைந்தும், ஒரு மாதிரி அந்நியமாக இருந்தது! நாளுக்கு நாள் எல்லா ஊர்களும் ஊதிக் கொண்டேதான் போகின்றன. ஊளைச் சதைக்காரன் போல! அப்படியே உருவம் மாறிவிடுகிறது. விவசாயிகள், சம்சாரிங்க நடமாட்டம் குறைந்து, வியாபாரிகளின் நடமாட்டம் கூடவும் ஊரின் முகவாட்டமே மாறிவிடுகிறது. கட்டவண்டி, மாட்டு வண்டி நின்றிருந்த இடமெல்லாம் இப்ப காரும் பைக்கும் தான்! தெருவில் ஆடு,மாடு கோழிகளை எல்லாம் எங்க காங்க முடிகிறது!

மணியக்காரர் ஒரு கனம் திகைத்து நின்றார்! தெரு தப்பி வந்துவிட்டோமோ! சுற்றுமுற்றிலும் பார்வையை ஓட்டினார். திசை தெரியவில்லை. திக்கும் புரியவில்லை. தெரு தப்பி வந்துவிட்டோமோ! முன்னும் பின்னுமாக நடந்து எதையோ தேடினார். பத்திரகாளியம்மன் கோயில் வாசல் தெரிந்தது! அதுக்கு எதுத்தாக்குலெ உள்ள சந்துதேன். நடந்தார். எல்லாம் மாறித்தேன் தெரிந்தது. ஒரு அம்மா தெருவில் முக்காலியைப் போட்டுக் கொண்டு பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தாள்.

''ஜோசியக் காரு வீடு எதும்மா...?''

''எந்த ஜோசியரு...?''

''அனுகக்குள்ள தவறிப் போனாரே...''

''அது அந்தத் தெருவுள்லெ. இங்க வந்துட்டீக!''

ஒருகணம் திகைத்தார்.

''முதல்ல இங்கதான இருந்தாரு...?''

''கம்பீட்டர் சோசியம் பாக்குறவுக வீடுதானே? அது அந்தத் தெரு!''

''ஜாதககாரு - சோமு ஆசாரி!''

''அது யாரு?'' - அந்தப் பெண் யோசித்தாள்.

''அடியே, வெத்தல பாக்குக் கரைக் காரவுகளான்னு கேளு'' - என்று ஒரு குரல்!

''ஆமா'' என்றார் ஆர்வமாக.

''பின்ன, சோசியக் காரவுக, சோசியக் காரவுகன்னா... அந்தா ஒருத்தர் போராக பாரு... அதேன்...''

முன்புபோல் சட்டென்று வீட்டுக்குள் நுழைய முடியவில்லை! எல்லாமே மாறிப்போய் இருந்தது! இடமும் வலமுமான திண்ணை இல்லை! நீளமான ரேழி இல்லை. பட்டியக் கல் பதித்த பட்டக சாலை இல்லை. நடுச் சுவரில் முதுகைச் சரித்து இருக்கும் சோமு ஆசாரி, ஆளைக் கண்டதும் எழுந்து, ஓடி வருவாரே... இப்போது அப்படி ஒன்றுமில்லை! தயங்கித் தயங்கித்தான் நகர்ந்தார்.

''இது ஜோசியக் காரு வீடுதானே?''

''ம்! காமு ஒங்க அப்பாயிட்ட போய்ச் சொல்லு...''

அந்தச் சிறுமி ஒரு வீட்டுக்குள் ஓடினாள்! நான்கைந்து வாசல்கள் தெரிந்தன.

சற்று நேரத்தில் ஒரு கிழவி! மணியக்காரர் கிழவியைப் பார்த்தார். பார்த்துக்கொண்டே இருந்தார். எதையோ தேடும் பார்வை. சட்டென்று, தோளில் கிடந்த துண்டை எடுத்து முகத்தில் இழுகிக்கொண்டார். கிழவியும் அவரையே பார்த்தது. 'எங்கோ பார்த்தாப்புலெ இருக்கே' - என்ற கலக்கம்!

''என்னய தெரியுதா ஒங்களுக்கு?''

கிழவியின் கண்கள் கூர்மையாயிற்று!

''அவரு இருக்கப்ப வந்திருக்கீங்கள்லெ...''

''மணியக்காரர்!''

''சீலையம்பட்டிக்காரவுக தானே?''

''ஆமா!''

''கேதத்துக்கு வரலையா?''

''ஒண்ணும் தெரியமாப் போச்சே.''

''ஆள் போட்டு வுடுங்கனுச்சு. என்ன கேக்கிறான். என்னத்தயோ ஒண்ணுமண்ணா சொல்லிட்டு வந்துட்டது. ஒரே சடவு!''

''திடுதிப்புணு... நம்பவே முடியலே!''

''நல்லாத்தேன் இருந்தாரு! வீடும் நிறைஞ்ச மணியமாத்தேன் கெடக்கும். கல்யாணம், காதுகுத்துன்னு ஜனங்க காகிதத்த தூக்கிட்டு வந்திடுங்க. காலையிலெ வெள்ளனமா ஒக்காந்தார்னா வெளக்கு வைக்குற முட்டும் எந்திரிக்கவே முடியாது! அம்புட்டு 'குறிப்புக' வரும். ஒரு சனத்தைகூட முடியலைன்னு முடுக்க மாட்டார்! இத்தனைக்கும் ஒரு வெத்தலை பாக்குதேன். மிஞ்சிப் போனா காலணாவோ எட்டணாவோ. ஆறு ஆம்பளைகலெ பெத்து என்னத் துக்கு? ஒண்ணுகூட உருப்படி இல்லெ. இல்லைனா எதுக்குச் சீப்படுது!''

''வெத்தலை பாக்குக் கடை வெச்சாப்புலே...''

''இவிங்ககிட்ட எதுக்கு தொண்

## சேலம் துக்கடா!

மல்ல சமுத்திரத்தை ஆண்ட நல்லண்ணன் தொண்டைமான் தான் வசூலித்த வரிப்பணத்தைக் கொண்டு மக்கள் நலனுக்காக ஏரிகள் அமைத்ததால், ஆங்கிலேயர்கள் கோபமாகி நல்லண்ணனின் தலையை யானைக் காலில் நசுக்கி கொன்றார்களாம். அவர் நினைவாக அமைந்திருப்பதுதான் மல்ல சமுத்திரம் ஏரி.

- அ.யாழினி பர்வதம்

நாந்துகிட்டுக் கெடக்கணும்னு, கொழக் காகாரவுக தெருவுலே போயி 'வெத்தல பாக்குக் கடை போட்டாரு... தொட்டுக்கொ தொடச்சுக் கோன்னு இருந்தாலும் ரெண்டு மனுச மக்களையாவது பாத்து கிட்டுக் கெடந்தாரு...''

''என்னாச்சாம்!''

''இப்ப வந்தீகளே அந்த முக்குலெதேன் கடை! நல்ல எடுப்பான எடம்! எப்பவும் ஜனக்காடு மண்டிக் கெடக்கும். அதுக்கும் ஒல வெச்சாச்சு! 'போன்' கடைக்காரன் வந்து ஒக்காந்துட்டான். அசலூர்காரன்தேன். ஒத்திக்கு இருந் தாரு. மாச வாடகை, அட்வாசுனு உண்டானக் கொடுக்கிறேங்கப்ப வேணாம்னா சொல்லுவாக...''

''ப்சு! கொடுமையே...''

''அப்புறம் தெக்கப் போறேன்; வடக்கப் போறேன்னார். வயசான காலத் துலெ ஓங்க பாட்டுக்குச் சூசு வானு இருங்கன்னுச்சு...''

''மேலுக்கு வெடிப்பாத் தானே இருந்துச்சு?''

''அதெல்லாம் ஒண்ணு மில்ல. ஒரு காய்ச மண்ட யடின்னு ஒரு நாக்கூட படுத்த இல்லே...''

''ப்சு..''

''பிள்ளைங்க தலப் பொறட்டுதேன். பங்குபாகம் பிரின்னு மல்லுக்கு நின்னுச்சு. இன்னும் ஒஞ்ச பாடில்லை. வெட்டுவேன். குத்துவேன்னு திரியுதுக...''

''அம்புட்டுத்தேன், இதுக வவுசின்னு போக வேண்டியதுதேன்.''

''அவரு உகரோட இருக்கப்பவே ஆரம் பிச்சுடுச்சுக...''



"ஜோசியர் இருந்தால் தெரு முக்கு வரைக்கும் வருவார். மணியக்காரர் தனியாக வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தார்."

''நடக்குறதுதேன் நடக்கும்.''

''கேதம் கேக்க இன்னும் பேரும் வந்துகிட்டிருக்கு; ஒரு காப்பித் தண்ணி வாங்கிக் கொடுக்க ஒண் ணாவது வீடு தாங்குதான்னு பாருங்க...''

''பாவம்; ஓங்கபாட்டுக்கு நீங்க இருங்க. நீங்க என்னா செய்வீக...''

''மோரு வேணா தாரேன் குடிங்க...''

''தண்ணிக் கொடுங்க; போதும்.''

''இருங்க. ஒல வைக்கிறேன். சாப்பிட்டுப் போவீக...''

''அதெல்லாம் வேண்டாம்.''

''இனி எங்க போயி சாப்பிடுவீங்க. தூரம் தொலைவுலே இருந்து வந்தி ருக்கீக...''

''இதெல்லாமா தூரம்?''

''இருங்க...''

''அடுத்தாக்குலே பாக்கலாம்.''

''ஆமா; இனி அடுத்தாக்குலெ எப்ப வரப் போறீக...''

''பொழச்சுக் கெடந்தா பாக்க லாம்''... என்று எழுந்து கொண்டார். மனசு என்னவோ வாடலாகவே இருந்தது. வீட்டை ஒரு கணம் பார்த்தார். கண் இமைக்காத பார்வை. ஒரு பெருமூச்சுவிட் டார். ஜோசியர் இருந்தால் இப்படி விடமாட்டார்; கண் கலங்கியது. விருட்டென்று நடந்து வீதிக்கு வந்தார். 'போயிட்டு வர்றேன்' என்று சொல்லக் கூடாது. அதனால் ஒன்றும் சொல்லாமலெ நடந்தார். ஜோசியர் இருந்தால் கூடவே தெரு முக்கு வரைக்கும் நடந்து வருவார். மணியக் காரர் தனியாக வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தார். ●






### கஞ்சமலை சித்தர்!

திருமந்திரம் இயற்றிய திருமூலர், தம் சீடர் காலங்கி நாதரோடு கஞ்சமலைக்கு வருகிறார். பெயர்தான் கஞ்சமலையே தவிர, இயற்கை மூலிகை வளங்கள் மலைப்பிரதேசம் முழுவதும் தாராளம்! கஞ்சமலைக்கு வந்திருந்த திருமூலர், மூலிகை வாயிலாகத் தம் முதுமையை இளமையாக மாற்றிக்கொண்டு செல்கிறார். அத்தனை சிறப்பு மிக்கது கஞ்சமலை. பசுமை போர்த்திய அதன் அடிவாரத்தில் அமைந்துள்ளது அருள்மிகு சித்தேசுவர சுவாமி திருக்கோயில்.

அது சரி, கஞ்சமலை சித்தர் யார்? திருமூலரின் சீடர் ஆன காலங்கி நாதரே, சித்தேசுவர சுவாமியாக இங்கு கோயில் கொண்டுள்ளார். இறைவனின் கருவறைக்கருகிலிருந்து பாறைகளுக்கிடையில் உள்ள இடைவெளி வழியாக ஒரு நீரூற்று வற்றாது பெருக்கெடுத்து ஓடிக்கொண்டேயுள்ளது. கஞ்சமலை முழுவதுமாக வற்றாத நீர் வளம் கோயில் திருக்குளத்து நீரில் எவ்வளவு உப்பு போட்டாலும், குளத்து நீர் கரிப்பதில்லை.

## விஸ்வரூப ஆஞ்சநேயர்!



அண்ணாந்து பார்த்து வணங்கிட வைக்கும் ஆஞ்சநேயர், சேலம் - சங்ககிரி சாலையில் அரியானூர் கிராமத்திலிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் விஸ்வரூபமாக எழுந்து நிற்கிறார். அதன் பீடம் சேர்த்து மொத்த உயரம் எழுபத்தியேழு அடி. பீடம் பதினொரு அடி. சிலை மட்டும் அறுபத்தியாறு அடி உயரம். பொதுவாக பெருமாள் கோயில்களில் ஆஞ்சநேயர் இருப்பார். இவர் சிவலிங்கத்தை வைத்து தியானம் செய்யும் நிலையில் கருவறையில் வீற்றிருக்கிறார். கருவறை பீடம் மீது விஸ்வரூப ஆஞ்சநேயர் கம்பீரமாக நின்றபடி காட்சியளிக்கிறார். ''வலைத் தளத்தில் ஆஞ்சநேயர் சிலை உருவ உயரம் குறித்துத் தேடினேன். இந்தளவு உயரமுள்ள ஆஞ்சநேயர் அதில் பதிவாகவில்லை. எனவே, பக்தர்கள் வழிபடவே இதனை நிறுவியுள்ளேன்!'' என்கிறார் சித்தர் அடி சி.சிவப்பிரகாசம் பிரம்மச்சாரியார்.

வாசகர் யோசனை:
**சுசீலா, மல்லூர்**

● என்.குப்புசாமி, கோவை ❒

? "ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் யார் தவறு செய்திருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும்," என்று பிரதமர் சொல்கிறாரே - நம்பலாமா?

! ஆதர்ஷ் ஊழல் தொடர்பான முக்கிய ஆவணங்கள் "காணாமல்" போய்விட்டன! காமன்வெல்த் போட்டி ஊழல் தொடர்பான சி.பி.ஐ. அறிக்கையில் குற்றம் சாட்டப் பெற்றோர் பட்டியலில் சுரேஷ் கல்மாடியின் பெயரே இல்லை! இந்த லட்சணத்தில், ஸ்பெக்ட்ரம் விவகார விசாரணையும் நடவடிக்கையும் ஒழுங்காக நடைபெறும் என்று எப்படி நம்பிக்கை கொள்வது!

● எஸ்.ராமசாமி,
வடக்கு தமிர்பாளையம்

? ஆந்திராவில் ஜெகன்மோகன்ரெட்டி தமக்குச் சொந்தமான டி.வி.யில் காங்கிரஸ் தலைமையையும் பிரதமரையும் கடுமையாக விமர்சனம் செய்கிறாரே - அவர் மீது கட்சி நடவடிக்கை எடுக்காதது ஏன்?

! அதற்கு அவசியமில்லாதபடி அவரே விலகி விட்டாரே! அப்படி அவர் விலக வேண்டிய சூழ்நிலையை சோனியா உருவாக்கிவிட்டாரே!

● ஏ.எஸ்.யோகானந்தம்,
ஔவையார்பாளையம்

? முதல்வர் கருணாநிதி தமது சொத்து எவ்வளவு என்று சொன்னால், அதை 2001ஆம் ஆண்டு மதிப்புக்குத் தாமே வாங்கிக்கொள்வதாக பா.ஜ.க. தலைவர் எச்.ராஜா சொல்கிறாரே... இது எப்படி இருக்கு?

! ரொம்ப ஜாக்கிரதையாக, 'கருணாநிதியின் சொத்து' என்று சொன்னார் பாருங்க! கருணாநிதியின் குடும்பச் சொத்து என்று கூறியிருந்தால், சவாலை நிச்சயம் வாபஸ் பெறவேண்டி வரும்!

● எஸ்.கதிரேசன், பேரணாம்பட்டு ★

? என் முதலமைச்சர் பதவியைப் பறித்தால் கட்சிக்கு முழுக்குப் போட்டுவிடுவேன்னு கர்நாடக மாநில முதல்வர் எடியூரப்பா கூறியிருப்பது எதைக் காட்டுகிறது?

! கட்சித் தலைமையின் முடிவுக்கு அவர் 'இடையூறப்பா' என்பதைக் காட்டுகிறது. தென்னகத்தில் உள்ள ஒரே பா.ஜ.க. ஆட்சி கவிழக்கூடாது என்ற கவலையில் அக்கட்சியின் தலைமை, எடியூரப்பாவுக்கு வளைந்து கொடுப்பதை உணர்த்துகிறது. கறைபடிந்த கரத்தால் ஸ்பெக்ட்ரம் ஊழலைச் சுட்டிக் காட்டுவது கஷ்டம் என்பதைத் தெளிவாக்குகிறது.

● ப.சிவகுமார் பிரபு, திருப்பூர்

? சமீபத்தில் படித்து ரசித்து வியந்த புத்தகம்?

! படிக்கும் முன்னரே - நூலின் விமர்சனத்தைப் படித்து, வியந்து, வாங்கிப் படிக்கவும் விரும்பும் நூல்: First Draft. பத்திரிகை ஜாம்பவான் B.G.வெர்கீஸின் சுய வரலாறு

● ம.ஜானகிராணி, சென்னை-101

? ஆ.ராசாவின் தோளில் பிரதமர் தட்டிக் கொடுத்ததால் ஊடகங்கள் சர்ச்சை எழுப்புவது சரியா? நட்பு பற்றி திருவள்ளுவர் எழுதிய பத்து குறள்கள் தவறா?


! நமது பரம எதிரியைக் கூட ஒரு பொது இடத்தில் சந்திக்க நேரும்போது வணக்கம் தெரிவிப்பதோ கை குலுக்குவதோ பண்பாடு. நேற்றுவரை தமது அமைச்சராக விளங்கியவரை பிரதமர் சந்திக்க நேரும்போது எப்படி அலட்சியப்


* குவாட்ரோச்சி மேட்டர்!
* தேயும் நம்பிக்கை!

படுத்த முடியும்? இதைப் பெரிது படுத்த அவசியமில்லை. ராஜாவின் செயல்களை பிரதமர் ஆமோதித்ததாக ஆகிவிடாது. அதற்கு இதுவரை சாட்சியம் இல்லை.

**●ஜி.மகாலிங்கம்,**
**காவல்காரபாளையம்**

***? மனுதர்மத்துக்குத் தமிழகத்தில் மறுபிறவி கிடையாது என்று கலைஞர் கூறியிருப்பதற்கு அர்த்தம் என்ன?***



பொருந்தாத பொய்!



வெற்றிகர பிரிவு!

! ஜெ.ஆட்சி மீண்டும் வராது என்று அவரது அகராதிபடி அர்த்தம்! அது கிடக்கட்டும்; எந்த தர்மத்துக்குமே தமிழகத்தில் இடமில்லாமல் செய்து வரும் இந்த ஆட்சிக்கு, தமிழகத்தில் மறுபிறவி கோருகிறாரே!

**●சி.விஜயாம்பாள், கட்டிகானப்பள்ளி**

***? "ஒரு காலத்தில் ரூ.550 ஊதியம் பெற்று, இன்று 65,000வரை பெறுகின்ற அரசு மருத்துவர்கள், அதற்கு நன்றிக் கடனாக நோயாளிகளிடம் சேவை மனப்பான்மையோடு நடந்துகொள்ள வேண்டும்," என்று சுகாதாரத்துறை அமைச்சர் பன்னீர் செல்வம் சொல்கிறாரே?***

! கொடுக்கப்பட்டுள்ள அட்வைஸ் ரொம்ப சரி. ஆனால், அதைச் சம்பளத்துடன் அமைச்சர் தொடர்புபடுத்துவது ரொம்பத் தப்பு. 'Physician, heal thyself' என்று டாக்டர்கள், அரசியல்வாதிகளை நோக்கி பதிலடி கொடுக்கக் கூடும்.

**●வசந்தாகாந்த், கருப்பம்புலம்**

***? ஈ.மெயிலிலோ எஸ்.எம்.எஸ்.ஸிலோ அனுப்புற கேள்விகளுக்கு மட்டும்தான் பதில் சொல்வீங்களோ! எங்களுக்கெல்லாம் கார்டு தான் குறைஞ்ச செலவு...***

! தராசு தேர்வு செய்யறது கேள்விகளை மட்டுமே. எஸ்.எம்.எஸ்., ஈ-மெயில், என்பவை வாசகர்களின் சௌகரியத்துக்குத்தான். வசந்தாகாந்தின் எத்தனை கேள்விகளுக்கு இப்பகுதியில் பதிலளிக்கப்பட்டுள்ளது என்பதை யோசித்தால், உங்களுக்குத் தராசு மேல் சந்தேகம் உண்டாகாது.

**●எஸ்.ஜெயகாந்தன்,**
**புன்செய்புளியம்பட்டி**

***? காங்கிரஸ் கட்சிக்குப் பெருமை சேர்ப்பவர் கருணாநிதி என்கிறாரே தொல் திருமாவளவன்?***

! பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்லணும் - குறைந்தபட்சம் பொருந்த



# காங்கிரஸுக்கு கலைஞரால் பெருமையாமே?

மான நேரத்துலயாவது சொல்லணும். இல்லாவிட்டால் அபத்த அறிக்கையின் பரிமாணம் ஸ்பெக்ட்ரம் ஊழல் அளவுக்குப் பம்மி, வெடித்தும் விடும்!

●பா.ஜெயப்பிரகாஷ்,
சர்க்கார்பதி

? ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் எங்களைப் போல் செயல்படுங்கள் என்று எதிர்க்கட்சிகளுக்கு சோனியா காந்தி அறிவுறுத்தியுள்ளது குறித்து?

! குவாட்ரோச்சி விஷயத்தில் காங்கிரஸ் பின்பற்றிய நடைமுறையைத்தானே இதர கட்சிகளும் பின்பற்றுகின்றன. அப்புறம் எதற்கு அறிவுரை?!

●அம்பூரணி ச.நாராயணன்,
பாளையங்கோட்டை

? மாநிலத்தின் வளர்ச்சிக்கு உண்மையாகவே பாடுபட்டவர்களை, மக்கள் தேர்தலில் கைவிட மாட்டார்கள் என்பது பீஹாரில் நிரூபிக்கப்பட்டுள்ளது அல்லவா?




* இடையூறப்பா!



* விடுக்கும் சவால்



* மருத்துவர்களுக்கு மருந்து!



* திருப்பிக்கும் நிஜங்கள்

! அதுமட்டுமல்ல; ஜாதி அடிப்படையில் வோட்டு கேட்போருக்கும் அடியாள் பலத்தில் வெற்றி பெற நினைப்போருக்கும் பாடம் கற்பித்திருக்கிறார்கள். இவை இல்லாமலே, நல்லாட்சி மூலமே மக்களைக் கவர முடியும் என்று நிதிஷ்குமார் நிரூபித்திருக்கிறார்.

●எஸ்.கதிரேசன்,
பேரணாம்பட்டு

? காஞ்சிபுரம் கூட்டத்தில் பேசிய விஜயகாந்த், "மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நாலு மணி நேரம் கடன் வழங்கி சாதனை படைத்துவிட்டதாக ஸ்டாலின் கூறியுள்ளார். அவர் என்ன அப்பா வீட்டுச் சொத்தையா கொடுத்தார்?" என்று பேசியிருப்பது கொச்சையாக இல்லையா?

! கடை தேங்காயை (வரிப்பணம்) வழிப் பிள்ளையாருக்கு (மக்கள்) உடைத்துவிட்டு அதைப் பெரிய சாதனை போல் காட்டிக் கொள்வதை விடக் கொச்சையான விஷயம் வேறு ஒன்று இருக்கிறதா, கதிரேசன்?

●வே.முருகேசன், சென்னை-88

? "முடங்கிய பாராளுமன்ற காலத்துக்கு எனக்குச் சம்பளம் வேண்டாம்," என்று காங்கிரஸ் எம்.பி.மனீஷ் திவாரி கடிதம் எழுதியுள்ளாராமே?

! கருமேகங்களிடையே ஓர் ஒளிக்கீற்று. எதிர்க்கட்சியில் இவர் இருக்க நேர்ந்து, அப்போதும் இதையே கூறுவாரானால் வானவில்!

❒ ரூ.150/- பரிசு பெறுபவர்:
என் குப்புசாமி, கோவை

* ரூ.75/- பரிசு பெறுபவர்:
எஸ்.கதிரேசன், பேரணாம்பட்டு

உங்கள் கேள்விகளை 'தராசு' என்று குறிப்பிட்டு kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்ஃபோனில், KAGQA என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி, பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

விரைவில்...

**கண்ணனைத் தேடி**
- வேளுக்குடி ஸ்ரீ கிருஷ்ணன் சுவாமிகள்

**இளமை எக்ஸ்பிரஸ்**
- இந்திரா பார்த்தசாரதி

**உள்ளும் புறமும்**
- வண்ணநிலவன்

**ஸ்ரீலலிதா பாகம் 2, 3, 4**
- டாக்டர் சுதா சேஷய்யன்








**கல்கி**
**மங்கையர் மலர்**
**கோகுலம்**

இதழ்களில் வெளியான
அரிய தொடர்கள், நூல் வடிவில்.

மேலும் விவரங்கள் அடுத்த வாரம்...

# "தலையைச் சுத்துது தாங்க முடியலை!"




''அப்படியா! காலையிலே எப்ப எழுந்தீங்க? எப்ப சாப்பிட்டீங்க! காஃபியா.. டிஃபனா? ரொம்ப நேரம் பேப்பர் எதுவும் படிச்சீங்களா? ஏதாவது குழப்பமா? மனைவி எதுவும் சொன்னாங்களா? இல்லே வொர்க் பண்ணுற ஆஃபீஸ் விஷயமா எதுவும் 'திங்க்' பண்ணீங்களா? பர்சனலா எதுவும் பிரச்னையா...? இல்லே... நர்ஸ்! பேஷண்ட்டைக் கொண்டு போகச் சொல்லு! மயக்கமாயிட்டாரு!''

– சீத்தா தம்பி

''தலைவரு பொய் சொல்றதைக் குறைச்சிட்டாரா...?''

''ஆமாம்... அவரு மேடையில எல்லாம் அதிகமா பேசக் கூடாதுன்னு டாக்டர் சொல்லிட்டாரில்லே!''

- மு. பெரியசாமி

''உங்க மனைவிக்கு மூளை குழம்பியிருக்கும்னு எப்படி அடிச்சுச் சொல்றீங்க?''

''இப்பெல்லாம் என்னைத் திட்டவே மாட்றா டாக்டர்!''

- 'பாபு' கே.அருள்சாமி

"என்ன சொல்கிறீர் அமைச்சரே... எதிரி கடல் மார்க்கமாகச் செய்தி அனுப்பியிருக்கிறானா?"

"ஆம் மன்னா... ஓலை கொண்டு வந்திருப்பது புறா இல்ல.. சுறா!"

- சீர்காழி வி. ரேவதி



# புறாவல்லம்ம் சுறாம்ம்!



"நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஊழலை முற்றிலுமாக ஒளிப்போம்..."

"ஒளிப்போம் இல்ல தலைவா, 'ஒழிப்போம்'னு சொல்லுங்க!"

- சீர்காழி வி.ரேவதி

"என்ன சார்! ஊருக்குப் போயிருந்த உங்க 'வொய்ஃப்' ஊர்லேர்ந்து வந்துட்டாங்க போல?"

"எப்படிக் கண்டுபிடிச்சீங்க?"

"நீங்க குளக்கரைப் படிக்கட்டிலே வந்து உட்கார்ந்திருக்கீங்களே... அதான் கேட்டேன்!"

- சித்ரா தம்பி





"தேங்காய் வியாபாரி ஏன் இப்படி ஓடாய்த் தேய்ந்து போய் காட்சியளிக்கிறார்?"

"இன்கம்டாக்ஸ்காரங்க 'துருவித் துருவி'' விசாரிச்சாங்களாம்...!"

- நெ.இராமன்


ஃபோட்டோவுடன்
இடம்பெறும்
ஒவ்வொரு
அனுபவத்துக்கும்
பரிசு ரூ.50/-



# ஆச்சர்யம்

**வே**ண்டுதல் நிறைவேற்ற திருப்பதி சென்றிருந்தபோது (1983) எடுத்தபடம் இது. திருப்பதி மலை மேலே சுற்றி வரும்போது நமது சூப்பர் ஸ்டார் தனியாக வந்து கொண்டு இருந்தார். நாங்கள் ஆச்சர்யம் அடைந்து, அவரிடம் அணுகி மரியாதை நிமித்தமாக வணக்கம் கூறினோம். அவரும் சிரித்துக்கொண்டு எல்லோரிடமும் அன்பாகப் பழகி எந்த ஊர் என்று விசாரித்து விவரம் தெரிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். பின்பு நாங்கள் அனைவரும் அவருடன் சேர்ந்து புகைப்படம் எடுக்க விரும்பினோம். அவர் மறுப்பு ஏதும் கூறாமல் தாராளமாக எவ்வளவு புகைப்படம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்.

- எம். ஆறுமுகம்,
பொள்ளாச்சி



**40** ஆண்டு காலப் பணிக்குப் பிறகு, 1996ல் ஒரு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியராகப் பணி ஓய்வு பெற்ற நான், 1995ல் பணியாற்றத் தொடங்கியது பழைய தஞ்சை மாவட்டக் கழகத் தொடக்கப் பள்ளி ஒன்றின் தலைமை ஆசிரியராகத்தான்!

அப்போது, 18.07.1962 அன்று நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் எனது பள்ளிக்கு (நெடுவாக் கோட்டை) வருகை புரிந்து, பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்த சமயம், அவர் நடித்த திரைப்படங்களின் பெயர்கள் யாவும் வருமாறு வரவேற்பு மடல் எழுதி, அதை நானே வாசித்தேன். அதைக் கூர்ந்து கேட்ட சிவாஜி, தன்னருகில் இருந்த அப்போதைய நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் கோபால்சாமி தென் கொண்டாருடன் ரசித்து வாய் விட்டுச் சிரித்து மகிழ்ந்தபோது எடுக்கப்பட்ட படம் இது!

சில வருடங்களுக்கு முன்பு, நான் கலை ஆசிரியராகப் பணிபுரியும் தாரமங்கலம் செங்குந்தர் மகாசன மேல்நிலைப் பள்ளியின் இலக்கியமன்றத் தொடக்க விழாவுக்கு இலக்கியச் செல்வர் குமரி அனந்தனை சிறப்புரையாற்ற அழைத்திருந்தார்கள். அவர் பேச்சுகளைத் தூரத்திலேயே நின்று கேட்கும் ரசிகன் நான்.

விழா நாளன்று அவர் பேச்சைக் கேட்க, ஆவலாக இருந்த நேரத்தில் திடீரென எங்கள் பள்ளியின் தலைவர் வித்யாரத்னா டாக்டர் டி.கே.சுப்பிரமணிய முதலியார் அவர்கள் மைக் முன்பு வந்து, "இப்போது நமது ஆசிரியர்களுக்கு இலக்கியச் செல்வர் நினைவுப் பரிசு வழங்கிவிட்டு, சிறப்புரை ஆற்றுவார்" என்றார். எனக்கு ஆனந்த அதிர்ச்சி.

மேடை ஏறி அவரிடம் வெள்ளித் தட்டினைப் பெறும்போது நான் பத்திரிகைகளில் ஜோக்குகள், சிறுகதைகள் எழுதி வருவதைச் சொன்னேன். 'எழுதுவதை விட்டுவிடாதீர்கள்' என்று சொல்லி என் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

**- செ.ஆசைத்தம்பி, தாரமங்கலம்**



இன்று சிவாஜி இல்லை. அவர் திறந்து வைத்த அந்தக் கட்டடமும் இல்லையாம்! காரணம், பள்ளி விளையாட்டிட விரிவாக்கம் அது இடிக்கப்பட்டு விட்டதாம். அப்போதைய எனது பழைய மாணவன் வருத்தப்பட்டுச் சொன்னார். கேட்டதும் என் நெஞ்சில் ஒரு 'சுருக்' வலி!

**- ஜய்ராம்ஜி, சென்னை**

அப்துல்கலாம் குடியரசுத் தலைவராக இருந்தபோது கோவைக்கு வந்தார். முன்னமேயே நான் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு கேட்டு கடிதம் எழுதியிருந்தேன். கோவையில் வந்து சந்திக்குமாறு அழைப்பு வந்தது. சென்றேன். கோவை அரசினர் விருந்தினர் மாளிகையில் சந்தித்தேன். எதிரே அமரச் செய்து பேசினார். அவரைப் பற்றிய செய்தித் துணுக்குகளையும் படங்களையும் சேர்த்து ஆல்பம் தயாரித்திருந்தேன். அதைக் காட்டினேன். "இதுபோன்ற வீண் வேலைகளை விடுங்கள்" என கண்டித்தார். என் ஆசையை அறிந்து என்னோடு சேர்ந்து புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

**- கலாம் சுப்பிரமணியன், மதுரை**



**வாசகர்களே!**
திருமண ஃபோட்டோ மட்டுமல்ல, நீங்கள் பெரிதும் ரசிக்கும், பொக்கிஷமாகப் பாதுகாக்கும் ஃபோட்டோ எதுவாயினும் 10 வரிகள் குறிப்புடன் எழுதி அனுப்புங்க...





# காதல்... கல்தோசை... கங்க்ராட்ஸ்...

## - அஜித் ரகசியம்

அஜித்தை எனக்கு அறிமுகப்படுத்தி வெச்சது ஸ்ரீதேவியும் போனிகபூரும்தான். அப்போ அவங்க தயாரிச்ச ஒரு படத்துல நடிக்கிறது சம்பந்தமா, அஜித் பேச வருவார். கூடவே, எனக்கு ஓர் அற்புதமான நண்பர் கிடைப்பார்னு நான் அப்ப நெனைச்சுப் பார்க்கல. ஆனா அதுதான் நடந்தது.

அஜித்தும் ஷாலினியும் ராத்திரிதான் வருவாங்க. ஷாலினி எப்போதும் புடைவைதான் கட்டுவாங்க. வந்து டேபிள்ல உட்கார்ந்தா அங்கே காதல் பூத்துக் குலுங்கும். இனிமை மணம் கமழும். அதிகம் பேசமாட்டாங்க. பேசக் கூடிய ஒவ்வொரு வார்த்தையையும் அஜித் கேட்டு வாங்கினாப் போல இருக்கும்.



ஷாலினிக்கு எப்போதும் வாழைப்பழ தோசைதான் பிடிக்கும். கேரள சுவையோட நாங்க செஞ்சித் தர்ற தோசையை ரெண்டு பேரும் அனுபவிச்சுச் சாப்பிடுவாங்க. ஒரு சமயம், நான் செஞ்சுத் தர தோசையை ரொம்ப சுவைச்சவங்க, என்கிட்ட, அதனோட செய்முறையை எழுதித் தாங்கன்னு கேட்டாங்க. உடனே நான் அதை ஒரு அழகான பேப்பர்ல எழுதி, கீழே ''ஹாப்பி குக்கிங்''ன்னு சொல்லி கையெழுத்துப் போட்டுக் குடுத்தேன்.

பொதுவா, இது மாதிரி நிறைய நடக்கும். அதெல்லாம் ஷெஃப் வாழ்க்கையில ரொம்ப சகஜம். பெரிய மனுஷங்க வீட்டுக்காரங்க, ஷெஃப்பை சந்தோஷப்படுத்தணும்னு இப்படி எழுதி வாங்கிக்குவாங்க. அவங்க கேக்கறதைப் பார்த்தா, ஏதோ நாளைக்கே அந்த ஐட்டத்தைச் செஞ்சு பார்த்து, சாப்பிடப் போறவங்க மாதிரி தோணும்.

ஆனா நடக்கறது வேற. அவங்க காரோட டேஷ்போர்டுலயோ, குப்பைத் தொட்டியிலயோதான், அந்தச் செய்முறை அனாதையா கெடக்கும்.



ரெண்டு மாசம் ஆச்சு. ஒரு ராத்திரி, அஜித்தும் ஷாலினியும் வந்தாங்க. என் வாய் சும்மா இல்லாம, கேட்டேன்.

''ரெசிப்பி வாங்கிட்டுப் போனீங்களே மேடம். டேஷ்போர்டுல இருக்கா, குப்பைத் தொட்டிக்குப் போயிடுச்சா...''

அவங்க மெல்ல கண்ணை மட்டும் மேலே நிமிர்த்தி என்னைப் பார்த்தாங்க. தம் கையில இருந்த பர்ஸைத் திறந்தாங்க. அதுல நான் எழுதித் தந்த பேப்பர் நாலா மடிச்சு அப்படியே இருந்தது. கூடவே, சமையலறைக் கறை.

''எங்க குக்கோட கை கறை அது. அதை அவர் சரியா வெச்சுக்கல. நான் பத்திரமா வெச்சுக்கறேன்னு வாங்கி என் பர்ஸுலயே வெச்சுக்கிட்டு இருக்கேன்...''

என் திமிருக்கு விழுந்த பெரிய அடி. நான் வாயே திறக்கல. அஜித் அமைதியா சிரிச்சார். அவருக்கு இதெல்லாம் சகஜம்னு தோணிச்சு. அவங்களோட சீரியஸ்னஸ், ஈடுபாடு எனக்குப் புரிஞ்சுது.



அஜித்தும் அப்படிப்பட்ட ஈடுபாடு உடையவர். அமைதி, அடக்கம் இரண்டும் அவருக்கு இயல்பாவே உண்டு. ஒவ்வொரு முறை வரும்போதும், தமக்கு என்ன வேணும்னு தெளிவா கேப்பார். தன் சம்பந்தப்பட்ட முடிவுகளைத் தானே எடுக்கணுங்கறதுல அவருக்கு ரொம்பத் தெளிவு.

என்னென்ன ஐட்டம்கள் நல்லா இருக்கும்னு நம்மகிட்ட சஜ்ஜஷன் கேட்பார். அப்புறம், மெல்ல ஷாலினியோட பேசுவார். அவங்களோட விருப்பத்தையும் கேட்டுக்கிட்டு, அவர் ஆர்டர் சொல்லும்போது, அதுல குழப்பம் இருக்காது. தீர்மானம் இருக்கும்.

நல்லா சாப்பிடக் கூடியவர் அஜித். சினிமா நடிகன் என்பதற்காகப் பெரிய

கண்ட்ரோல் கிடையாது. அவருக்கு நிறைய வெஜிட்டேரியன் ஐட்டங்கள் பிடிக்கும். கறிவேப்பிலை பூண்டு குழம்பு, மிரப்பகாயா பட்டாணி கறி, இடியாப்பம், கல் தோசைன்னு சவுத் இந்தியன் டிஷ்கள் ஒரு பக்கம் என்றால், ரொட்டியும் தால் மக்கணியும் நார்த் இந்தியன் ஐட்டம்களில் ரொம்பப் பிடிக்கும். சிக்கனும் அப்பப்போ சாப்பிடுவாரு.

ஷாலினிக்குப் பன்னீர் டிக்கா பிடிக்கும். வாழைப் பழ தோசை எவர்கிரீன் ஃபேவரிட்.

அஜித்கிட்ட சகஜமா பேச முடியும், பழக முடியும். அப்போ, அவர் தொடர்ந்து ஃப்ளாப் படங்களா குடுத்துக்கிட்டு இருந்தார். ஆனால், அவர் பயங்கரத் தன்னம்பிக்கையோட இருப்பார். படங்களோட தோல்வி அவரைப் பாதிக்கவே இல்லை.

என் வாய் துடுக்குத்தனத்தால ஒரு தடவை, ''என்ன ஸார், படமெல்லாம் இப்படி ஆயிடுச்சு''ன்னு கேட்டுட்டேன். கேட்ட பிறகுதான் நாக்கைக் கடிச்சுக்கிட்டேன். ஆனால், அஜித் அசரவே இல்லை. பயங்கர உறுதியோட சொன்னார்,

''2000 இஸ் மை இயர். வெயிட் பண்ணுங்க''

இரண்டாயிரம் மட்டுமில்ல, அதுக்கு அப்புறம் ஒவ்வொரு வருஷமும் அவரோட ஒவ்வொரு படமும் வெற்றி அடைஞ்சுகிட்டே வருது.



அஜித்கூட சகஜமா பேச முடியும், பழக முடியும். அப்போ, அவர் தொடர்ந்து ஃப்ளாப் படங்களா குடுத்துக்கிட்டு இருந்தார்.

இதெல்லாம் அவர் என்கிட்ட பேசணும்னு ஏதாவது இருக்கா? ஒண்ணும் இல்லை. ஆனால், எல்லோரையும் சமமா நினைக்கிற மனசு அவருக்கு. அதே போல, பழசை மறக்கவும் மாட்டார்.

நான் சென்னையை விட்டு பெங்களூரு போன பிறகு, கல்யாணம் ஆச்சு. ஒருமுறை, நான் வேலை செஞ்ச ரெஸ்டாரண்டுக்கு வந்தவர், ஞாபகம் வெச்சுக்கிட்டு என்னைக் கேட்டிருக்கார். என் ஃபோன் நம்பரைக் கண்டுபிடிச்சுக் கூப்பிடச் சொன்னார்.

பேசப் பேச எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல. என் கல்யாண விஷயத்தைச் சொன்னேன். மனசார 'கங்க்ராட்ஸ்' சொல்லி, ஒரு நெருங்கிய நண்பரைப் போல் வாழ்த்தினார்.

இதுபோல, உண்மையான ஆத்மார்த்தமா நடந்துகிட்டவங்க, இன்னும் இருக்காங்க. சிவாஜி சாரோட மகன் ராம்குமார், இந்தியா சிமெண்ட்ஸ் என். ராமச்சந்திரன் எல்லோரும் இப்படிப்பட்டவங்கதான். அவங்களுக்குச் சமைச்சுப் பரிமாறினது அடுத்த வாரம் சொல்றேன்!

**(ட்ரீட் தொடரும்)**

## வட்டமேஜை

# பலிக்கட்டும்!



அது என்ன சார்...? 'சேலம் ஸ்பெஷல்' என்றால் பரிசுப் போட்டி சேலம் மாவட்ட வாசகர்களுக்கு மட்டும்? அவர்கள் பரிசு வாங்க... நாங்கள் வேடிக்கை பார்க்கவா? இது துளியும் நியாயமில்லை...!

**- எஸ்.சாவித்ரி, கோவை**

தி.மு.க. ஆட்சி மீண்டும் வந்துவிடக் கூடாது என்று நினைக்கும் கேப்டனுக்கு கேள்வி பதில் பகுதி மூலம் சரியான யோசனை வழங்கி விட்டீர்கள். சபாஷ்!

**- எஸ்.கே.மூர்த்தி, கும்பகோணம்**

தன்னுடைய வி.ஐ.பி.நண்பர் டிஸ்கரேஜ் செய்தும், தன் கேமரா காதலால் பல சிறந்த புகைப்படங் களையும், பரிசுகளையும் பதிவு செய் திருக்கிறார் தெருவோர ஃபோட் டோகிராபர் சுதாகர். அவருடைய ஆர்வம், அவருக்கு இன்னும் பல பரிசுகளை பெற்றுத் தரட்டும்!

**- என்.பாலகிருஷ்ணன், மதுரை**

ஒரு குறையுமில்லாதவங்களைப் போல நடிப்பில் வெளுத்து வாங்கும் அபிநயாவுக்கு தேசிய விருது கிடைக்கும் என்ற அமீரின் வார்த்தைகள் பலிக்கட்டும்!

**- ஏ.பி.எஸ்.ரவீந்திரன், வள்ளியூர்**

"தனிப்பட்டவர்களை நம்பி தி.மு.க. இல்லை. அது லட்சக்கணக்கான தொண்டர் களை நம்பியே இருக்கிறது'' என்று வீரபாண்டி ஆறுமுகம் சொல்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதே!

**- எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்**

தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப் படும் வழக்கமான சோகத் தொடர்கள் மத்தியில் கருப்பு ரோஜா ஆவணப் படம் மிக வித்தியாசமாக இருக்கும்.

**- சி.அனுஷா, சென்னை**

அசோகமித்திரன் எழுதிய 'கோயில்' கதை படிக்கும் எல்லோருக்குமே அவரவர் களது கிராமமும், பெற்றோரும், கோயிலும் கண்முன்னே காட்சி அளிப்பது நிச்சயம்.

**- ஆர்.ஷியாமளா, சென்னை**

டமால்-டுமீல்' பக்கம் டணால் தங்கவேலுவின் காமெடிபோல் 'குபீர்' சிரிப்பை வரவழைத்தது.

**- நித்யா வேங்கடேஷ், பல்லாவரம்**

சேலம் ஸ்பெஷல் ஒவ்வொரு பக்கமும் சேலத்து மாம்பழம் போல செம டேஸ்ட் & ஸ்வீட்..!

**- ஜே.சி.ஜெரினாகாந்த், ஆனந்தூர்**

யாருக்கும் வெட்கமில்லை! ஓ! ஞாநியா? சும்மா சொல்லக் கூடாது பிட்டுப் பிட்டு வெச்சுட்டீங்க. இதுக்கு மேல் ஸ்பெக்ட்ரம் ஊழல் பற்றி விரிவாகச் சொல்லத் தேவையில்லை!

**- வே.முருகேசன், ஆதம்பாக்கம்**






## சரியா? தப்பா? சடையாண்டி ஊற்று!

**ச**ஞ்சீவி மலைத்தொடர் இளம்பிள்ளை கிராமத்து, ஒற்றையடிப் பாதை. இங்கேர்ந்து நூறு மீட்டர் தொலவு ஏறி நடந்தீங்கனா, ஒரு கோயில் கண்ணுக்குத் தெரியும். மேலேர்ந்து ஓடி வர்ற ஊத்துத் தண்ணி பாறைகள் எடையில சுழிச்சி, கீழிறங்கி ஓடி வரும். அது தான் சடையாண்டி ஊத்து. அதன் ஒரு புறத்தில் பாறை இடுக்குகள் வழியாகத் தண்ணீர் வந்து ஓரிடத்தில் சுழல்கிறது. சடையாண்டி ஊத்துச் சுழலில், ஒரு பூவை மிதக்க விடுகிறார் பக்தர். சுழலில் பூ மிதந்து வந்து, தண்ணீர் தளும்பி வழியும் பாதைக்கு வந்து நீருடன் சேர்ந்து வெளியேறினால், நாம் நினைத்த காரியம் சரி. ஜெயம். சுழலில் மிதக்க விட்ட மலர், வேறு பக்கம் திரும்பிச் சென்று ஓரமாக ஒதுங்கிவிட்டால், நாம் நினைத்த காரியம் தப்பு, ஃபெயிலியர். என்ன? சரியா... தப்பா... என தண்ணீர் மீது மலரை மிதக்க விட்டுத் தெரிந்துகொள்ள சடையாண்டி ஊத்துக்குக் கிளம்பி விட்டீர்களா?

## இனிக்கும் சேகோ!

**பா**யசத்தில் மிதக்கும் முத்துகளைப் போல இருக்கும் ஜவ்வரிசி அதிகமாக உற்பத்தியாவது சேலம் மாவட்டத்தில்தான். மரவள்ளிக் கிழங்கிலிருந்து ஜவ்வரிசி உற்பத்தி செய்யும் 360க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இங்கு இயங்குகின்றன. சேலம் மாவட்டத்தில் மட்டும் ஒரு நாளைக்கு 2000 மூட்டைகள் மரவள்ளிக் கிழங்கு ஜவ்வரிசி தயாரிப்புக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், நாள் ஒன்றுக்கு ஏற்றுமதியாகும் ஜவ்வரிசி மட்டும் 4000 மூட்டைகள்.

ஒரு டன் மரவள்ளிக் கிழங்கின் விலை 5500 ரூபாய் ஆனால், ஒரு டன் ஜவ்வரிசி மட்டும் 2200 ரூபாய் மட்டும்தான். இதனால் விவசாயிகள் மாற்றுத் தொழிலில் ஈடுபட ஆரம்பித்து விட்டனர். இந்தத் தொழிலைப் பாதுகாக்க மரவள்ளிக் கிழங்கு சாகுபடிக்குத் தேவையான உரங்களை மானிய விலையில் அரசாங்கம் தர வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறது சேலம் மாவட்ட ஜவ்வரிசி உற்பத்தியாளர் சங்கம். ஜவ்வரிசிக்கு இன்னொரு பெயர் சேகோ. காரணம்தான் ஏனென்று தெரியவில்லை.

வாசகர் யோசனை:
**கே.சரோஜினி, சேலம்**



கலக்க வருதுப்பா...

# கல்கி

ரீடர்ஸ் கெட் ரெடி!

## இப்ப கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களுக்கும் வருது கல்கி டீம்...

- திரிவேணி சங்கமம்
- வானுயர் வள்ளுவர்
- தாணுமாலயன் வாழ் சுசீந்திரம்
- பத்மனாபபுரம் கோட்டை
- ரகசியம் சொல்லும் பேச்சிப்பாறை
- திற்பரப்பு அருவி
- சினிமாவில் நடிக்கும் முட்டம்
- குளிர்ச்சியான குளச்சல்
- வ.உ.சி.யின் ஒட்டப்பிடாரம்
- தசரா புகழ் குலசேகரப்பட்டினம்
- வீரம் விளைந்த பாஞ்சாலங்குறிச்சி
- கவிச்சூரியனின் கருவறை



இன்னும் என்னவெல்லாம் இருக்கு?
உங்க மாவட்டங்களின் (+) (−) என்ன? எழுதி அனுப்புங்க...

வாசகர்களே!




உங்க மாவட்டத்தைப் பத்தி நீங்க அனுப்புற தகவல்கள்தான் கல்கி கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்ட ஸ்பெஷல் இதழ்களுக்கு அஸ்திவாரம்!

விவரங்கள் அடுத்த பக்கத்துல இருக்கு! ⇒

ஆமாம்! கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களுக்கு 'கல்கி' டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்புகள் மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்கு சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- உங்கள் மாவட்டத்தின் பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ். ஆன்மிக, வியாபார, சுற்றுலாத் தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன். சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல். நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்... என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசித் தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

**கலக்க வருதுப்பா கல்கி**

**கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டம்**

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 17.12.2010

# நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
# நாங்க உடனே ரோடு போடுறோம்!



# கல்கி

SONA COLLEGE OF TECHNOLOGY

வழங்கும்

12-12-2010
இதழுடன்
இணைப்பு
32 பக்கங்கள்

# சொக்கத் தங்கம் சோனா!






M.S.சொக்கலிங்கம் செட்டியார்

# சோனா பிறந்த கதை!

சேலம் மாநகரத்தின் மையத்தில்... ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 1 கி.மீ. தூரத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் விரிந்து கிடக்கிறது இந்திய ஒளிக்கான விதைகளைத் தம்முள் கொண்டுள்ள சோனா தொழில்நுட்பக் கல்லூரி.

ஜவுளித் தொழிலில் கொடிகட்டிப் பறந்த சொக்கலிங்கம் செட்டியார், பல புதுமைகளை அதில் புகுத்த விரும்பினார். ஆனால் அதைச் செயல்படுத்த ஆட்கள் இல்லாததால் அதைப் பயிற்றுவிக்க 1958ல் தியாகராஜா பாலிடெக்னிக்கை ஆரம்பித்து நடத்தினார். இந்திய அளவில் மட்டுமின்றி, சர்வதேச அளவிலும் சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்கிய பாரம்பரியமிக்க தியாகராஜா பாலிடெக்னிக் 2010-11க்கான தமிழகத்தின் சிறந்த பல்தொழில்நுட்பக் கல்லூரியாகத் தமிழக அரசால் தேர்வு செய்யப்படும் அளவுக்கு வளர்ந்துள்ளது. அதன் அடுத்தகட்டமாக உருவாகியதே 'சோனா தொழில்நுட்பக் கல்லூரி.'

1997ல் உருவான இந்த சோனா தொழில்நுட்பக் கல்லூரி, பிற கல்லூரிகள் 30 வருடங்களில் சாதித்ததை 10 வருடங்களில் எட்டிவிடும் அளவுக்கு வளர்ந்தது. எல்லாப் படிப்புகளும் AICTE-ஆல் அனுமதி வழங்கப்பட்டு, மிகப்பிரம்மாண்டமாய் வளர்ந்திருக்கும் சோனா தொழில்நுட்பக் கல்லூரியின் பாடப்பிரிவுகள் அனைத்தும் NBA அங்கீகாரம் பெற்றவை. சர்வதேச தரத்தைக் கொண்டுள்ளதற்கு அடையாளமாக ISO தரச் சான்றிதழையும் பெற்றுள்ளது. இந்த சோனா தொழில்நுட்பக் கல்லூரியில் என்னென்ன படிக்கலாம்? வேலைவாய்ப்பு எப்படி? ஸ்பெஷாலிட்டி என்ன? கட்டணம் எப்படி? அடுத்தடுத்த பக்கங்களில் பார்ப்போம் வாங்க...

# சொக்கத் தங்கம் சோனா!

— சி.வள்ளியப்பா
கல்லூரித் தலைவர்

நிறுவனர் சொக்கலிங்கம் செட்டியாரின் மகனும் சோனா தொழில்நுட்பக் கல்லூரியின் தலைவருமான சி.வள்ளியப்பா அவர்களை இச்சிறப்பிதழுக்காக அணுகி, சோனாவின் தனித்துவத்தை கல்கி வாசகர்களுக்குச் சொல்லுங்களேன் என்றதும், ஏற்காட்டுக் குளுமைபோல, வசந்த வார்த்தைகளால் சொல்லத் தொடங்கினார்...

''சோனா தொழில்நுட்பக் கல்லூரி மூலமாகப் பாரம்பரியமிக்க கல்கி வாசகர்களைச் சந்திப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. எனக்குப் பழைய ஞாபகம் உதிக்கத் தொடங்கிடுச்சு... 60களில் கல்கி ஸ்தாபகரான சதாசிவம் கல்லூரிக் காலத்தில் பழக்கம். அப்போ எனக்கு நிறைய முகப்பரு. இங்கிலீஷ் மருந்து போட்டு இருந்தேன். முகப்பருவுக்குப் புனுகுதான் போடணும். கண்டதைப் போட்டு முகத்தைக் கெடுத்துக்காதேன்னு சொன்னார். அவர்தான் என்னை எம்.எஸ். அம்மாக்கிட்ட அறிமுகமும் செய்து வைத்தார். இப்போ நான் நடத்தும் கல்லூரியைப் பற்றி, கல்கி வாசகர்களிடம் சொல்வது சுகம்தானே!



இன்றைய சூழலில் ஒரு சிலரால் தான் லட்சியத்தை எட்ட முடிகிறது.

தத்தம் கனவை வென்றடைய தரமான கல்வி அவசியம். எமது சேலம் மக்கள் உலகத் தரத்திலான கல்வியைப் பெற நாங்கள் உதவியிருக்கிறோம்.

*சிறப்பு அம்சங்களாய்...*

12 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் இங்கு கல்வி போதிக்கப்படுகிறது.


மாணவர்களுக்கு வருடம் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் ஸ்காலர்ஷிப் தரப்படுகிறது. படிப்பு, தனித்திறன், ஸ்போர்ட்ஸ், ஏழ்மை, மாற்றுத் திறனாளி எனப் பல பிரிவுகளில் மாணவர்கள் பயன்பெறும் வகை யில் சொக்கலிங்கம் டிரஸ்ட் தம் அறப் பணியை ஆற்றி வருகிறது. இது எங்கள் மண்ணுக்கு நாங்கள் செய்யும் கடமை.

எங்க சோனா தொழில்நுட்பக் கல்லூரியின் அடிப்படையே ஒழுக்கம். அந்த அஸ்திவாரம் ஒழுங்கா இருந்தா கல்வி மிக சுலபம். வாழ்வின் வெற்றியும் நம் கையில் அகப்பட்டுக்கொள்ளும். இந்த நிறுவனம் சிறந்த கல்விமானை மட்டும் உருவாக்கவில்லை. அவனைச் சிறந்த குடிமகனாகவும் சொக்கத் தங்கமாகவும் மாற்றி இந்தியாவுக்கு அளிக்கிறது. தியாக மனப்பான்மை கொண்ட நல்லாசிரியர்களைக் கொண்டு வித்தியாசமான பார்வையோடு மாறுபட்ட ஒளிமயமான எதிர்காலக் கனவைச் செதுக்குகிறோம். இந்தக் கல்லூரி எங்களுக்கு வியாபாரமல்ல; தேச சேவை. இந்தப் பணி அன்றாட வேலையல்ல; வாழ்வின் வரம்.''

# இயக்கு சக்திகள்...



வீடெக்னாலஜிஸ் நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரியாகச் செயல்படும் வி.சொக்கலிங்கம், சோனா தொழில்நுட்பக் கல்லூரியின் துணைத் தலைவர்.



சோனா வள்ளியப்பா குழுமத்தின் கீழ் செயல்படும் ஜவுளி நிறுவனங்களின் தலைவராகச் செயல்படும் வி.தியாகராஜன், இக்கல்லூரியின் இன்னொரு துணைத் தலைவர்.



# வணக்கத்துக்குரிய

அறைக் கதவை மெதுவாகத் தள்ளி, ''உள்ளே வரலாமா? சார்...!'' என ஒரு வார்த்தை கேட்டால் போதும். நீங்கள் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். ஒரு ஏழை விவசாயியாக, நெசவாளியாக, அவரது மகனோ, மகளோ இங்கு பயிலலாம். துறைத்தலைவர், பேராசிரியர், மாணவ-மாணவியர், அலுவலர்கள் என்றில்லை. கடைநிலை ஊழியர் வரை எவராகிலும் வந்து தங்கள் தேவைகளை, கருத்துகளை மிக எளிதாகப் பதிவு செய்து, அதற்குத் தீர்வும் கண்டு கொள்ளலாம். தடைகள் ஏதுமின்றி இயல்பாகவே செயல்திறன் மிகுந்து இயங்கி வருகிறது, சோனா தொழில்நுட்பக் கல்லூரி செயலாளர் தீரஜ்லால் அவர்களது அலுவலகம். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொழில்நுட்பக் கல்வித் துறையில் தொடர்ந்து செயலாற்றி வருகிறார் தீரர், தீரஜ்லால்.

''சோனா தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கி பதிமூன்று ஆண்டுகள் ஆகின்றன. அதற்கும் முன்பாக சோனா கல்வி குழுமத்தின் தியாகராஜா பாலிடெக்னிக்கில் 1959லிருந்து முப்பத்தாறு ஆண்டுகள் முதல்வராகப் பணியாற்றினேன். சோனா தொழில்நுட்பக் கல்லூரியின் தொடக்கத்திலிருந்து, அதன் செயலாளராகப் பணிபுரிந்து வருகிறேன் என்பதனை அடக்கத்துடன் சொல்லிக் கொள்கிறேன்.

முதலில் மாணவ-மாணவியர்களிடமிருந்து ஆரம்பித்தோம். இயல்பாகவே தொண்ணூறு சதவிகிதம் மாணவர்கள் ஒழுங்கானவர்களாக இருப்பார்கள். பத்து சதவிகிதம் பேர் கொஞ்சம் அப்படியும் இப்படியும் இருப்பார்கள். அதிலும் ஏழு சதவிகிதம் பேரை சரி பண்ணிவிடலாம். மூணு சதவிகிதம் பேரைத்தான் உடனே சரி பண்ணிவிடமுடியாது. அந்த மூணு சதவிகிதம் மாணவ-மாணவியரை அடையாளம் கண்டு, அவர்கள் மேல் தனி கவனம் செலுத்தி அவர்களைத் தயார்படுத்தினோம். மைனஸ் என நினைத்திருந்த பத்து சதவிகிதமும் ப்ளஸ் ஆக மாறிப்போனது. மாணவ-மாணவியர்களை நாங்கள் பெரிதும் மதிக்கிறோம். அவர்கள் எதிர்பார்ப்பும் அதுதான். எந்த ஒரு கருத்தினையும் - எந்த ஒரு விஷயத்தையும் என் அறைக்கு வந்து சொன்னாலே போதும், அதன் நன்மை-தீமை சாதக பாதகங்களை உடனடியாக ஆலோசித்து, உடனடி செயல்பாடும் உடனடி பயனும் அவர்களுக்குக் கிடைத்திட முயல்வதுதான் எங்க ஸ்பெஷாலிட்டி.

அடுத்து கல்வி போதிக்கும் பேராசிரியர்கள் பக்கம் எங்கள் பார்வையைத் திருப்பினோம். 1963-64களில் நான் இங்கிலாந்து சென்று பெற்று வந்த பயிற்சி, அதற்கு உறுதுணையாக இருந்தது. பேராசிரியர்களுக்கு கல்வித் திறன் வளர்ச்சி, மற்றும் போதிக்கும் திறன் ஊக்கம், இவை இரண்டையும் மேம்பட பயிற்சியளித்தோம். அந்தத் துறை மாணவ - மாணவியரிடமிருந்தே, துறை சார்ந்த பேராசிரியர்களின் செயல்பாடுகளுக்கான மதிப்பெண்களைப் போடச் சொல்லிப் பெற்றோம். மாணவர்கள் கொடுக்கும் மதிப்பெண் அட்டவணையின் அடிப்படையில்தான் துறைப் பேராசிரியர்களுக்கு கிரேடு அளிக்கிறோம். அப்படித்தான்



ஜெயித்த கதை

# 'வைராக்கியம்!'

## செயலாளர் தீரஜ்லால்



அவர்களை 'ஏ' கிரேடு அந்தஸ்துக்கு உயர்த்துகிறோம்.


மாணவ- மாணவியர்கள் கரெக்ட். பேராசிரியர்கள் ஓ.கே. உள் கட்டமைப்பும் நவீன உபகரணங்களும் டபுள் ஓ.கே. ஆக வேண்டும் அல்லவா?

சோனா தொழில்நுட்பக் கல்லூரியின் (1997) செயலாளராக, முதல் நாள் இந்த இருக்கையில் வந்து நான் அமர்ந்தபோது, எனக்கு வயது அறுபது. அந்த நிமிடத்திலிருந்தே அடுத்து தொடர்ந்து பதினைந்து ஆண்டுகளுக்குள், என்னென்ன நிறைவேற்றிட வேண்டும் என்பதைத் தீர்மானித்தோம். முதல் ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு துறைகளுக்குமான திறன் நிறைந்த பேராசிரியர்களையும், உள் கட்டமைப்புகளையும் மிகச் சிறந்ததாக உருவாக்கினோம். அடுத்து ஐந்து வருஷத்தில் ஆய்வு மையங்களைக் கொண்டு வந்தோம். ஆராய்ச்சித் துறையில் தனிக் கவனம் செலுத்தி, தன்னாட்சிக் கல்வி நிலைய அங்கீகாரம் அடைந்தது சோனா. மூன்றாவது ஐந்தாண்டு நிறைவின்போது (2012) பல்கலைக்கழக அந்தஸ்தும் பெற்றுவிடும் சோனா.

எங்கள் நிறுவனர் எம்.எஸ். சொக்கலிங்கம், தம் 87வது வயதில் துணிந்து சோனா தொழில்நுட்பக் கல்லூரியினைத் தொடங்கினார். ''லால்... நீ இருக்கேனுதான் ஆரம்பிச்சிருக்கேன்!'' என்றார். அந்த வயதில் மிகப்பெரிய கல்வி நிலையம் தொடங்கிட ரொம்ப ரொம்ப வைராக்கியம் வேண்டும். அது எங்கள் நிறுவனரிடம் இமயமலையளவு உயர்ந்திருந்தது. அது வளர்ச்சிக்குரிய வைராக்கியம் மட்டுமல்ல; வணக்கத்துக்குரிய வைராக்கியமும்தான்!'' என்கிறார் செயலாளர் தீரஜ்லால்.

SONA COLLEGE OF TECHNOLOGY

# வி.ஐ.பி. டயலாக்!



**முன்னாள் ஜனாதிபதி திரு. அப்துல் கலாம்:**

''ஒழுக்கத்தை அஸ்திவாரமாகக் கொண்டு கல்வியுடன் ஆய்வுகளையும் சேர்த்துக்கொண்டு வல்லரசு இந்தியாவை செதுக்கும் பணியில் சோனா தொழில்நுட்பக் கல்லூரியின் பணி இருப்பது பெருமிதமாய் இருக்கிறது.''

**மத்திய அமைச்சர் திரு. ப.சிதம்பரம்:**

''இயற்கை நிறைந்த சூழலில் உலகத் தரத்திலான கல்விக்கூடம். இது இந்தியாவுக்கு வளம் சேர்க்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.''





**திரு. சுகிசிவம்:**

''தரம், திறம், இறைவன் தந்த வரம் நிரம்பிய தலம்... இந்த நிலம்!''



## நோ ராகிங் 100%

இலைமறை காயாகவாவது சில கல்லூரிகளில் ராகிங் இருக்கும். ஆனால், சோனா தொழில்நுட்பக் கல்லூரியில் ராகிங் என்பது 100% இல்லை. எனவே எந்தப் பயமோ மன பதற்றமோ இன்றி மாணவ-மாணவியர் இக் கல்லூரிக்குள் தம் முதலாமாண்டில் இயல்பாக மலர்ச்சியோடு அடியெடுத்து வைக்க முடிகிறது.




# அப்படியென்ன பெஸ்ட்?

முன்னாள் மாணவர்கள் இங்கு வந்து கூடுகையில், 'பசுமை நிறைந்த நினைவுகளே' எனப் பாடத் தோன்றும் அவர்களுக்கு. அதில் 'பசுமை சூழ்ந்த கட்டடங்களே... புதுசும் பழசும் கலந்தவைகளே' என ரெண்டு வரிகள் சேர்த்துப் பாடத் தோன்றும் கட்டாயமாக. ஐம்பது ஏக்கர் பரப்பில் பரந்து விரிந்து இயற்கைக் காற்றை இலவசமாக வினியோகித்தபடியிருக்கும் சோனா தொழில்நுட்பக் கல்லூரியின் கட்டடங்கள், கட்டுமானப் பணியிலும் கட்டடக் கலையிலும் மிகையற்ற அளவில் பழைமையையும் புதுமையையும் தன்னகத்தே தாங்கி, மிக கம்பீரமாக எழுந்து நிற்கின்றன.



இந்தியாவின் தலைசிறந்த முன்னணியில் உள்ள கட்டடக் கலைஞர்களைக் கொண்டு, அவை கட்டப்பட்டுள்ளன. புதிதாகக் கட்டப்படும் ஒரு கட்டடத்துக்கு மரங்கள் வெட்டப்பட நேர்ந்தால், ஒரு மரத்துக்கென ஐந்து மரக்கன்றுகள் வைத்து வளர்ப்பது அவர்களது பசுமைத் திட்டம். பனை மரங்களை வெட்ட மனமின்றி பனைகளுக்கென நெடிய தாழ்வாரங்களில், வட்டமிட்டு இடம் விட்டுக் கட்டியிருப்பது தனி அழகு.

எவ்வளவு மழை பெய்தாலும் தண்ணீர் தேங்காதபடி மண்ணுக்குள் மழை இறங்கும்படியான அமைப்பில் தரைகள், மாணவர்கள் பயன்படுத்திய குளியலறை நீரைச் சுத்திகரித்து மீண்டும் தோட்டத்துக்கே பாயும் புதுமை.



ஒவ்வொரு கட்டட அறைக்கு முன்புள்ள படிக்கட்டும்கூட மாற்றுத் திறனாளிகள் நடக்கும் வசதியான வகையில் அமைக்கப்பட்ட பாதைகள்!

உங்கள் பாதங்களைப் படர விடுங்களேன் என்மீது என்று அழகிய புல்வெளிகள் கெஞ்சுகின்றன. மாணவர்கள் குஷியாய்ப் படிக்க அதி நவீன வகுப்பறைகள். படித்து முடித்ததும் ஓய்வு எடுத்துக் கொள்ள புல்வெளிகளின் அடர் மர நிழல்களில் நீள நீளமான கருங்கல் பலகையிலான இருக்கைகள். மாணவர்கள் ரிலாக்ஸ்டா பேசிக்கிட்டுப் போக... மனசு இலேசாகிப் போகும்.



# வல்லரச இந்தியாவை

**வி**ருப்பமுடன் ஒருமுறை விசிட் செய்துள்ளார், முன்னாள் குடியரசுத் தலைவரும் விஞ்ஞானியுமான டாக்டர் அப்துல் கலாம். வந்தவர், குறிப்பிட்ட துறையினர்க்கு நிறைய 'டிப்ஸ்' வழங்கி விட்டுச் சென்றுள்ளார். அந்தத் துறைதான் (Sona Speed) சோனா ஸ்பீட். Sona Special Power Electronics and Electric Drives என்பதன் சுருக்கம். சர்வ தேச அளவிலான மிக உயரிய தொழில்நுட்ப உபகரணங் களுடனான ஆராய்ச்சி மையமாக இயங்கி வருகிறது சோனா ஸ்பீட்.

"வெறும் கல்வி கற்பித்துப் பாடங்களை மனப்பாடம் செய்து தேர்வெழுதும் மாண வர்களை உருவாக்குவது எங்கள் வேலை யல்ல. அவர்களை கிரியேட்டர்ஸ்களாக (Creators) உருவாக்குவதே எங்கள் லட்சியம்!" எனக் கூறுகிற செயலாளர் தீரஜ்லாலின் வார்த்தை களுக்கு வடிவமாகவும் நேரடி சாட்சிகளாகவும் அமைந்துள்ளன முப்பத்தைந்து ஆய்வு மையங்கள். சோனா ஸ்பீட் அதில் ஒன்றாக அமையப் பெற்று, ஆய்வுகளினாலும் புதிய புதிய மோட்டார் உருவாக்கங்களினாலும் உலகம் முழுவதுமாக முத்திரை பதித்துள்ளது.



இந்தியாவிலிருந்து இயக்கப்படும் ராக்கெட்டுகளுக்கு, கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்புவரை பிரான்சிலிருந்துதான் மோட்டார்கள் இறக்குமதி செய்து பொருத்தப்பட்டு வந்துள்ளன. சோனா ஸ்பீட், 2004ல் Demo model ஆக மோட்டார் தயாரித்து, இஸ்ரோவுக்கு அனுப்பி வைத்தது முதன்முதலாக. சோதனை அடிப்படையில் அவற்றைப் பயன்படுத்தியது இஸ்ரோ. சோனா ஸ்பீட் மோட்டார்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு, ராக்கெட் இயக்கத்துக்கு மிகச் சரியாக இணைந்துள்ளது. "அப்புறம் என்ன? தரம் மற்றும் செயல்பாடுகளில் பிரான்சிலிருந்து இதுவரை இறக்குமதியான ராக்கெட் மோட்டார்களுக்கு இணையாகவும் அவற்றை மிஞ்சும் வகையிலும் சோனா ஸ்பீட் மோட்டார்

## விண்வெளி வியப்பும் ஆழ்கடல் அசத்தலும்...

# வார்த்தெடுக்கும் சிற்பிகள்!

அமைந்திருப்பதால் இறக்குமதியை நிறுத்திவிட்டது இஸ்ரோ. சோனா ஸ்பீட் மையத்திலிருந்து விண்வெளி ராக்கெட் மோட்டார்களை இஸ்ரோவுக்கு அனுப்பி வைத்து வருகிறோம்!'' என்கின்றனர் ஆய்வு மையத்தினர்.

**தே**சத்தின் பெருமை மிக்க சேவைகளில் பங்கெடுத்துக் கொண்டுள்ளது சோனா தொழில்நுட்பக் கல்லூரி. சோனா ஸ்பீட் மையத்தில் உருவாகும் ஃப்ரஸ்லெஸ் டிசி மோட்டார், ஸ்டெப்பர் மோட்டார், லிமிடெட் ஆங்கிள் டார்க் மோட்டார் உள்ளிட்ட கண்டுபிடிப்புகள்... ராக்கெட்டுகள், செயற்கைக் கோள்கள் ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பேராசிரியர் கண்ணன் தலைமையில் இயங்கிவரும் இம்மையம் இஸ்ரோ, விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் உள்ளிட்ட இந்தியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டு கருவிகளை உருவாக்கித் தந்து வருகிறது. சோனா ஸ்பீட் குறித்தான விண்வெளி வியப்பு இவ்விதம் எனில், அடுத்து ஆழ்கடல் அசத்தலில் அடியெடுத்து வைத்துள்ளது இம்மையம்.

''ஆழ்கடலின் உள்ளே கனிம ஆராய்ச்சிக்கென பயணிக்கும், ஆய்வுக்கூட வண்டியினை இயக்கும் மோட்டார் ஒருமுறை பழுதாகிப் போனது. அந்த மோட்டார் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டதாகும். அதன் ஏற்றுமதியை அமெரிக்கா ஏனோ நிறுத்தி வைத்துள்ளது. அந்தச் சமயத்தில் அந்த மோட்டார் பழுது நீக்கி இயக்க வேண்டிய நிர்ப்பந்தம். சென்னையில் இருக்கும் National Institute of Ocean Technology, அந்த மோட்டாரை பழுது நீக்கி, சரி செய்து தருமாறு எங்களுக்கு அனுப்பி வைத்தது. அதனைச் சரி செய்து அனுப்பி வைத்தோம். கடலுக்கடியில் சுமார் ஏழாயிரம் எட்டாயிரம் அடிகள் வரைக்குமாக ஆய்வுக் கூட வண்டியினை இயக்கி, ஆய்வுக்குப் பின்னர் கடலின் நீர்மட்டத்துக்கு



மேல் (கப்பல் அருகே) கொண்டு வந்து சேர்க்கும் திறன் படைத்ததாக இயங்கியுள்ளது அந்த மோட்டார். அந்த வகை மோட்டார்களைப் புதிதாக உருவாக்கித் தருமாறு எங்களைப் பணித்துள்ளது தேசிய கடல் சார் தொழில் நுட்பக் கழகம்! இப்போ சொல்லுங்க... சிறந்த இந்தியாவை செதுக்கும் சிற்பிகள் நாங்கள்தானே?'' எனப் பெருமிதமாய்க் கேட்கிறார் சோனா ஸ்பீட் மையத்தின் தலைவர் பேராசிரியர் கண்ணன்.

## BE / BTech Degrees (Full time - 4 years)

**BE**

- Mechanical Engineering
- Electrical and Electronics Engineering
- Computer Science and Engineering
- Electronics and Communication Engineering
- Civil Engineering

**BTech**

- Information Technology
- Fashion Technology

## Masters Degrees

**ME** (Full time- 2 years)

- Computer Science and Engineering
- Computer and Communication
- Software Engineering
- Communication Systems
- VLSI Design
- Power Systems Engineering
- Power Electronics and Drives
- Product Design and Development
- Thermal Engineering
- Engineering Design
- Computer Integrated Manufacturing

**MBA MCA**

- Master of Business Administration (Full time - 2 years)
- Master of Computer Applications (Full time - 3 years)

**PhD** Doctoral Degree

- MECH
- EEE
- ECE
- CSE
- Civil
- FT
- Physics
- Chemistry
- Mathematics
- Management Studies
- Computer Applications



SONA COLLEGE OF TECHNOLOGY

# படிச்சா வேலை! அப்புறமென்ன கவலை?



ஒரு சினிமா பாடல் - 'கையில காசு... வாயில தோசை...!' ஞாபகம் இருக்கா? வாழ்க்கையே ஃபாஸ்ட் ஃபுட் மாதிரி அவசர கதியில இருக்கு. செலவு செஞ்சி படிச்சிட்டுக் காத்திருக்க முடியாது. படிப்பை முடிச்சா வேலை... அதற்கு உத்தரவாதம் தருது, சோனா தொழில்நுட்பக் கல்லூரி. நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்களுடன் தொழில்நுட்பப் பகிர்வு, வேலைவாய்ப்பு, திறன் பயிற்சி ஆகியவற்றைப் பெறுவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்துள்ளதுதான் அடிப்படை. குறிப்பாக...

உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்களில் (உயர் படிப்புக்காகப் போனவர்கள் மற்றும் தொழில் முனைவோராக விரும்புவோரைத் தவிர) சோனாவில் படித்த மாணவர்கள் 95% பேர் பணிபுரிகின்றனர்.

''வேலைவாய்ப்பு மந்தமாகிப்போன காலகட்டத்தில்கூட சோனா மாணவர்கள் 85% வேலைவாய்ப்பு பெற்றனர். அதற்கு ஒரே காரணம் முக்கிய நிறுவனங்களோடு சோனா நிர்வாகம் நெருக்கமான நல்லுறவு வைத்திருப்பதுதான்'' என்கிறார் கல்லூரியின் Placement Officer A.சேவுகமூர்த்தி.

1. Infosys
2. Cap Gemini
3. I-Nautix
4. CTS
5. TCS
6. HCL
7. Wipro
8. Mahindra
9. Steria
10. Petro fac
11. Hexa ware
12. Essar
13. Honey Well
14. CCC
15. Afcons
16. Keane
17. Bosch
18. ETA Ascon
19. Vedanda
20. Renayld
21. Titan



A. சேவுகமூர்த்தி




## 70,000 புத்தகத்தில் உனக்கெது வேணும்?

எந்தத் துறை சார்ந்தும் நம்முடைய பொது அறிவை வளர்த்துக்கொள்ள நுழைவாயிலாக அமைந்திருப்பது நூலகம்தானே? அந்த நுழைவாயில் பிரும்மாண்டமா அமைந்திருக்கு சோனாவுல. எழுபதாயிரம் புத்தகங்கள். மட்டுமின்றி, பிரிண்டட் ஜர்னல்கள் இருநூற்றியெண்பது. IEL, ACM, ASME போன்றவைகளின் ஆன்லைன் ஜர்னல்கள். IIT, IIM மற்றும் IISE ஆகியவை இணைந்து வெளியிட்டுள்ள ஆடியோ-வீடியோ புக்ஸ். அத்தனையும் அதனதன் துறைசார்ந்த அறிவுத் தேடலுக்கான நொறுக்ஸ். நாலாயிரத்தைந்நூறு உபயோகிப்பாளர்களுக்கென இயங்கிவரும் மத்திய நூலகம், வருடத்தில் முந்நூற்று அறுபத்தைந்து நாட்களும் இயங்கிவருவது தனிச் சிறப்பு. இது மட்டுமல்லாது, ஒவ்வொரு துறைக்குமாக பதினான்கு துறைகளுக்கெனத் தனித்தனியே பதினான்கு நூலகங்கள் இங்கு அமைந்திருப்பது அதனிலும் சிறப்போ சிறப்பு!



## கலையாத வானவில்!



ஏழு ஃபிரண்ட்ஸ்கள் ஒன்றுசேர்ந்து கல்லூரியைப் பற்றி ஒரு குறும்படம் எடுக்கத் திட்டமிடுகின்றனர். அவர்கள் பெயரின் முதல் எழுத்துக்களை ஒன்றுசேர்த்தால் VIBGYOR என்று வருகிறது. அதையே தலைப்பாக வைத்து விடுகிறார்கள். வானவில்லில் உள்ள வண்ணங்களும் Vibgyorதான். மழைக் காலத்தில் தோன்றி மறையும் வானவில் போலல்லாமல் கலையாத வானவில்லாய்

இதை எப்படி உருவாக்கினீர்கள் என்று கேட்டால், ''ஆறு மாதம்... இதுக்காக கிளாஸை கட் அடிக்காம ஈவ்னிங் ரீ அவர்ஸ் மட்டுமே இந்த வேலையைச் செஞ்சேன். ஒரு கிராமத்து மாணவன் வெற்றியைக் கைப்பற்ற நடத்தும் போராட்டம்தான் இது. அவனின் வெற்றிக்குக் காரணமான கல்லூரியையும் சேர்த்துக் காட்டுறேன் இந்த 45 நிமிஷத்திலே'' என்கிறார் மூன்றாம் ஆண்டு ஐ.டி. படிக்கும் இயக்குனர் வித்யா ப்ரியதர்ஸனி. கண்களில் கோலிவுட் டைரக்ஷன் கனவு கலர்ஃபுல்லாத் தெரியுது.

# எங்க ரேங்க் லிஸ்ட்...




படிக்கிற பிள்ளைக்கு மட்டுமில்லே - படிப்பு சொல்லித் தரும் இடத்துக்கும் ரேங்க் உண்டு.

சோனாவுக்கு என்ன ரேங்க் பார்ப்போமா?

- அகில இந்திய மென்பொருள் தொழில்நுட்பக் கூட்டமைப்பின் அறிக்கையின்படி, பிற தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் மாணவர்களின் தகுதி அடிப்படையில் சோனா, தென்னிந்திய அளவில் பத்தாவது இடத்திலிருக்கிறது. அதுமட்டுமின்றி, இன்னபிற நிறுவனங்கள், பத்திரிகைகள் சோனாவுக்குக் கொடுத்திருக்கும் ரேங்க் என்னென்ன... பார்ப்போம்...
- Competition Success Review-வின் கணக்கெடுப்பின்படி தமிழ்நாடு முழுவதும் உள்ள பொறியியல் கல்லூரிகளில், சோனா தரத்தில் ஐந்தாவது இடத்தில் இருப்பதாகப் பிரகடனப்படுத்துகிறது.
- அகில இந்திய அளவில் முதல் 40 இடத்தில் இருக்கும் தனியார் பொறியியல் கல்லூரிகளில், தர வரிசையில் 18வது இடத்தில் சோனா தொழில்நுட்பக் கல்லூரி உள்ளதாக 'Electronics for you' அறிவிக்கிறது.
- Outlook பத்திரிகை, அகில இந்திய அளவில் 50 சிறந்த கல்லூரிகளை தரவரிசைப்படுத்தியதில் தமிழ்நாட்டிலுள்ள டாப் லிஸ்டில் எட்டாவது இடத்தை சோனா பிடித்துள்ளதாக கணித்துள்ளது.
- Dalal Street-அகில இந்திய அளவில் சிறந்த 100 கல்லூரிகளைத் தேர்வு செய்துள்ளது. அதில் தமிழகத்தில் உள்ள சிறந்த 7 கல்லூரிகளில் ஒன்றாக சோனா தேர்வாகியுள்ளது.
- Career 360 இதழ், அகில இந்திய அளவில் நடத்திய கருத்துக்கணிப்பில், இக்கல்லூரிக்கு AA+ என்ற ரேங்கைத் தந்துள்ளது.




# தெரிஞ்சுக்கோங்க...!




## சில துறைகள் பற்றி...

- மின்னணுவியல், தொலைத் தொடர்பியல் துறையின் சிறந்த திட்ட வரைவுகள் , PCB Design ஆகியவற்றில் சோனா பெற்றுள்ள முதல் இடத்தை இன்னும் யாரும் முந்தவில்லை... முறியடிக்கவில்லை.
- கான்கிரீட்டின் உறுதியை ஆய்வு செய்யும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வு மையம் இங்குள்ளது. நவீனத்தை உட்புகுத்தி புதிய கட்டுமானத்தை வடிவமைக்கும் கல்வியை இது அளிக்கிறது. நில நடுக்கத்தைத் தாங் கும் தரமான கான்கிரீட் தொழில்நுட்பம் இங்கு போதிக்கப்படுவது விஷேசம்.
- வேதியியல் சார்ந்த பொறியியல் படிப்பு








மட்டுமன்றி ஆய்விலும் அசத்துகிறது சோனா. உரம், மழை, எண்ணெய், நீர் மற்றும் கழிவு என பல்வேறு விஷயத்துக்கான படிப் புடன் கூடிய ஆய்வு முக்கியத்துவமானது.



- செயற்கைக்கோள் to இண்டலிஜெண்ட் கிரிப்பர் எனும் பறக்கும் எந்திரங்களை வடிவமைக்கும் நுட்பம் வரை இங்கு மெக்கானிக்கல் பிரிவில் போதிக்கப்படுவது வேறெங்கும் இல்லாத சிறப்பு.
- நேனோ தொழில்நுட்பம் தொடர்பாக, மெக்கானிக்கல், இயற்பியல் துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. நேனோ பயன்பாடு குறித்த ஆராய்ச்சி சர்வதேச வல்லுநர்களையும் ஈர்த்துள்ளது.
- கணினி அறிவியல், தகவல் தொழில் நுட்பத்துறை... மென்பொருள் தொழில் நுட்ப மேம்பாடு, நெட்வொர்க்கிங், தகவல் தொடர்பு, டேட்டா மைனிங் குறித்த ஆராய்ச்சிகளில் அகில இந்திய அளவில் சோனா சிறந்து விளங்குகிறது.












''எங்கள் மண்ணுக்கு நலம் செய்ய
வந்த சோனா... தமிழர்களுக்கு
வளம் சேர்க்கும் சொக்கத்தங்கம்...
காலத்தால் அழியாதது அதன்
கல்விப் பணி''

- அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம்.



நிறுவனர் நாளில் கொண்டாட்டம் - அனைவருக்கும் நித்ய சந்தோஷம்.




இந்தக் குருகுலத்தில் ஊடு பயிராகக் கலை கட்டாயம் உண்டு.

...துபோல் பல்வேறு
...ப்பும்... பரிசளிப்பும்...






...டாட்ட பிம்பங்கள்

"எந்தத் துறையாக இருந்தாலும் ஒழுக்கம்தான் ஃபர்ஸ்ட். ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கல்வியைக் கடமையாகப் போதிப்பதால் சோனா சேவை... நாட்டுக்குத் தேவை..." - சிவக்குமார்




இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம்! நிகழ்வின் மகுடம் ஜனாதிபதி அப்துல்கலாமின் வருகை!

"தனிமனித வெற்றிக்காகவோ தமிழ்நாட்டின் ஜெயிப்புக்காகவோ இந்தியாவின் வளர்ச்சிக்காகவோ அல்ல... சோனா மாணவர்கள், ஒட்டுமொத்த உலகின் நல்மாற்றத்துக்காக களமிறங்கியவர்கள்." - கோபிநாத்

## ...நாட்சிகள்!



முதலாம் ஆண்டு பிள்ளைகளை ஒப்படைக்க வந்த பெற்றோர்!



SONA COLLEGE OF TECHNOLOGY



# நிகர்நிலை பல்கலைக் கழகமாக மாறப்போகுது...

**கல்லூரி முதல்வர்**
**Dr.P. கோவிந்தராஜன்**

"**ப**திமூன்று வருடங்களில் இமாலய சாதனையைப் படைத்திருக்கும் சோனா தொழில்நுட்பக் கல்லூரியில் பொறியியல் படிப்புகள் மட்டுமின்றி MBA படிப்பும் ஆய்வுத் துறைகளும் இருக்கின்றன. அதன் பங்களிப்பு நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியத்துவமானது.

தொழில்நுட்பக் கல்லூரிகளிடையே மாநாடா? ஆய்வரங்கமா? கருத்தரங்கமா? சர்வதேச/தேசியக் கல்வி தொடர்பான அரங்கமா? எல்லாவற்றிலும் சோனாதான் ஃபர்ஸ்ட்!

மாணவர்களிடமிருந்து அரசு நிர்ணயித்துள்ள கட்டணம் மட்டுமே கல்வித் தொகையாக வசூலிக்கப்படுகிறது. நன்கொடை ஏதுமில்லை. தொகையும் ரொக்கமாக அல்ல, DDயாகத்தான் அளிக்க வேண்டும். முறையான கட்டணம் மற்றும் வரவு செலவு கணக்கு சரியாகப் பராமரித்து வந்ததற்கு அரசின் பாராட்டுப் பத்திரம் பெற்றுள்ளோம். சோனாவின் வெற்றிக்கும் புகழுக்கும் காரணம்... வெளிப்படையான அணுகுமுறையே!



ஆணும் பெண்ணும் சேர்ந்து படிக்கும் கோ-எஜுகேஷன் முறையை முதன்முதலில் 1976ல் கொண்டு வந்தது (தியாகராஜா பாலிடெக்னிக்கில்) சோனா குழும முன்னோடிகள்தான்.

பாலிடெக்னிக்கில் தொடங்கிய பயணம் தொழில்நுட்பக் கல்லூரியையும் உருவாக்கி, இப்போது அதில் தன்னிறைவும் அடைந்துள்ளது. அதாவது எங்களுக்குத் தேவையான கல்வித் திட்டத்தை நாங்களே வகுத்துக் கொள்ளும் முறையை, அதிகாரத்தைப் பெற்றிருக்கிறோம். இந்தாண்டு சேர்பவர்களுக்கு நாங்கள் வகுத்துள்ள புதிய பாடத்திட்டம் அமலுக்கு வருகிறது. சோனா, நிகர்நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெறுவதில் பயணப்படுகிறது. கூடிய விரைவில் வெற்றியும் பெறுவோம்."



# சோனா... சோனா... சொக்கத்தங்கம் நானா?




'சோனா சோனா உன் சொக்கத்தங்கம் நானா' என்று கல்லூரிக்குள் சினிமாப் பாடல். அதிலும் தன் காலேஜ் பெயர் ஒலிக்கும் இடத்தில் மேலும் கொஞ்சம் அழுத்தம். அறைக்குள் எட்டிப் பார்த்தால் வாத்திய ஒத்திகை! யாருக்கு என்ன வாசிக்க ஆசையோ அதை இங்கே கற்றுக் கொள்ளலாம். கல்லூரி மாணவர்கள் 'சோனாரியா' என்று ஒரு இசைக் குழுவை அமைத்துள்ளனர். ஒரு விஷயம் தெரியுமா? இங்கே மாணவர்கள் நடத்தும் நிகழ்ச்சியோ, கல்லூரியே நடத்தும் பொது நிகழ்ச்சியோ எதுவாக இருந்தாலும் ஒரு மணி நேரத்தைத் தாண்டக்கூடாது என்பது எழுதப் படாத விதி. ''அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சுன்னு தெரியுமில்லே?'' என்கிறது கல்லூரி நிர்வாகம்.



# 18 நாடுகள்... 250 ஸ்டூடன்ட்ஸ்!

''எந்நாடு என்றாலும் அது நம்நாடு போலாகுமா?' என்பதெல்லாம் பாட்டுலதாங்க கேட்க நல்லா இருக்கும். கல்வி அறிவு பெறுவதற்கும், தொழில்நுட்பப் படிப்புக்கும் பொருந்தாது. அதுக்குத்தான் நாங்களே எங்க நாட்டிலிருந்து இந்தியா நோக்கி வந்து, சர்வதேச தரத்திலான கல்வியைத் தரும் சோனா தொழில் நுட்பக் கல்லூரியைத் தேர்ந்தெடுத்தோம்'' என்கின்றனர் இங்கிருக்கும் வெளிநாட்டு மாணவ-மாணவியர். சூடான், கென்யா, நேபாளம், பூடான், உகாண்டா, வளைகுடா நாடுகள் என பதினெட்டு நாடுகளிலிருந்து சுமார் இருநூற்றைம்பது பேர் தொழில்நுட்பக் கல்வி பயில்கின்றனர். இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சகம் தந்த அனுமதி வாயிலாக, சுகமா சோனாவில் படித்து வருவது நம் நாட்டுக்கும் பெருமைதானே?



SONA COLLEGE OF TECHNOLOGY



# இந்திய வளர்ச்சியும் எங்கள்





## லாங்வேஜ் லேப்!

**க**ணினி மென் திரையில் பாடங்கள் விரிகின்றன. ஒவ்வொருவர் காதிலும் ஒலி கடத்தும் கருவி. ஒளி-ஒலி அமைப்பில் ஆங்கில மொழியறிவு வளர்ச்சிப் பாடங்கள். சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கணினிகள் இடம்பெற்றுள்ளன லாங்வேஜ் லேப்பில். முதல் ஆண்டில் அடியெடுத்து வைப்பவர்களுக்கு, இது கலங்கரை விளக்கம் எனக் கூறப்படுகிறது. கிராமப்புறத்திலிருந்து வருபவர்கள், ஆங்கில மொழி ஆற்றலிலும் அதன் கற்றலிலும் கேட்டலிலும் குறைபாடு உடையவர்களுக்கு இது மிகவும் தேவையான பயிற்சி. முதல் ஆண்டு என்றில்லை எந்த ஆண்டு பயில்பவர்கள் ஆனாலும், அவரவர் தேவையின் பொருட்டு லாங்வேஜ் லேப்பினை பயன்படுத்திக் கொள்ளலாம். தொழில் நுட்பக் கல்வியில் சிறந்து விளங்க ஆங்கில மொழி ஆற்றல் அவசியம் தேவை என்பதனைக் கருத்தில் கொண்டு இயங்கி வருகிறது லாங்வேஜ் லேப்.




# வாழ்வும் வேறுவேறில்லை!




## மின்னலடிக்கும் மின்னாற்றல்!

**மி**ன்னாற்றல் தொழில்நுட்பம் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது சோனா 'பெர்ட்'! SONA Electric Power Engineering Research and Testing Centre என்பதே சோனா பெர்ட். டிரான்ஸ்ஃபார்மர்கள் எனப்படும் மின் மாற்றிகளின் அளவுகளைத் துல்லியமாகக் கணிக்க உதவும் சி.டி.கேளபர், பி.டி.கேளபர், வயர்களில் ஏற்படும் பிரச்னைகளை அறிய உதவும் ஃபால்ட் லொகேட்டர், மின் இழைப்பை அளவிட்டுச் சரிசெய்ய உதவிடும் கருவிகள் எனப் பலபல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு இயங்கி வருகிறது சோனா பெர்ட். பல இந்திய சர்வதேச நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களுடன் ஆராய்ச்சித் தொடர்பு கொண்டுள்ளது இம்மையம்.



## சொக்குதே... சோனா வெர்சிட்டி!

**பா**டப்புத்தகத் தயாரிப்பில் நவீனத் தொழில் புரட்சி செய்து வருகிறது SONA VERSITY. சோனா வெர்சிட்டியின் செயல்பாடு சொல்லில் அடங்காது. I.I.T., நிகர் நிலைப் பல்கலைக்கழகங்கள், தனியார் பொறியியல் கல்லூரிகள் எனப் பல்வேறு கல்லூரிகளுக்குப் பாடப் புத்தகங்களும் அனிமேஷன் சி.டி. களையும் தயாரித்துத் தருகிறது.



சி.பி.எஸ்.இ. மற்றும் மெட்ரிகுலேஷன் பாடத் திட்டங்களுக்கான புத்தகங் களைத் தயாரித்து அளிக்கிறது சோனா வெர்சிட்டி. அவற்றைக் குறுந்தகடுகள் வடிவத்திலும் உருவாக்கித் தருகிறது. (சர்வ சிக்ஷ அபியான்) SSA எனப்படும் மத்திய அரசின் அனைவருக்கு மான கல்வி இயக்கத்துக்காக வும் புத்தகங்கள் இங்கே உரு வாக்கி அனுப்பப்படுகின்றன. தொழில்நுட்பக் கல்விக்கான புத்தகங்களும் இங்கே உருவாக் கப்படுகின்றன. மல்டி மீடியா தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தி அனிமேஷன் சி.டிக்கள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. அவை 2D அனி மேஷன்களாகவும் 3D அனிமேஷன் களாகவும் இங்கு வடிவ மைக்கப்படுகின் றன.

தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை, தமிழ் இணையப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட ஏராளமான நிறுவனங்களு டன் ஒப்பந்தம் செய்துகொண்டு தொழில் நுட்பக் கல்வி புத்தகப் பதிப்புத்துறை யாகவும் இயங்கி வருகிறது சோனா வெர்சிட்டி. பள்ளி, உயர் கல்வி, பாடத் திட்டங்களை நவீனத் தொழில்நுட்பத் துடன் அனிமேஷன் செய்து எளிதாகப் பயில சி.டி.களைத் தயாரித்துச் செம்மை யாகப் பணியாற்றி நம்மை சொக்க வைக் கிறது.




ஜவுளித்துறை மற்றும் மருத்துவத் துறைகளில் பயன்படக்கூடிய டெக்ஸர் இமேஜ் கிளாசி பிகேஷன், புவித்தோற்றத்தை டிஜிட்டல் இமேஜ் தொழில்நுட்பமாக்குவது உள்ளிட்ட பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது சிப்ரோ. SONA Signal and Image Processing Research. எலக்ட்ரானிக் தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தி நுண்ணிய தகவல்களை அறிய உதவும் ஆய்வுகளையும் மேற்கொண் டுள்ளது. இது குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள பல நிறுவனங்களுடன் ஒப்பந்தமும் செய்து கொண்டுள்ளது.

## பெயர் ஒன்றே போதும் செயலை அறிவிக்க...


"சமூகப் பொறுப்பு - கல்வியின் ஒரு பாடத் திட்டமாக இருக்க வேண்டும் என்பது எங்களின் பேராசை. அதை நிறைவேற்றவே... சோனா தொழில்நுட்பக் கல்லூரி அரசு மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களோடு கைகோத்து 'சமூகப் பொறுப்பு திட்டம்' என்ற ஒரு பிளானை 2007ல் தொடங்கினோம். இந்தப் பெயரே எங்கள் செயலை அறிவித்துவிடுகிறது.

ஒவ்வொரு தனி மனிதனுக்கும் இருக்க வேண்டிய சமூகப் பொறுப்பு என்ன? அதை எப்படிச் செயல்படுத்துவது என்பதை அறிவித்து அதை நடைமுறைப்படுத்துகிறோம். சேலம் ஜவுளி நகரமாக இருப்பதால் அதைக் கவனத்தில் இருத்தி அதைச் சார்ந்த பயிற்சியை, வேலைவாய்ப்பை உருவாக்கித் தருகிறோம். இதைச் செயல்படுத்த அது குறித்தான விழிப்புணர்வை முதலில் உருவாக்க வேண்டும் - விதைப்பதற்கு முன் நிலத்தைப் பண்படுத்துவதுமாதிரி. அதை சோனா மாணவர்கள் பொறுப்பேற்று செஞ்சிக்கிட்டு வர்றாங்க.

பொருளாதாரத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களும் மாற்றுத் திறனாளிகளும் அதிகம்பேர் பயனடைந்து வர்றாங்க. குறிப்பாக எங்க சேலம் மாவட்ட மக்கள் பெற்ற பயன்பாடு அதிகம். நாம மட்டும் வளர்ந்தா போதுமா? நம்ம மக்களையும் சேர்த்து வளர்த்தாதானே அது முழுமையாக இருக்கும். எங்களின் சேவையை, முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் பாராட்டியதுதான் என்றும் அழியாத விருது'' - என்கிறார் சோனா கல்லூரியின் சமூக சேவை மையத்தின் திட்ட இயக்குனர் ரகுபதி.

சேலம்-நாமக்கல் மாவட்டப் பகுதிகளில் மரவள்ளி எனப்படும் குச்சிக் கிழங்கு விளைச்சல் மிக அதிகம். இரு மாவட்ட விவசாயிகளுக்கும் தோள் கொடுத்து வரும் பணப்பயிர் இது. விளைச்சல் அதிகம் என்பதாலே, சாகோ மில்ஸ் எனப்படும் குச்சிக் கிழங்கு அறவை மில்கள் இங்கு வெகு அதிகம். இதிலிருந்துதான் ஜவ்வரிசி உற்பத்தி செய்யப்படுகிறது. இப்


## ஜவ்வரிசிக்கு வந்த (சே)சாதனை!



பகுதி விவசாயிகளுக்கும், சாகோ மில்களுக்கும் பயனளிக்குமாறு என்ன செய்யலாம் என யோசித்தது நிர்வாகம். SONA Science Centre for Testing and Applied Research உருவாக்கப்பட்டது. சாகோ மற்றும் ஜவ்வரிசி பொருட்களின் தர ஆய்வு, நீர் மற்றும் கழிவுகள் ஆராய்ச்சி, என பல ஆராய்ச்சிகளை இம்மையம் மேற்கொண்டு சான்றிதழ் தருகிறது. இம்மையம் அரசால் அங்கீகரிக்கப் பட்ட தர ஆய்வு மையமாகச் செயல்பட்டு வருகிறது.

# சூப்பர் சேம்பியன்ங்கோ!





"சும்மா விளையாடாதீங்க'னு எங்க கேம்பஸ்க்குள்ளார வந்து யாரும் சொல்லிட முடியாது. மைதானத்துல வந்துட்டா விளையாடித்தான் ஆகணும். உடற்பயிற்கூடத்து (ஜிம்) உள்ளார நுழைஞ்சா 'ஜிம்' செஞ்சுதான் மூச்சு வாங்கணும். நீச்சல் குளத்தைப் பார்த்துட்டா... அந்த நீல நிற நீரலைகள்ல மயங்கி, அதுல எறங்கி நீந்தியே தீரணும். எத்தனை மணி நேரம் நீந்தினாலும், ஆசை மட்டும் தீரவே தீராது. கிரிக்கெட் மைதானம், பில்லியர்ட்ஸ் கோர்ட், வாலிபால், பேஸ்கட் பால் மைதானம், கோல்ஃப் பசுமைத் திடல் என அத்தனை விளையாட்டு அம்சங்களும் நிறைந்து எங்களின் **ஸ்போர்ட்ஸ் ஆபீசர் நித்யானந்தம்** வழிகாட்டுதலுடன் இயங்கி வருகிறது விளையாட்டுத் துறை!" எனக் குறிப்பிடுகிறார் அதன் பிசிகல் டைரக்டர் சா.விஜி எழிலரசி.

"இத்தனை அம்சங்கள் இருந்தும் பெருசா என்ன சாதிச்சிருக்கு... சோனா தொழில்நுட்பக் கல்லூரி விளையாட்டுத் துறை?"னு நாம சும்மாதான் வாயைக் கிளறினோம். ஸ்கிப்பிங் ரோப் ஸ்லிம் மங்கையெனத் தரைக்கும் வானுக்குமாகத் தாண்டிக் குதித்து, கார்த்திகை தீப அவல் பொரி ரேஞ்சில் பொரிந்து தள்ளி விட்டார்.



"கல்லூரியின் மொத்த மாணவர்கள்ல முப்பது சதவிகிதம், ஏதேனும் ஒரு விளையாட்டில் ஈடுபட்டிருப்பார்கள்.



மகிழ்ச்சியான செய்தி ஆகும்.

ஐ.டி. இறுதியாண்டு மாணவர் எம்.முத்துக்குமரன், மங்கோலியாவில் நடைபெற்ற ஆசிய நாடுகள் அளவிலான பளு தூக்கும் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்று வந்துள்ளார். Fencing எனப்படும் வாள் வீச்சு விளையாட்டு என்பது, சோனா தொழில்நுட்பக் கல்லூரியில் சிறப்பானது ஆகும். கடந்த இரண்டு வருடங்களாக ஆண்கள் வாள் வீச்சு மற்றும் பெண்கள் வாள் வீச்சு என இரண்டு பிரிவிலுமே தொடர்ந்து இன்டர் ஜோனல் (Inter Zonal) சேம்பியனாக நீடிக்கிறது. தேசிய அளவி



லான வாள் வீச்சுப் போட்டியில் ஒரு ஆணும், ஒரு பெண்ணும் கலந்து கொள்ளுமளவுக்கு முன்னேறிச் சென்றுள்ளனர். மெக்கானிக்கல் இஞ்சினீயரிங் இறுதியாண்டு மாணவரான எம்.தினேஷ், அகில இந்திய அளவில் வாள் வீச்சுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தொடர்ந்து ஐந்து வருடங்களாக சேம்பியன் பட்டம் வென்று, அதற்கான ஷீல்டினைத் தன்னகத்தே தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டுள்ளது, சோனா தொழில்நுட்பக் கல்லூரி விளையாட்டுத் துறை. சூப்பர் சேம்பியன்ங்கோ!'' என்றார் இடைவிடாமல் மூச்சு வாங்கிப் பாடி நிற்கும் எஸ்.பி.பி. போல.

2009-10 கல்வியாண்டில் கோவை மண்டல பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளில் சேம்பியன்ஷிப் பட்டங்கள் வென்று வந்துள்ளது சோனா. சில குறிப்பிட்ட விளையாட்டுப் போட்டிகளில், இதர கல்லூரியினர் 'சோனா டீம் வந்திருக்குல்ல. அதுக்குதான் கேடயம். நமக்கு இப்ப போதாத டயம்!'னு டயலாக் சொல்லிக்கு வாங்களாம்! அந்தளவுக்கு சோனா டீம், சொல்லி வெச்சு அடிக்கிற கில்லி டீம்.

கோவை மண்டலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் இருந்திருக்கின்றன. அவைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளில், 2009-2010ல் அத்லெடிக்ஸ் போட்டிகளில் மண்டல அளவில் சேம்பியன். பேட்மிட்டன் விளையாட்டில் பெண்கள் அணி வின்னர். ஆண்கள் அணி ரன்னர். பூப்பந்து விளையாட்டில் ஆண்கள் அணியும் வின்னர் பெண்கள் அணியும் வின்னர். கூடைப்பந்து போட்டியில் சோனா பெண்கள் அணி 2005 லிருந்து 2010 வரை தொடர்ந்து வின்னர் எனப் பரிசைத் தட்டிக்கொண்டு வருவது கூடைநிறைய









# நவீன திருமூலர்கள்..

**தி**ருமந்திரம் 121-வது பாடலில்...குடத்தில் நீர் ஊற்றிக் காட்டை வளர்க்காதவர்கள் நரகத்தில் நிற்பார்கள்னு 'கரத்தால் நீர் சுட்டி காவை வளர்க்கார், நரகத்தில் நிற்றிரோ நல் நெஞ்சிரே!' என்று சொன்ன திருமூலர் வாக்கு, மனத்தில் பதிந்து போனதால் மரங்கள் மூலம் நாடு முழுதும் காட்டின் குளுமையைக் கொண்டு வரவும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் சோனா மாணவர்கள் ஏற்படுத்திய இயக்கம் தான் டிரம்மர்ஸ். சோனாவின் NSS மாணவர்கள் மற்றும் டிரம்மர்ஸ் மாணவர்கள், சேலத்தின் பசுமைக்கு முக்கிய காரணம். சோனா ஸ்டூடண்ட்ஸ் எல்லாம் நவீன திருமூலர்கள் தான்.

## ஒரு ஃபோன் போதும்... ஓடி வர்றோம் நாங்க!



**“எ**ப்போ... யாருக்கு... எவ்வளவு... என்ன க்ரூப் இரத்தம் வேணும்... ஒரு ஃபோனைப் போடுங்க... ஓடி வர்றோம்'' என்று சொல்கிறார்கள் சோனா ஸ்டூடண்ட்ஸ். சுமார் 500 கல்லூரி மாணவர்கள் எப்பொழுது கேட்டாலும் இரத்ததானம் அளிக்கத் தயார் நிலையில். ''எந்த ஆஸ்பிட்டலிலும் நீங்க விசாரிக்கலாம். ஒரே ஒரு கால் வந்தா போதும்... காலன் கிட்டே இருந்துகூட மீட்டிடுவோம்'' என்கிற இவர்களின் குரல் மனத்துக்குள் மகிழ்ச்சியாய் பாய்கிறது.



# வேலைக்கு இல்லை... வெயிட்டிங் லிஸ்ட்!





‘ஆள் பாதி... ஆடை பாதி என்பது பழமொழி. ஆடை நுட்பம் படி; இந்தா வேலையைப் பிடி’ என்பது புதுமொழி

ஆடை பற்றிய படிப்பை முடித்தால் உத்யோகத்தோடு முழு மனிதனாகி விடலாம். ஃபேஷன் டெக்னாலஜி படிச்சதும் வேலைக்குக் காத்திருக்க வேண்டாம். இந்தத் துறையில் சரியான நபர்களின் தேவை அதிகமாக இருக்கிறது என்பதுதான் 100% உண்மை. ஆடை வடிவமைப்பு மற்றும் ஜவுளித் தொழில் நுட்பம் தமிழகத்தில் குறிப்பிட்ட கல்லூரிகளில் மட்டுமே இருக்கிறது. அதில் சோனா தொழில்நுட்பக் கல்லூரி முதன்மையானது. இத்துறையை எடுத்துப் படித்தால் வேலைக்கு இல்லை வெயிட்டிங் லிஸ்ட் எனலாம். ஜவுளி சார்ந்த A to Z அத்தனை தொழில் நுட்பமும் இங்கு போதிக்கப்படுகிறது.

## நெக்ஸ்ட்..!



நதி மாதிரி நெக்ஸ்ட்... நெக்ஸ்ட்னு போயிக்கிட்டே இருக்கணும். இல்லேன்னா குட்டையாய்த் தேங்கிடுவோம் என்பதைச் சொல்லாமல் சொல்கிறது இந்தக் கல்வி நிறுவனம். அடுத்த தலைமுறைக்கான புதிய அதி நவீன மோட்டாரை உருவாக்கி, பல முன்னணி நிறுவனங்களின் பாராட்டைப் பெற்றவர் - மெக்கானிக் பிரிவில் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவர் நிர்மலேஷ் குமார். ''எங்களின் CADCAM சென்டர் விசேஷமானது. ரோபோக்களை உருவாக்குவதிலும் நாங்கதான் லீடிங். நெக்ஸ்ட் ஜெனரேஷனுக்கான மோட்டாரை வடிவமைத்து இருக்கிறேன். எங்க கலாம்ஜி என்னைப் பாராட்டினாரு. நெக்ஸ்ட் என்ன பண்ணலாம்னு யோசிச்சுட்டு இருக்கேன். இதற்கெல்லாம் சோனா நிர்வாகத்தின் உற்சாகமும் ஆதரவும்தான் அடிப்படை'' என்கிறார் ‘நெக்ஸ்ட்’ நிர்மலேஷ்குமார் (பட்டப் பேரு சரியா பிரதர்?).




# யோகம் தரும் யோகா

இங்கு படிக்கின்றவர்கள் சுதந்திரமா இயங்கணும். அதே நேரத்தில் ஒழுக்க முடனும் இருக்கணும்; சுறுசுறுப்பாகவும் செயல்படணும். இதுக்கெல்லாம் என்ன செய்யணும்? யோகாவும் தியானமும் கொண்டு வந்தா இதெல்லாம் வந்துடுமே. யோகா மாஸ்டர்கள் பேராசிரியர்கள், மாணவ மாணவியர் என அனைவருக்குமே யோகா கற்றுத் தந்தனர். தற்போது ஒவ்வொருவரும் வாய்ப்பும் நேரமும் கிடைத்திடும் போதெல்லாம் யோகாவும் - தியானமும் செய்து வருகின்றனர்.

# நாடுவீர் நாக்டெஸ்ட்!

"தொழில்நுட்ப மற்றும் கலை அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கென நடத் தப்படுவது நாக் டெஸ்ட். அகில இந்திய அளவில் மட்டுமல்ல; சர்வதேச அளவிலும் கவனம் பெறுவது. நாக் டெஸ்ட் நடத்துகின்ற பயிற்சி மற்றும் தேர்வு மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது சோனா.

எங்கு பயில்பவராக இருந்தாலும் அல்லது தேர்ச்சி பெற்றவராக இருந்தாலும் அவர்கள், பதிவு செய்து நாக்டெஸ்ட் எழுதலாம். அதனால் என்ன பயன்? தேர்வு முடிவு களை மதிப்பெண் பட்டியல், குறிப்பிட்ட மாணவ மாணவியரின் முகவரி உட்பட அனைத்து விவரங்களையும் வலைத்தளத்தில் வெளியிடுகிறது நாஸ்காம் (NASSCOM). அகில இந்திய மென்பொருள் தொழில்நுட்பக் கூட்டமைப்பு, நாக் டெஸ்ட்டினை நடத்து கிறது. வலைத்தளத்தில் வெளியாகும் மதிப்பெண் மற்றும் விவரங்களைக் கணித்து சர்வதேச, தேசிய அளவிலான நிறுவனங்கள் தங்களுக்குத் தகுதியானவர்களைப் பணியில் சேர்ந்துகொள்ள அழைப்பு விடுத்து ஏற்றுக் கொள்கிறது," என்கிறார் சோனா கல்லூரியின் நாஸ்காம் மைய ஒருங்கிணைப்பாளர் டாக்டர். சாந்தராஜா.



"முதலாமாண்டு ஸ்டூடண்ட்ஸ்களுக்கான முதல் நாள் வருகை சிறப்புக் கூட்டம், எங்கள் தொழில்நுட்பக் கல்லூரியில் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது; மகத்தானது.

அமர்ந்து கேட்கும் ஸ்டூடண்ட்ஸ் ஒவ்வொருவரும், ஏதோ மந்திரத்துக்குக் கட்டுண்டவர்கள் போல கூட்டத்தின் சொல் மழையில் நனைந்து போயிருப்பார்கள். பெற்றோர்களோ, தங்கள் கல்லூரிக் காலங்களில் இதுபோன்ற பொன்னான வாய்ப்பு இல்லாது போயிற்றே என்று வருத்தப்படுவார்கள். அந்தளவுக்கு முதல் நாள் கூட்டம், முத்தாய்ப்பானதாகும்.

கல்வி பயில்கையில் ஒரு ஸ்டூடண்ட் தமக்கு என்ன தேவையெனக் கேட்கிறாரோ, அதன் அவசியம் மற்றும் அடிப்படைத் தேவையுணர்ந்து உடனே பெற்றுத் தந்து அவர்களது தேவையைப் பூர்த்தி செய்துவிடுகிறது எங்கள் நிர்வாகம். வீட்டில் படிப்பதற்கு சிஸ்டம் வசதி வேண்டுமா? ஆராய்ச்சிக்காக வெளிநாடு சென்று வர வேண்டுமா? அவர்களின் முன்னேற்றத்துக்கான உதவிகளைத் தயக்கமின்றி செய்து தருகிறது சோனா. ஸ்டூடண்ட்ஸ் லெவலில் இதுபோன்ற நிறைய வசதிகளைக் கொண்டு வந்துள்ளது நிர்வாகம்.



அதுபோல, வேலை வாய்ப்புத் திறன் பயிற்சியும் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு, ஜெர்மன், ஜப்பான் மொழிப் பயிற்சியும் அவரவர் விருப்பம் அறிந்து சொல்லித் தரப்படுகிறது. இதனால் அவர்கள் உடனடி வேலைவாய்ப்புகளைப் பெறுகிறார்கள். அவர்களை சமூகத்தில் சிறந்த மனிதனாக வாழ்ந்து காட்டவும், இங்கு பல்வேறு கருத்தரங்குகளும், கலாசாரச் சொற்பொழிவுகளும் நடத்தப்படுகின்றன. இங்கு பயில்பவர்களுக்கு வேலை பெற்றுத் தருவது மட்டுமல்லாது, இந்தச் சமூகத்துக்கு உரிய மனிதர்களாக அவர்களை உருவாக்கி அனுப்புவதே எங்கள் நோக்கமாகும்.

இந்தக் கல்வி நிறுவனமானது தொழில்நுட்பக் கல்லூரியாக மட்டுமல்ல, வாழ்க்கைக்கான பயிற்சிப் பட்டறையாகவும் இயங்கி வருகிறது!'' என்கிறார் டீன் கே. கருணாகரன்.

# என்ன வேண்டும் கேள்!

– டீன் கே. கருணாகரன்

## Mou's - சாதனை

1. Infosys, 2. IBM, 3. CISCO, 4. Red Hat, 5. ISRO, 6. Sun 7.Vikram Sarabhai, 8. Nasscom, உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட மையமாக சோனா கல்லூரி விளங்கி வருவதுடன் அமெரிக்கா, இங்கிலாந்து, தாய்லாந்து, ஜப்பான், இத்தாலி உள்ளிட்ட நாடுகளின் சர்வதேச பல்கலைக்கழகங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (Mou's) செய்து கல்வி மற்றும் ஆராய்ச்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்தி, வெற்றி காண்கிறது.








''நாங்கள் அறிவித்த உடனே MCA துறையிலிருக்கும் 120 இடங்களும் உடனே நிரம்பிவிடும் அளவுக்கு சோனா MCA துறை நற்பெயரைப் பெற்றிருக் கிறது. அதற்குக் காரணம், இத்துறை தொடங்கப்பட்ட திலிருந்து இங்கு படித்த மாணவர்கள் அனைவரும் பெரிய நிறுவனங்களில் பணிபுரிகின்றனர். அன்றிலிருந்து இன்று வரை 100% Placement என்பதற்கு முழு உத்தர வாதம் தருகிறோம். வந்தார்கள்; வேலையை வென் றார்கள் என்பது எங்களின் துறை பற்றிய வெளி யார்களின் விமர்சனம். தொடர்ந்து 3 Batch-லும் 100% Placementல் MCA முன்னணியில் இருக்கிறது.'' என் கிறார் MCA துறைத்தலைவர் காதர் நவாஸ்.

# வந்தார்கள்... வேலையை வென்றார்கள்!

''சோனா கல்லூரியின் முக்கிய அங்கம் MBA துறை. மேலாண் மைக் கல்வி அளிப்பதில் அகில இந்திய அளவில் மிகச்சிறந்த கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. IIM போன்ற மேலாண்மைக் கல்வி நிறுவனங்களுடன் போட் டியிடும் அளவுக்கு சோனா வின் மேலாண்மைத்துறை முன்னேறியிருக்கிறது. ஆரம்பம் முதலே நிர்வகிக் கும் திறன், முடிவெடுக்கும் திறன், தம் கருத்தை உறுதியாக முன்னிறுத்தும் தன்மை ஆகிய வற்றைக் கற்கும் காலத்திலேயே அளித்து Marketing, H.R, Finance போன்ற பல்வேறு உட்பிரிவுத் துறைகளிலிருந்து தேர்ந்தெடுத்துப் பிரகாசிக்க வாய்ப்பளிக்கிறோம். கம்பெ னியை நிர்வகிக்க அல்ல; கம்பெ னியையே அடுத்த கட்ட வளர்ச் சிக்கு நகர்த்தும் அளவுக்குத் திறன்பெற்ற மாணவர்களை உருவாக்குவதுதான் எங்கள் துறையின் தனிச்சிறப்பு'' என் கிறார் MBA துறைத்தலைவர் சேட்டன் பஜாஜ்.





# இலவசமா? மென்பொருளா?

உலகின் அனைத்துவிதமான மென் பொருட்களையும், எவ்விதக் கட்டணமும் இன்றி இலவசமாகப் பயன்படுத்தும் தொழில்நுட்பம் சார்ந்து இயங்கி வருகிறது இம்மையம். SONA Free Open Source Software என்பது இம்மையத்தின் பெயர். நவீனத் தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தி நிறுவனங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது, ஃப்ரீ ஓபன் சோர்ஸ் சாஃப்ட்வேரை மாணவ மாணவிகள் பயன்படுத்துவது குறித்தான விழிப்புணர் வினை ஏற்படுத்துதல் இம்மையத்தின் பணிகள். ஓபன் சோர்ஸ் என்கிற பெயரில் 2011, ஜனவரியிலிருந்து இலவச முதல் தமிழ் மாத இதழ் இங்கிருந்து வெளியிடப் பட உள்ளது. இலவச மென்பொருளில் அப்படி என்ன விசேஷம்? டாக்டர் அப்துல் கலாம் கூறியுள்ள நான்கு வகைச் சுதந்திரம் அதனுள் அடங்கியுள்ளது. யாரும் கேள்வி கேட்க முடியாது. பணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. எப்படி வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம். யாருக்கு வேண்டுமானாலும் தரலாம் இலவசமாக. இத்தனை நன்மைகள் இருக்கும் போது இனிக்கத் தானே செய்யும்? என்கிறார் இம் மைய ஒருங்கிணைப்பாளர் டேவிட்.

★ ஆண்டுதோறும் ஆசிரியர் தினத்தன்று ஆசிரியர்களுக்கு சிறப்பு வெகுமதி அளிக்கப்படும். அது மட்டுமின்றி 5,10,15... என ஆசிரியர்களின் திருமண நாளை (Wedding Day) சிறப்பாகக் கொண்டாடுவது சோனாவின் பாணி.

கேண்டீனிலும் ஹாஸ்டலிலும் அசைவ உணவு கிடையாது. முழுக்க சைவ உணவுதான், இக்கல்லூரியில். கூல்டிரிங்க்ஸிலும் கூட கொஞ்சம் ஸ்ட்ராங்கான பெப்ஸி, கோக் இங்கே கிடைக்காது. கேண்டீனில் மதிய சைவ சாப்பாட்டை ரூ.15க்கு முடிச்சிடலாம். அப்புறமென்ன? தரமும் விலை மலிவும் கொண்ட நல்ல உணவு வேளாவேளைக்குக் கிடைச்சா படிப்பு புத்தியில் தானா புகுந்துடப் போகுது.



SONA COLLEGE OF TECHNOLOGY

# 4 முறை பாராட்டிய அரசு!

நோய் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு முகாம்களை கிராமம்தோறும் நிறுவுதல், எய்ட்ஸிலிருந்து பாதுகாப்பு மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மீட்புப் பணி சேவை எனப் பல்வேறு சமூக சேவைகளுக்காகத் தமிழக அரசின் சிறந்த சேவைக்கான விருதினை நான்கு முறை சோனாவின் NSS பெற்றுள்ளது.



# எது ஒரிஜினல் வளர்ச்சி?

மனித உடம்புல ஒரு உறுப்பு மட்டும் வளர்ந்தா அது வீக்கம். ஒட்டுமொத்தமா வளர்ந்தாதான் அது வளர்ச்சி... ஆரோக்கியம். சேலத்தில் சோனா தொழில்நுட்பக் கல்லூரி மட்டும் வளர்ந்தா போதாது; சேலம் மக்களும் சேர்ந்து வளரணும் என்பதற்காக NSS, NCC, YRC, RRC உள்ளிட்ட 15 மாணவர் சேவை அமைப்புகள் இயங்கி வருகின்றன. சிறந்த சேவைகளை மேற்கொண்டு வரும் சோனா மாணவர்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கிராமங்களைத் தத்தெடுத்தல், விழிப்புணர்வு முகாம் நடத்துதல் உள்ளிட்ட சமூகப் பணியை ஜனாதிபதி அப்துல் கலாம் பாராட்டியது சோனா தொழில்நுட்பக் கல்லூரிக்கு கிடைத்த அழியாத அற்புத விருது'' என்கிறார் கல்லூரியின் P.R.O ஆர்.முத்துக்குமார். அவர் கல்லூரியின் பெருமையைப் பேசப் பேச தன் மகனை சான்றோன் எனக் கேட்ட பெற்றோரின் பெருமிதம் முகத்தில் மிளிர்கிறது.

''வெளிநாட்டுத் தொழில்நுட்ப வல்லுனர்கள் மட்டுமின்றி பிரபல கம்பெனிகளின் எச்.ஆர். மேனேஜர்கள், சாதனையாளர்களை அழைத்து வந்து சோனாவில் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம். மாணவர்களுக்குத் தேவையான தன்னம்பிக்கை கூடுவதற்கு மட்டுமின்றி மொழித்திறன் வளர்ச்சிக்கும் பயிற்சி தருகிறோம். ஆசிரியரும் மாணவர்களும் எங்கள் இரு கண்கள்'' என்கிறார் மனித வள மேம்பாட்டுத் துறை மேலாளர் சண்முக சேகர்.

அதிக அளவில் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும் பெங்களூரு இன்போசிஸ் நிறுவன அதிகாரி திரு.நரேந்திர மேடப்பா வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிகள் தொடர்பாக மாணவர்களிடம் சிறப்புரை ஆற்றுகிறார்.



எழுத்தாக்கம்:
அமிர்தம் சூர்யா,
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

# SONA MBA

Two Years. Not just to be informed...
but to be inspired!









## Advantage SONA

### A few reasons for choosing the Sona MBA

One among **Top B-Schools** selected by **Dalal Street Magazine** 2010.

Recognized as **23rd** Top B School in **India** & **9th** Top B-School in **South Zone** by **SiliconIndia.com** in 2010.

Rated in **"A-Category"** by **Business India** B-School Survey 2009.

Ranked **89th** place in **Overall Ranking**, **9th** in **Infrastructure** and **63rd** in **Placement** by **Businessworld** B-School Survey 2010.

Ranked **26th** place among **Promising Top B-Schools** in **India** and **6th** place among **Top B-Schools** in **Tamilnadu** by **Competition Success Review** India best B-Schools Survey 2009.

Graded **A+** in the **best B-Schools** in **India** by **Just Careers Magazine**.

Ranked **59th** in **Total Placement Activities Index (TPAI)** by the **Human Factor** magazine.

The dynamics of today's global business environment demands new and different skills for success. At Sona, we realize that a judicious combination of academics and practical learning are really vital to preparing oneself for the 'real world'.

Sona School of Management provides an environment that encourages students to cultivate and hone skills that are seldom learnt through textbooks. The learning experience at Sona helps students to develop creativity, entrepreneurship, decision making - essential tools needed to be competitive in today's rapidly changing corporate world. Consequently, Sona's MBA program provides students with the ability to create innovative business solutions that are different and better.

***Sona School of Management** -*
***a home to the next generation of business leaders.***

**SONA**
SCHOOL OF MANAGEMENT
(A Unit of Sona College of Technology)

Thiagarajar Polytechnic Road,
Salem - 636 005. Tamilnadu.
Ph : 0427-4099977
Fax : 0427- 4099990.
Email : mba@sonamgmt.org.

www.sonamgmt.org

**At Sona, Learning is a Celebration!**

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57* Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11* Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11* Registered as a Newspaper in Srilanka.



வேளுக்குடி

## ஸ்ரீ. உ.வே. கிருஷ்ணன் ஸ்வாமி

வழங்கும்

# ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம

# 2011 நாட்காட்டி

- ஸஹஸ்ரநாமத்தின் உயர்ந்த கருத்துக்களை 12 பக்கங்களில் வண்ணப் படங்களுடன் விளக்கும் காலண்டர் (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்)
- இத்துடன் ஆயிரம் திருநாமங்களுக்கு சுருக்கமான பொருள் எழுதப்பட்ட புத்தகம்
- ஒவ்வொரு திருநாமத்தையும் விளக்கும் வேளுக்குடி ஸ்ரீ உ.வே. கிருஷ்ணன் ஸ்வாமியின் உபந்யாஸ ஒலித்தகடுகள் (160 மணி நேர தமிழ் சொற்பொழிவு கொண்ட 2 mp3 CDக்கள்)

அனைத்து நன்மைகளையும் தரும் கலியுக தர்மமான நாம ஸங்கீர்த்தனத்தின் இன்றியமையாமையை அனைவரும் அறிவதற்காக ரூபாய் ஆயிரம் மதிப்புள்ள மேற்கண்ட அனைத்தும் தற்போது முன்பதிவு செய்பவர்களுக்கு

**₹150/-க்கு அளிக்கப்படுகிறது.**

**உங்கள் ஊரில் முன்பதிவு செய்ய முகவரியை அறிய தொடர்புகொள்ளவும்**

ரூபாய் 80/-செலுத்தி 2010 டிசம்பர் 10ம் தேதிக்குள் முன்பதிவு செய்துகொள்ள முகவரி:
**கிஞ்சித்காரம் ட்ரஸ்ட், 6, பீமஸேனா கார்டன் தெரு, மயிலாப்பூர், சென்னை 4,**
**தொலைபேசி: 044 - 2499 2728**
அல்லது **98410 88444 என்ற எண்ணுக்கு உங்கள் ஊர் பெயரையும் தேவையான காலண்டர் எண்ணிக்கையும் SMS செய்யவும்.**

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11" Licensed
post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11" Registered as a Newspaper in Srilanka.

